VÎRAPATNI

(KOVALAN KATHAI)

THIRD EDITION

AUTHOR
D. SUBBIAH PILLAI,
ALANGADU, P.O.
MUTUPET S.I.Rv.

Copy-right

Rs. 1—8—0

சு. அ. இராமசாமிப்புலவர்.
கருப்பக்குளர். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

வீரபத்தினி.

சென்னை, சிலோன் துணைத்தனத்தார் அங்கீகரித்தது.

வீரபத்தினி

(கோவலன் கதை.)

சு. அ இராமசாமிப்புலவர்.
கருப்பக்கினர். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

முன்றாம் பதிப்பு.

ஆண்டோன் :

சு. சுப்பையா பிள்ளை,

ஆலங்காடு போஸ்டு,

முத்துப்பேட்டை வழி

1928

சுபிஷை] [ஒரு ரூபா.

FOREWORD

BY

M. R. Ry. S. Anavaratavinayakam Pillai,

Avl., M. A., L. T.

Lecturer in Tamil, Ceylon University College, Formerly Chairman, Board of Studies in Tamil and Editor, Tamil Lexican, University of Madras.

I have been asked to write a foreword to the **Virapatni**, the story of Kovalan-Kannaki, and I do so with pleasure. The story is an ancient one quite familiar to all Tamils, and was first recorded in the famous Tamil epic of the Anklet, **Silappadhikaram**. There is a later ballad-like composition known as Kovalan-Katai and fathered on Puhalendi. In recent times the story has been dramatised for stage purposes by several writers who have freely altered it to suit their individual tastes. There are also some abridgments of the **Silappadhikaram** in Tamil prose, like the **Kannaki** and the **Silappadhikara-k-Katai**. The **Virapatni** also professes to be a prose version of the **Silappadhikaram** but appears to me to excel others in certain important respects. In the first place, it is a closer version of the epic. Then quotations

from the original are more frequent and it would appear some taste has been displayed in the choice of the lines quoted. Another feature which is peculiar to this book is the attempt at elaborate narration of the stories that are merely referred to or mentioned briefly in the original. Thus, the book is no doubt a useful addition to the already existing literature dealing with the Kovalan-Kannaki story. I have reason to think that the author Mr. D. Subbiah Pillai has been engaged in writing this book for sometime, and find evidence in it to say that he has made a very careful study of the original epic. The book has been written in elegant Tamil and furnished with a glossary of difficult words and explanatory notes on proper names. I would recommend it safely for use in High School and College classes as a Tamil text book for detailed or non-detailed study.

S. A. Vinayakam Pillai,
LECTURER IN TAMIL,
Ceylon University College.

Colombo,
17th April, 1926.

முகவுரை.

கற்பின் திட்பமும் ஒழுக்கத் திறனும் வினையின் வலியும் பிறவும் மருவிய **வீரபத்தினி** கதை எல்லாச் சுவைகளும் நிரம்பியது; **கண்ணகி—கோவலன்** வரலாற்றைக் கூறுவது. கண்ணகி, தன்னுடைய கற்பின் வன்மையாற் காட்டிய வீரத்தைப் பாராட்டி., **வீரபத்தினி** என்னும் பெயர், அத் தெய்வக் கற்பிணைக்கு முன்னோரால் இடப்பட்டது. இக் கதை நிகழ்ந்த காலத்திலேயே இருந்த **இளங்கோவடிகள்,** இதனைச் **சிலப்பதிகாரம்** என்னும் பெயரால் தேனினும் பாகினும் இனிக்கும் மதுரமொழிகளை அடுக்கிப் பாடியருளினர். மேன்மைசான்ற ஆசிரியராகிய அவ் இளங் கோவடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எழுதப் பெற்றது இவ் **வீரபத்தினி.**

காவ்வாற்றலும் கலைச்சிறக்க, மெய்ம்மையும் தெய்வ மும் வாய்ந்த, **கண்ணகி கதை** தமிழுலகத்து நன்கு பரவி விளங்கி யென்பது ஒருதலை. தமிழ்நாட்டிலே கடைக்கழகம் தமிழ்மக்களாற் பொன்னிலும் மணியிலும் போற்றப் தக்கதும் ஆகிய இந்த அருமைபெரும் சரிதை அங்ஙனம் பரவாததை பண்டிள்ளோர் உளைகளை பெழுதிப் பரப்பாமை யாற் கேடாகும்.

இச் சிறந்த கதையை மாணவர்களும் பிறரும் எளி திற் கற்றறியும் பான்மையில் வெளிப்படுத்த வேண்டு

மென்னும் போவா இனத எழுதும்படி என்னைத் தூண்டிற்று.

எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் இலக்கணக்குறிப்புகள் பலவற்றை இயன்றமட்டில் விளக்கி, மூலத்தை தெளிவுபடுத்தி நடையில் எழுதியிருக்கிறேன். இதில், சிலப்பதிகாரத்திலிருந்தெடுத்த, இனிமையாகவும் எடுத்துக்காட்டாகவும் உள்ள, பல அடிகள் ஆங்காங்கே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து வீரபத்தினியை வழுத்துங்காலத்து அடியேன்பால் அன்புபாராட்டி, ஐயங்கள் தீர அறிவுறுத்தியும், ஒப்பு நோக்கியும் பேருதவி செய்த பெருந்தகை ஸ்ரீமான் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை (எம். ஏ. எல். டி.,) அவர்களுக்கு அடியேன் செய்யும் கைம்மாறு என்றென்றும் நன்றி பாராட்டிப் போற்றுவதே.

எனது அறிவுக் குறைவால் இதில் எதேனும் பிழைகள் நேர்ந்திருத்தல் கூடும். அவற்றை அறிஞர்கள் எனக்குத் தெரிவிப்பார்கள் என்றும், அங்ஙனம் தெரிவிப்பவைகளை அன்புடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக் கொள்ளலாகும் என்றும் எதிர்பார்த்திருக்கிறேன்.

சாதி மதம் முதலான வேற்றுமைகளின்றி, தமிழ் கற்றார் எல்லோருக்கும் பயன் தரத்தக்க இக்கதை யாவரிடத்தும் பரவி நிலவும் வண்ணம் திருவருள் கூட்டுவதாக.

வி. கோ.

உ

இராமநாதபுரம் சமஸ்தான வித்வானும்

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய,

ஸ்ரீமான்.

சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள் இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

கற்பினுக் கரசி யாய கண்ணகி சரிதந் தன்னை
யற்புட னுய்ந்து சென்றே னுமெனக் கற்றோர் கொள்ளப்
பொற்புற வியற்றி யீந்தான் புவிபுக ழாலங் காட்டுக்
கற்பகச் சிதம்ப ரேந்தான் கழலெழு தியனூ றேர்ந்தோன்.

கங்கையின் குலத்தோன் கற்றோர் களுக்கெலா மினிய நண்பன்
திங்களங் கண்ணி வேய்ந்த சிவபிரா னடியார்க் கன்பன்
மங்கள சுகுண னெந்த வர்த்தகத் திறுஞ் சிறந்தோன்
எங்கள்கண் மணிக ளாக இலங்கு சுப் பையை வேளை.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரீட்சகரும்
"மெய்யல்லினவிலக்கம்" நூலாசிரியரும்
யாழ்ப்பாணம்
பரசமயக்வாக் காலஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய

ஸ்ரீமான்.

க. சு. நவநீதகிருஷ்ண பாரதி அவர்கள்

பாடியளவை.

நீணி காதற் கற்புயர் வீரம்
நிகழ்த்தழுத் தமிழ்நடை யினிய
பேரரு ளாட்டி முன்னலங் காட்டும்
பெருமைசால் சிலப்பதி காரச்

சாமிஃ தெனத்தேன் றெளிவெனத் தமிழின்
தழைவென யாவருஞ் சாற்ற
வீரபத்தினிப்போர் பெறுமுரை நூலை
மேதினிக் களித்துவாழ்ந் தனனே.

ஆங்கையங் குலத்தை கலந்தரு மதியைக்
கன்னிமுத் தமிழெனு மகளை
மங்கலம் நிறைய மணந்தெளிர் தனத்தான்
மால்சிதம் பரனடி மனத்தான்
இங்கித கவிஞன் இறைவியை வழுத்தி
மியல்பிஞன் கற்றவ ரினத்தான்
தெங்குசூ ழாலங் காட்டினைத் தழைக்கச்
செயுமுகிற் சுப்பைய வேளை.

குலசேசகரன்பட்டினம், திருவள்ளுவமாலை,

திருவாளர்.

ப. இராமநாதபிள்ளை அவர்கள்

பாடியது.

நானிலம் புரக்கும் மூவேந்தர் நாட்டில்
இலகும் அறம்பொருள் இன்ப மென்னும்
மும்பாற் பொருளும் முறைமையி னமைத்துச்
செப்பத் தணிந்த சோர் இளங்கோ
அடிகள் தாமும் அப்பொருண் மருவ
இயலிசை நாடகம் என்னும் யாப்பால்
"அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவ தாகும்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்ப தாகும்"
சூழ்வினைச் சிலம்பு காரணமாக
நாட்டினர் சிலப்பதி காரந் தானை;

அதனையே, இற்றைஞான் றுள்ளார் இனிதினுணரப்
பாட்டிடை யிட்ட உரைநடை வகையால்
காட்டவர் மகிழ நற்றமிழ் மொழியால்
அடிகள் அடக்கிய அருங்கதை முழுவதும்
படியினில் விரித்துப் பயில்வோர் போற்ற
வீரபத் தினியெனும் விழைபெயர் நிறீஇ
ஆலங் காட்டினைக் கணிசெய் வேளாண்
தோன்றல் தலைசாமி ஈன்ற குரிசில்
ஆங்கிலப் பழக்கமும் அருந்தொழின் மாண்பும்
பாங்குற வமைந்தவென் பயனுறு தோழன்
தமிழ்நாற் றோய்ச்சியும் தக்க இசையும்
பொருந்த வாய்ந்த புலவர் தலைமணி
ஈந்தனன் உலகிற் கிசைசேர்
சுப்பையா பிள்ளை யெனுந்தா யோனே.

ஆலங்காடு தமிழ் வித்துவான்

திருவாளர்—வை. செல்லையாச் செட்டியார்

அவர்கள் பாடியவை.

பொன்னுரு மெனப்புலவர் போற்றிடமுத் தமிழிலங்கப்
புகலுஞ் சோர்
மன்னுக வருமினங்கோ வடிகளறம் பொருளின்ப
மருவ நீடும்
பன்னுரைநூற் செழுந்தமிழ்க்கோர் பாக்கியமா மெனைப்புகன்ற
பழுதி லாத
தன்னினில் நிலப்பதிகாரப்பெருங்காப் பியமதனைச்
சால்பி னுய்ந்தே.

ஒப்பரிதா யொளிர்வீர பத்தினியென் றபிதானம்
ஒளிரச் சூட்டி
யப்பெருங்காப் பியச்சார மிஃதெனப்புத் தமுதமென
அறிஞர் போற்றச்
செப்பரிதாம் உரைநடையாற் செய்யுளிடை யிட்டமைத்தே
செழுந்தே னென்ன
வைப்பெனயா வரும்புகழ மகிழ்ந்தளித்தான் யாவனெனில்
வகுப்பன் மாதோ.

செந்தமிழி னிலக்கியமு மிலக்கணமுஞ் செவ்வையுறத்
தேர்ந்த சீலன்
தந்திமுகன் அடிமறவாச் சற்குணனுங் கங்கைகுலத்
தலைவன் யாருஞ்
சிந்தனைசெய் திடுமால வனத்துறையுஞ் சிதம்பரவேள்
திருத்தாட் கண்பன்
சுந்தரஞ்சேர் துரைச்சாமி வள்ளலருள் கூட்டுபய
சுகுணன் மாதோ.

இலங்கை சர்வ கலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியரும்

சென்னை சர்வ கலாசாலைத்

தமிழ் ஆலோசனைச் சபை மாஜி அக்கிராசனரும்

அக் கலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியருமாகிய

ஸ்ரீமான். எஸ். அனவரத விநாயகம்பிள்ளை யவர்கள்

(எம். ஏ., எல். டி.) எழுதிய

ஆங்கில முகவுரையின்

மொழி பெயர்ப்பு

வீரபத்தினி (கோவலன்–கண்ணகி சரித்திரம்) என்ற இந்நூலுக்கு முகவுரை எழுதும்படி இவரை ஆக்கியோர் என்னைக் கேட்டுக்கொண்டார். மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் இம் முகவுரையை எழுதுகிறேன். இக்கதை புராதனமான தென்று தமிழ்மக்க ளெல்லோரும் நன்கறிவர். இதன் மூதனூல் புகழ்பெற்ற **'சிலப்பதிகாரம்'** ஆகும். 'கோவலன் கதை' என்றவோர் நூல் இடைக்காலத்திற் றோன்றிற்று. அஃது, புகழ்ந்திப் புலவரால் வரையப்பட்டிபற்றதெனக் கொள்ளப்படுகின்றது. தற்காலத்தில் இக்கதையைப் பலர் காடக ரூபமாகவும் எழுதி வெளியிட்டுள்ளார். அவர்க ளொவ்வொருவரும் தத்தம் மனதுக் கேற்றபடி கதையைத் திரித்து வரைந்திருக்கின்றனர். **'கண்ணகி,' 'சிலப்பதி காரக் கதை'** என்ற பெயர்களுடன் உரை நடையில் சிலப் பதிகாரம் சிலரால் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றது. **'வீரபத்தினி'** என்ற இந்நூலும் சிலப்பதிகாரத்தை உரை நடையில் எழுதிய தொன்றேயாயினும் ஏனை உரைநடை நூல்களினின்றும் இது அநேக விஷயங்களில் வேறுபாடுடையதா யிருக்கின்றது. **'வீரபத்தினி'** மூற்றிலும் மூதனூலைத்

தழுவியே எழுதப் பெற்றுள்ளது. இந்நூலாசிரியர் மூத
னூலின் சுவையை நன்கு அனுபவித்து, அதிலிருந்து அநேக
அடிகளைச் சந்தர்ப்பத்துக் கேற்றவாறு ஆங்காங்கு மாற்றுப்
புகுத்தி யிருக்கின்றார். இன்னொரு முக்கியமான விஷயத்தை
யுங் குறிக்க விரும்புகிறேன். மூதனூலிற் சுட்டப்பட்டுள்ள
கிளைக் கதைகள் இப்புத்தகத்தில் தெளிவாகவும், விரிவாக
வும் வரையப்பட்டுள்ளன, ஆகலின், கோவலன்—கண்ணகி
சரிதையைப்பற்றி வரையப்பட்டுள்ள புத்தகங்களிலெல்லாம்
'வீரபத்தினி' சிறந்து விளங்குவதா யிருக்கின்றது. இதன்
ஆசிரியர் திரு. து. சுப்பையா பிள்ளை யவர்கள் மூதனூலை
மிகவும் சாக்கிரதையாகப் படித்து ஆராய்ந்து, இப்புத்த
கத்தை வரைந்திருக்கின்ற தென்று நம்புகிறேன். தென்னிய
நடையில் அழகாக எழுதப்பெற்ற இந்நூலில் அருஞ்சொ
ல்லையும், பெயர் விளக்கமும் தொகுத்துச் சேர்க்கப்பட்
டிருக்கின்றன. இப்புத்தகத்தை ஹைஸ்கூல்களிலும், காலேஜ்
களிலும் பாடமாக வைத்தால் நன்மை யுண்டாகுமென்ற
முழு நம்பிக்கையுடன் சிபார்சு செய்கிறேன்.

(ஒப்பம்) எஸ். ஏ. விநாயகம் பிள்ளை

கொழும்பு
17-ஏப்ரல்-1926.

தமிழ்ப் போதகாசிரியர்,
சிலோன் சர்வகலாசாலை.

அபிப்பிராயங்கள்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்

"ஞானசாகரம்" 13-ம் பதுமம் 3, 4-ம் இதழ்களில் எழுதியது.

இற்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்குமுன் காவிரிப்பூம் பட்டினத்தி லிருந்த கண்ணகி என்னுங் கற்பிற் சிறந்த மாதும், அவள்தன் காதற் கணவன் கோவலனும் அடைந்த துயர வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை, அக்காலத்தில் உடனிருந்து கண்டுங் கேட்டும் அறிந்த **இளங்கோவடிகள்** என்னும் முத்தமிழ்வல்ல சான்றோர், அவ்வரலாறுகளைச் செந்தமிழ் வளருலகுரைப்பவும், அவைதம்மைமெய் பயில்வார் நெஞ்சங்கல்லாயிருப்பினும் அது நீராய்க் கரைந்து உருகவும் **சிலப்பதிகாரம்** என்னும் ஒப்புயர்வில்லாப் பெருங் காப்பிய மாக அருளிச் செய்திருத்தலைத் தமிழ்வல்லார் அனைவரும் நன்கறிவர். அக்காப்பியம் தூய விழுமிய பழந் தமிழ்ச் செய்யுட்களால் ஆக்கப்பட்டிருத்தலால், தமிழ்வல்லாரன்றி ஏனையோர் அக்காப்பியக் கதையைக் கற்று இன்புறுதல் இயலாது. ஆகவே, அக்காப்பியத்தில் அக்கதை அமைக்கப்பட்டிருக்கும் அழகையுந் திறத்தையும் மல்லிகாருன் மனிதில் உணரும் பாருட்டுத் திருவாளர் **து. சுப்பையா பிள்ளை யவர்கள்** அதனைத் தெளிவுரிய தமிழுரைக் கையடக்கமாக "வீரபத்தினி" என்னும் பெயரால் ஆக்கியிருக்கிறார்கள். இவ்வுரை நூலின் இடையிடையே முதல் நூலாகிய சிலப் பதிகாரத்திலுள்ள அகவல் பாடுதிய செய்யுட்களையும் வாய்ப்பாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இதனை ஆங்காங்கு உற்று நோக்க இதன் உரையமைப்பு செவ்வையான தமிழில் அழகியதாக எழுதப்பட்டிருத்தல் கண்டு மிக மகிழ்ந்தோம். தமிழ் மாணாக்கர்க்கும் பிறர்க்கும் இது பெரிதும் பயன்படுமென நம்புகின்றோம். இதன் சுற்றில் அருந்சொற்களுக்குப் பொருள் விளக்கமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

செந்தமிழ்.

(தொகுதி. 24. பக்கம்—298)

மதுரைத் தமிழ்ச் சங்கத்து வெளியீடு.

இது ஆலங்காடு ஸ்ரீமத். து. சுப்பையா பிள்ளை யவர் களாற் சிலப்பதிகாரத்தைத் தழுவிப் படிப்பவர் விருப்புறு மாறு இடையிடையே சிலப்பதிகாரச் செய்யுளடிகளையும் தொடர்புடையவாக மடித்து கோவலன் வாழ்க்கை, வழிச் செலவு, மதுரைச் செய்தி, சேர நாட்டில் தெய்வமாதல் என்னும் பகுதிகளை யமைத்து நன்கு யெழுதப்பட் டிருக் கின்றது. இதன் முதலிற் புகார்ச் சிறப்பு என்னும் பகுதி யில் புகார் நகரைப்பற்றி ஆங்காங்குச் சொல்லிய பல திறத்த சிறப்புக்களும் ஒருங்கு விளங்கும்படி தொகுத்தெழுதி யிருப் பது பாராட்டத் தக்கது.

நவசக்தி.

(1926. செப்டம்பர்—30)

திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள்.

வீரபத்தினி என்னும் பெயர் வாய்ந்த தமிழ் நூல் எமது பார்வைக்கு வந்தது. அந்நூலாசிரியர் திருவாளர் து. சுப்பையா பிள்ளை அவர்கள். கற்புக்கடவுளாகிய கண்ணகி வரலாறு பலரால் பலதிறமாக எழுதப்பட் டிருக் கிறது. அன்பர் சுப்பையாப் பிள்ளை அவர்கள் எழுதிய இந்நூல் எல்லாவற்றிலுந் தலைசிறந்து விளங்கக்கண்டு மகிழ் வெய்தினேம். படிப்போருக்குக் கருத்து எளிதிற் புலனு மாறு ஆக்கியோன் கொண்ட நடையும், இடையிடையே பொருந்திய விடங்களில் மூலத்தினின்றும் எடுத்தாளப் பெற்றுள்ள பாக்களின் அமைவும், பிறவும் இந்நூலின் சிறப்புக்கள் என்று கூறலாம். முதலில் பொலியும் பெயர் விளக்கமும் முடிவில் ஒளிரும் அரும்பொருள் விளக்கமும் படிப்போர்க்குப் பயனளிப்பனவாம். சிலப்பதிகாரம் பயில் வோர்க்கு இந்நூல் பேருதவி புரியுமென்பதில் எட்டினை யும் ஐயமில்லை. இந்நூல் ஒவ்வொரு கல்லூரியிலும் பாட புத்தகமாதல் எமது வேட்கை.

செந்தமிழ்ச் செல்வி.

சிலம்பு—4 பாகம்—6.

(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடு)

கண்ணகி சரித்திரம், சிலப்பதிகாரக் கதை எனப் பல நூல்கள் வெளி வந்திருப்பினும், சிலப்பதிகாரம் தமிழ்ப் பெருங் காப்பிய மாதலால் பல அறிஞர் வழியாக அதுவே திரும்பத் திரும்பப் பல முறைகளில் எழுதப்பெற்று வெளி வருவது போற்றற் பாலதே யாகும். இக்கதை பல தலைப் புக்களை யுடையதாயும் ஆங்காங்கே சிலப்பதிகாரத்தி லிருந் தெடுத்த, இனிமையாகவும் எடுத்துக்காட்டாகவு முள்ள பல அடிகளை யுடையதாயும், கற்றார் கல்லாதா ரிருவரும் எளி திற் கற்றுங் கேட்டுந் தெரியத்தக்க தெள்ளத் தெளிந்த நடையில் எழுதப் பெற்றிருப்பது பெரிதும் பாராட்டற் பாலது.

இதனைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் வாங்குவ தாயின் அதுவே ஆசிரியரை ஊக்கி இதுபோன்ற பல அரி உரைநடை நூல்களை எழுதுமாறு தூண்டுவதாகும்.

சுதேச மித்திரன்.

(10—7—1926.)

"வீரபத்தினி" .....இளங்கோவடிகளின் சிலப்பதி காரமான முதனூலைப் பின்பற்றி, கண்ணகிக்கு வீரபத்தினி எனும் பெயர் கொடுத்து வசன நடையில்.....எழுதப்பெற் றது.....ஆங்காங்கே வசன நடைக்கு இடையில் சிலப்பதி காரத்தினின்றும் அடிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப் புத்தகம் நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் மேல் வகுப்புகளுக்கு ஆரம்ப படிப்புக்கும் கல்லூரிகளில் சாதாரணப் படிப்புக்கும் தகுதியானது.

குமரன்—வாரப்பதிப்பு.

(8—7—26.)

இந்நூல் கற்புக்கரசி கண்ணகியின் திருக் கதையாகும். இக் கண்ணகியார் சோழநாட்டில் சீரும் சிறப்பும் வாய்ந்த காவிரிப்பூம் பட்டினத்தின்கண் அவதரித்தவர். அங்கர மாசாத்துவான் தன் அருமைச் செல்வன் கோவலனை மணந்து, பழவினையால் மதுரைமா நகரில் கணவனை யிழந்து பாண்டியன் பதியை எரித்த பத்தினிக்கடவுள். இவர் தம் சரிதையை, புலவர் திலகமும் கவிஞர் போரசுமான இளங் கோவடிகள் செய்யுள் வடிவமாக்கி நெஞ்சையள்ளும் சிலம் பாக இசைத்தருளினர். இக்காப்பியத்தினைத் தழுவி இவ் வசன நூல் எழுதப்பட்டுளது. இந்நூலில் இடையிடையே சிலப்பதிகாரத்தினின்றும் பல இனிமையான அடிகள் எடுத் தாளப்படுகின்றன. இது அருமம்பொருள் விளக்கத்துடன் அமைந்து விளங்குகின்றது. இச் சிறு நூல் தெள்ளத் தெளிந்தது தித்திக்கும நடையில் மாணைக்கார் மாணைக்கியர்கள் எளிதிற் கற்றறியும் வண்ணம் அழகாக இயற்றப்பட் டிருக் கின்றது.

தேசபக்தன்.

(கொழும்பு.)

திருவாளர் து. சுப்பையாபிள்ளை அவர்களால் எழுதப் பெற்ற "வீரபத்தினி" என்னும் சிறந்த புத்தகத்தைப் படிக்கும் பேறு நமக்குக் கிடைத்தது. பெரும் புலவர் "இளங்கோவடிகளால்" தேனினும், பாகினும் இனிக்கும் மதுரமொழிகளை அடுக்கிப் பாடி யாளப்பட்ட பஞ்ச காவி யங்களி லொன்றான சிலப்பதிகாரம் என்ற சிறந்த நூலின் வசனமே வீரபத்தினி. பல ரஸங்களும் வாற்றெடுத்தோடும்

சிலப்பதிகாரக் கதையை வசன நடையில் பலர் வரைந்துள்ளர். அவற்றிலெல்லாம் அன்பர் சுப்பையா பிள்ளை யவர்களது

உடன் கூறுகின்றேம். கேவலம் கதையை மட்டும் எடுத்துக் கூறவேண்டுமென்ற நோக்குடன் 'வீரபத்தினி' எழுதப்பட வில்லை. முதனூலான சிலப்பதிகாரத்தைக் கற்று அதன் தெவிட்டாத உருசியை யனுபவிக்கும் பெரும்பேறு பெறுத தமிழ் மக்களுக்கும் அவ்வின்பத்தை உள்ளபடி ஊட்ட வேண்டுமென்ற பெரு நோகுடன் 'வீரபத்தினி' வரையப் பட்டிருக்கின்றதினைக் கருதுகின்றேம். முற்றிலும் முத னூலைத் தழுவியே வரையப்பட்டிருக்கின்றது. 'சிலப்பதி காரத்' திலிருந்தெடுத்த, இனிமையாகவும், எடுத்துக் காட் டாகவும் உள்ள பல அடிகள் ஆங்காங்கே சேர்க்கப்பட் டிருக்கின்றன. இன்னனம் சேர்க்கப்பட்டுள்ள அடிகளை பொருக்கி எடுத்திருப்பதில் ஆக்கியோர் காட்டி யிருக்கும் திறன் மெச்சத் தக்கது. இனிய தமிழின் பாலையை யெல் லாம் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் பாலைப் பொருக்கிதமான சிலப்பதிகாரத்தை எடுத்தவோர் ஆர்வத்துடன், திரு சுப்பை யாபிள்ளை அவர்கள் கற்று அனுபவித்தாரா வென்பதைத் காட்டாகச் சேர்க்கப்பட்டுள்ள அடிகள் தெரிவன விளக்கா நிற்கின்றன. 'சிலப்பதிகாரத்' தில் குறிக்கப்பட்ட டுள்ள கிளைக்கதைகளை யெல்லாம் 'வீரபத்தினி' யில் விளக்கி வரையப்பட்டிருப்பதையும் நோபகப்படுத்த விரும்புகின்றேம். காடுகாண்காதைகளாலும் தக்க தமிழ்நிலமும் சிலாலும் பாடிய சிலப்பதிகாரத்தை நிகழ்ச்சிக்கேற்றதாகத் திரித்து வரையப்பட் டிருப்பதை நினைக்கும்போது கம்மனம் உண்மையில் மிகவும் வருந்துகின்றது. தமிழகத்தின் பண்டைச் சிறப்பையும் நம் முதாதையரின் மேன்மையான வாழ்க்கைதையும் பழுக்க வழக்கங்களையும் இல்லறத்தின் மாண்பையும் காட்டி காட்டி

பெண்களுடைய கற்பின் திட்பத்தையும் தமிழ் நாடு அக் காலத்தில் இராஜீய பொருளாதார சமூக விஷயங்களிலும் கைத்தொழில் வியாபாரம் முதலிய துறைகளிலும் எவ்வளவு மேம்பட்டு விளங்கிய தென்பதையும் உலகத்தாருக் கெடுத்து அறிவுறுத்திக் கொண்டிருக்கும் சிலப்பதிகாரத்தைத் திரித்துக் கூறி அழுகைக் குலத்து அலங்கோலப் படுத்துவது ஒரு பாவச் செயலென்று சொன்னாலும் மிகையாகாது. சரித்திர ஆராய்ச்சிக்கு ஒரு சிறந்த சாதனமாகத் திகழும் இந்நூலை அழகுபெற வசனத்தில் வரைவோர் தமிழ் மக்களுக்கு ஒரு ஒப்பற்ற கைங்கரியஞ் செய்தவர்களாவர் என்பது எமது துணிபு. படித்தவரும் பாமரரும் எளிதி லறியக்கூடிய ஆற் றொழுக்குப் போன்ற தெள்ளிய நடையில் (திசைச்சொற் களும் திரிபுகளும் கலக்கப் பெறுமல்) 'வீரபத்தினி' வரை யப்பட்டிருப்பதைக் குறிக்க விரும்புகிறோம்.

தமிழ் நாடு.

(28—11—26.)

ஐம்பெருங் காப்பியங்களுள் முதன்மையானதும் தமிழ் மக்களால் அதிகமாகப் போற்றப்படுவதும் சிலப்பதிகாரமே யாகும். சிலப்பதிகாரத்தின் சிறப்பை "நெஞ்சை யள்ளுஞ் சிலப்பதிகாரம்'! என்ற பகழ் மொழியில் பாரதியார் விளக்கி யிருக்கின்றார். கண்ணகியின் கதை பலரும் அறிந்தது. எவர் மனத்தையும் கவரவல்லது. கதை நிகழ்ச்சிகளும் கதை நடையும் படிப்பவர் மனத்தை ஒருங்கே ஈர்க்க வல்லன. வட்டில் கிடந்து மக்கிப்போக இருந்த காப்பியம் மகா மகோபாத்தியாய **உ. வே. சுவாமிநாதய்யரவர்கள்** தன் முயற்சியால் வெளியாயது. பின்னர் அறிஞர் பலரும் அக் காப்பியத்தை ஓட்டி உரை நடையில் கதை வரையலாயினர். இம் முறையில் வெளியிடப்பட்ட நூல்களில் "வீரபத்தினி"

யும் ஒன்று. ஸ்ரீமான். பிள்ளையவர்கள் கதையை அதிகமாக வளர்க்காமலும் அதிகமாகச் சுருக்காமலும் காப்பியத்தி லுள்ள கிளைக்கதைகளைச் சற்று விரித்தும் எழுதி யிருப்பது போற்றத் தக்கது. பிள்ளையவர்கள் தமிழ் நடை குற்ற மற்றது. பள்ளிச் சிறுவர்களுக்கும் தமிழ் கற்க விரும்பும் மாணாக்கர்களுக்கும் சிலப்பதிகாரத்தின் பெருமையை விளக் கிக் காட்ட இத்தகைய நூல்களே வேண்டும்.

தமிழன்.
(8—12—26.)

வீரபத்தினி என்னும் பெயரிய இந்நூலினை வரப்பெற் றேம். பண்டு தொட்டுத் தமிழ் முதுமக்களால் 'பத்தினிக் கடவுள்' எனப் போற்றி வரும் கண்ணகியின் காதையை இந்நூலின்கண் நன்கு விளக்கப்பட் டிருக்கின்றது. தமிழ் வளம் குறுகிநிற்கு மிக்காலத்தில் பஞ்சகாவியங்களிலொன்று கிய சிலப்பதிகாரம் எனும் சீரிய நூலையும் அதன் உரையை யும் துருவிக்காணும் ஆற்ற லற்றவராய்ச் சலிப்புற்றுச் சோர்ந்து நிற்கும் தமிழிளஞ் செல்வர்களுக்கு இந் நூல் பற்றுக்கோடாய் நின்று பேருதவியினருமென்று யாம் துணிவுறுகின்றோம். ஆகவின் தமிழராயினர் ஒவ் வொருவரும் இந்நூலை வாசித்துணர்தல் மிகுதியும் விரும்பத் தக்கதாம். தமிழ் நாட்டுப் பண்டுலக நிலையை யறிதற்கவா வுறும் சரித்திராசிரியர்க்கும் இந்நூல் பயன் தரத்தக்க தொன்றாம்.

பசுமலை அமெரிக்கன் மிஷன்
ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிட்
ஸ்ரீமான். நே. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் எழுதியது

தாங்கள் அதிக ஆராய்ச்சியுடன் பிரயாசை யெடுத்து நன்கு யெழுதி யிருக்கிறீர்கள்.....இத்தகைய புஸ்தகம் முன்னர் இல்லை.

கரந்தட்டான்குடி

திருவாளர், த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள்,
பி. ஏ., பி. எல். எழுதியது

தங்கள் புத்தகத்தைப் படித்தேன். ஐஸ்கூல் வகுப்பு களுக்கு மிகவும் பயன்படக் கூடியது.....

கரந்தட்டான்குடி

திருவாளர், ஐ. குமாரசாமி பிள்ளை யவர்கள், பி. ஏ., எழுதியது.

The book is well written in chaste tamil and may be prescribed as a text book for High Schools.

மைலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல் சீனியர் தமிழ்ப் பண்டிட்
ஸ்ரீமான். V. துரைசாமி ஐயர் அவர்கள் எழுதியது.

ஆலங்காடு ஸ்ரீமான். பண்டித த. சுப்பையா பிள்ளை யவர்கள் சிலப்பதிகாரக் கதையைத் தழுவி எழுதிய "வீர பத்தினி" என்னும் உரைநூல் ஒன்று வரப்பெற்று மகிழ்ந்

உரையிடை யிட்ட பாட்டிடைச் செய்யுளாக இளங் கோவடிகள் இயற்றிய சிலப்பதிகார நூலின் அடிகளை இடை யிடையே மடித்து எழுதிய இந்நூல் மாணவ மாணவியர்க் குத் தக்க தாகும். தமிழ் நாட்டில் கண்ணகி போன்ற கற்புடைத் தெய்வங்களை நாம் போற்றல் இன்றி யமையாத தாகும். இளைஞர், இத்தகைய வீரபத்தினிகளின் செயற் கரிய செய்கைகளைக் கூறும் உரை நூல்களைப் படித்து, பண் டைத் தமிழ்த் தாயரின் பெருமை நற்குணம் முதலிய வற்றை நன்கு உணர்ந்து இன்புறுவாராக.

இவ்வுரை நூலைக் கற்கும் மாணவர்க்கு, முதனூலைப் படித்து இன்புறுவதில் ஊக்கம் உண்டாதல் திண்ணம்.

இனிமையும் தெளிவும் வாய்ந்த ஸ்ரீமான் பிள்ளையவர்கள் இத்தகைய நூல்கள பலவற்றை எழுதி, தமிழறிஞர்க்கு இன்பம் ஊட்டுவாராக.

"ஏல விவசாயி" பத்திரிகாசிரியர், தேவாரம்

ஸ்ரீமாந். R. நாராயணசாமி அவர்கள் எழுதியது.

பிரியமுள்ள ஐயா!

ஒரு பத்திரிகாலயத்தி லிருந்து தங்கள் அருமை 'வீரபத்தினி' என்னும் புஸ்தகத்தை வீட்டிற்கு எடுத்து வந்தேன். நான் நோய் வாய்ப்பட்டுத் தற்சமயம் படுக்கையி லிருக்கினும் கையிலெடுத்த தங்கள் நூலைப் படித்து முடித்து விட்டுத் தான் உறங்கினேன். தங்கள் நடையும் கதையின் விஷயமும் என்னைச் சில தடவை கண்ணீர் விடும்படி செய் தது; ரத்தங் கொதிக்கும்படி செய்தது; பண்டைத் தமிழ் நாட்டு வீரத் தாய்மார்களை ஆழ்ந்து ஆழ்ந்து எண்ணும்படி செய்தது. அதிகஞ் சொல்லுதல் முகஸ்துதி செய்ததாகும். தங்கள் அரியநூல் எப். ஏ கிளாஸ் மாணவர்கட்குப் பாட மாக ஏற்படுத்தப் பட்டால் மிக்க நன்று யிருக்கும்.

பெயர் விளக்கம்.

கோவலன் :—காவிரிப்பூம் பட்டினத்துப் பிறந்த வணிகன்; சிலம்பு காரணமாக மதுரையில் வெட்டுண்டு வானகஞ் சேர்ந்தவன்; கதைத்தலைவன்.

கண்ணகி (வீரபத்தினி) :—கோவலன் மனைவி; காவிரிப்பூம் பட்டினத்துப் பிறந்து தனது வீரக்கற்பினால் மதுரை நகரைத் தழற்படச் செய்து, சேரநாட்டில் தெய்வமானவள்; கதைத்தலைவி.

மாசாத்துவான் :—கோவலன் தந்தை; காவிரிப்பூம் பட்டினத்துப் பெருஞ் செல்வன்; மதுரையில் மகன் மாண்டதறிந்து தன் செல்வங்களைப் பலர்க்கும் அள்ளி வழங்கிவிட்டுப் புத்தமதத் துறவியானவன்.

பெருமனைக்கிழத்தி :—கோவலன் தாய்; மகன் மதுரையில் மாண்டதற்காற்றாமல் ஏங்கி உயிர்விட்டுப் பின்பு சேரநாட்டில் அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்களிலொருத்தியாய்க் கண்ணகியின் தாயுடன் மறு பிறப்புற்றவள்.

மாநாய்கன் :—கண்ணகியின் தந்தை; மருமகன் மடிந்தமை கேட்டுச் செல்வங்களைப் பலர்க்கும் வழங்கிவிட்டுச் சமணத் துறவியானவன்.

மா —காவிரிப்பூம் பட்டினத்தாள்; சித்திராபதியின் மகள்; நாடகக் கணிகை; கோவலனின் காதற் பாத்திரை; கோவலன் மதுரையில் மாண்டதறிந்து மனம் வெறுத்துப் புத்தமதப் பிட்சுணியானவள்; தன் மகள் மணிமேகலையையும் பிட்சுணி ஆக்கினவள்.

வசந்தமாலை :—மாதவியின் தோழி, இவளைக் கூனி என்றுங் கூறுப.

தேவந்தி :—பாசண்டச் சாத்தன் மனைவி ; கண்ணகியின் பார்ப்பனத்தோழி ; கண்ணகிக்கு மதுரையில் நேர்ந்த பெருந்துயர்கேட்டு அவளைத் தேடிச்சென்று திருச்செங்கோட்டை யடைந்து கண்ணகி கோயிலிற் பூசை செய்திருந்தவள்.

வர், முதிர்ந்த தவ முடையவர் ; கண்ணகிக்கும் கோவலனுக்கும் வழித்துணையாகி, மதுரை சென்று ஆங்கு இருவருக்கும் நேர்ந்த தீமைகேட்டு, பட்டினி விரதத்தால் உயிர் துறந்தவர்; மதுரைசெல்லும்வழியில் வம்பப்பரத்தை யையும் வறுமொழியாளனையும் நரியாகச் சபித்தவர்.

சாணர் :—சிலம்பத்தில் தோன்றி கண்ணகி கோவலனைத் தேடி சென்ற கவுந்தி அடிகளுக்கு அறமுரைத்தவர்.

மாங்காட்டு மறையோன் :—இவர் கண்ணகி முதலாயினர் செல்கையில் எதிர்ப்பட்டு வழிக்கிற முரைத்தவர்.

கௌசிகன் :—மாதவியின் ஓலை கொண்டு சென்று கோவலனைக் காட்டிற் கண்டு மறு மொழி பெற்றுச் சென்றவன்.

மாடலமறையோன் :—இவர், மதுரையில் கவுந்தியடிகளிருந்த அறப்பள்ளியிற் கோவலனைக்கண்டு அவனது புகழ்ச் செயலே விளம்பினவர் ; கோவலன் மடிந்ததுவும் மதுரைச் செய்தியும் காவிரிப்பூம் பட்டினத்தில் வெளியிட்டவர் ; சோன் சங்குட்டுவனைக் கண்ணகைக் கணையிற் சந்தித்துக் கோவலனுதியர் வாலாறு னைத்தவர் ; வஞ்சியில் செங்குட்டுவனை யாகம் புரியச் செய்தவர் ; திருச்செங்கோட்டில் தேவந்தி முதலாயினர் வாலாறு தெரியச் செய்தவர்.

மாதரி :—மதுரையில் இடையர் குலத்தினள்; கவுந்தியடிகளால் கண்ணகியையும் கோவலனையும் அடைக்கலமாகக் கொடுக்கப் பெற்றவள்; அவ்விருவருக்கும் சேர்ந்த பொல்லாங்கைப் பொறுக்கலாற்றாது தீக்குறித்து மடிந்து, பின்னர்த் திருவாய்ந்தபுரத்தில் சேடக் குடும்பியின் மகளாய்ப் பிறந்தவள்.

ஐயை :—மாதரி மகள்; தேவந்தி முதலாயினருடன் கண்ணகியைத்தேடி திருச்செங்கோட்டை யடைந்தவள்.

பொற்கொல்லன் :—மதுரையில் கோவலனைக் கள்வனென்று பாண்டியனிடம் வஞ்சகமாகக்கூறிக் கொல்வித்தவன்; அரண்மனைத் தட்டான்.

நெடுஞ்செழியன் :—பாண்டிய மன்னன்; பொற்கொல்லனின் வஞ்சக மொழியால் தடுமாற்ற மடைந்து கோவலனைக் கொல்லுமாறு காவலர்க்கு ஆணை கொடுத்தவன்; பின்பு, கண்ணகி யுரைத்த வழக்கால் உண்மை யுணர்ந்து நெறிமுறை தவறினேனென யென்றெண்ணி உயிர் நீங்கினவன்.

கோப்பெருந்தேவி :—பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி கணவன் கண்ணகி வழக்கால் அரியணையினின்றும் விழுந்து மாண்டதைப் பொறுமல் உடன் வீழ்ந்து மாய்ந்த அறக்கற்பினள்.

செங்குட்டுவன் :—சேரவேந்தன்; கண்ணகி திருச்செங்கோட்டில் வந்து விட்புலந் சென்றனென்பதைக் குறவர்களால் அறிந்து, இமயமலையினின்றும் கண்ணகி சிலையைச் செய்துவந்து நாட்டிக் கோயில் கண்டவன்; கனகவிசயர் ஆகிய ஆரிய மன்னரைப்போரில் வலியடக்கிச் சிறைபிடித்தவன்; மாடல மறையோன் வழுத்திய வண்ணம் இராசசூய யாகஞ் செய்தவன்.

வேண்மாள் :—செங்குட்டுவ வேந்தனின் மனைவி; கண்ணகியைச் சோராட்டில் நாட்டிச் சிறப்புச் செய்யவேண்டு மென்று நாயகனுக்குக் கூறினவள்.

சாத்தனர் :—மதுரையில் தானிய வாணிகஞ் செய்தவர்; சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகி கோவலன் முதலா யினர் வரலாற்றை விளக்கினவர்; இளங்கோவடி கள் இயற்றிய சிலப்பதிகாரத்தைக் கேட்டவர்; அதன் தொடர்பாகிய மணிமேகலை என்னுஞ் சிறந்த காப்பியத்தைப் பாடினவர்; கடைச்சங்கப் புலவ ருள் ஒருவர்; சீத்தலைச் சாத்தனர் என்றும் கூல வாணிகன் சாத்தனர் என்றும் அவரைக் கூறுப.

இளங்கோவடிகள் :—சேரன் செங்குட்டுவனின் தம்பி; இளமையி லேயே துறவு பூண்டவர்; கோவலன் கண்ணகி கதையாகிய சிலப்பதிகாரத்தைக் கனியினுங் கட்டி பட்ட கரும்பினும் இனிக்கும் வண்ணம் பாடி யரு ளினவர்; கூலவாணிகன் சாத்தனர் பாடிய மணி மேகலையைக் கேட்டவர்.

பொருளடக்கம்

புகார்ச் சிறப்பு.

க.	அகநகர் புறநகர்	...	...	1
உ.	நாளங்காடிப்பூதம்	...	...	3
ங.	கொற்றப்பந்தர், பட்டி மண்டபம், தோரண வாயில்	...	...	4
ச.	வெள்ளிடை மன்றம்	...	...	5
ஞ.	இலஞ்சிமன்றம்	...	...	5
ட.	நெடுங்கல் நின்றமன்றம்	...	...	5
ண.	பூதசதுக்கம்	...	...	6
த.	பாவைமன்றம்	...	...	7
ந.	சக்காவாளக்கோட்டம்	...	...	7
ப.	வணங்கள்	...	...	9
ம.	பத்தினிப்பெண்டிர்	...	...	10

கோவலன் வாழ்க்கை.

க.	திருமணம்	...	...	17
உ.	இன்பந்துய்த்தல்	...	...	18
ங.	தனிமனைப்புகுதல்	...	...	18
ச.	மாதவி நடனம்	...	...	19
ஞ.	மாதவி கட்பு	...	...	20
ட.	கண்ணகியின் பிரிவாற்றுமை	...	...	21
ண.	இந்திர விழா	...	...	22
த.	கோவலன் மாதவியைப் பிரிதல்		...	24
ந.	தேவந்தி வரலாறு	...	...	26
ப.	கண்ணகி கனா	...	...	28
ம.	கோவலன் வருகை	...	...	30

வழிச் செலவு.

க. புறப்பாடு 33

உ. கவுந்தியடிகளைக் கண்டடிபணிதல் ... 34

ங. மருதநிலக் காட்சி 36

ச. சாரணர் எதிர்ப்படல் 38

ஞ. வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் நரி யாயினமை 40

ட. மாங்காட்டு மறையோன் வழித்திறங்கூறல் 41

ண. வனதெய்வம் 47

த. ஐயை கோட்டம் 48

ந. மாதவி ஏவிய கோசிகற் காண்டல் ... 52

ப. வையை கடந்து மதிற்புறஞ் சார்தல் ... 56

மதுரைச் செய்தி.

க. நகரக்காட்சி 58

உ. கோவலன் நகர்கண்டு மீளல் 59

ங. கோவலன் கலை 65

ச. அடைக்கலம் அருளல் 65

ஞ. குரங்குக்கை வானவன் 67

ட. மாதரி மனை 69

ண. சிலம்பு விலைபகர்தல் 72

த. அரசன் ஆணை 74

ந. களவுத்திறன் 75

ப. கோவலன் இறுதி 79

ம. ஆய்ச்சியர் ஆட்டம் 79

ய. கொடுங்கையர் பூண்டாள் கோவலற் காண்டல்... 83

ர. வழக்குரைத்தல் 87

ல. வீரமொழி 91

வ. மதுரை தீப்படல் 98

ழ. மதுராபுரித் தெய்வம் வான்முறை னைத்தல் ... 95

ள. வீரபத்தினி மேற்றிசைப் போதல் ... 100

சேரநாட்டில் தெய்வமாதல்.

க. காதற் கொழுநனைக் கண்டு விண்ணடைதல் ... 101
உ. குறவர் கூத்து 102
ங. சேரன் மலைவளங் காணச்சேறல் ... 104
ச. குன்றவர் கூற்று 105
ஞ. சாத்தனர் கண்ணகி வரன்முறை சாற்றல் ... 107
ட. கல்லுரு நாட்டக்கருதி யாராய்தல் ... 109
ண. படை எழுச்சி 111
த. நீலகிரி 114
ந. ஆரியமன்னரை அமரில் வெல்லல் ... 115
ப. கங்கை நீர்ப்படை 117
ம. சேரன்பால் மாடலன் சென்றுரையாடல் ... 118
ய. வஞ்சிமாநகர்க்கு வந்துசேரல் 120
ர. பத்தினிக் கல்நாட்டு 121
ல. வீரபத்தினியார் விண்ணிடைத் தோன்றல் ... 124
வ. தேவந்திமங்கை தெய்வமுற்றுரைத்தல் ... 126
ழ. மூவர்பெண்களின் முன்னைப் பிறப்பு ... 128
ள. வரம் தரல் 130
ற. பத்தினித் தெய்வம் இளங்கோவடிகட்கு அருளல் 130
ன. பத்தினிகோயிற் கண்டவர் 131
ஒ. இளங்கோவடிகள் திருவாக்கு 132
அரும்பொருள் விளக்கம் 133

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	
1	12	நாமடைந்தை	நாமடந்தை
2	11	பலவுடம	பலவுடம்
13	1	பெருமாள்	பெருமான்
	11	வழிப்பாட்டையும்	வழிபாட்டையும்
19	27	பாடலை	பாடல்
25	2	பாடுணன்	பாடுணன்
56	23	பஞ்சநிலை	பஞ்சகிலை
64	14	நாகன்	நாகன்
66	17	சிசங்கயலை	சிசங்கயல்
69	10	சிரியகாயிறைம்	சிரிகாயிறைம்
93	4	மறுநிற் சென்று	மறுநிற் சென்று
100	2	இலன்	இலன்
126	20	காகிலார்	காகிலார்
129	20	தொன்றியிர்	தொன்றியல்

கடவுள் துணை

வீரபத்தினி

(கோவலன் கதை)

காப்பு.

கரும்பும் இளநீரும் சட்டிக் கனியும்
விரும்படும் விநாயகனே வேண்டி—அரும்பவிழ்தார்ச்
சோமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாமரைபோ நாவேவை தரி.

புகார்ச் சிறப்பு.

நீர்வளமும் நிலவளமும் மிகுந்துபுட் பூமடந்தையின்
புணர்கலமாகவும் காமன்கடந்தையின் நல் இடமாகவும்
செல்வமும் சீரும் சிறந்துவினங்கும் சோழ
அகநகர், புறநகர். நாட்டில், காவிரியாறு கடலொடு கலக்கும்
சங்கமுகத் துறையையும்,

நாகர் நகிரும் ஏரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கைபோ டனந்தகடை யறியா
வளந்தலை மயங்கிய

மாட மாளிகைகள் வனப்பொடு யெங்கும் அகலமான வீதி களையும், பட்டாலும் எலிமபிராலும பருத்திப்பஞ்சிலும் அரிய நுண்ணிய சித்திரவேலைகள் மலிந்த நெய்தற் றொழி லாளர், செம்பு செய்குநர், மரங்கொல் தச்சர், கருங்கைக் கொல்லர், பொன்செய் கொல்லர், ஓவியம் எழுதுவோர், ஆயுள் வேதர், காலக்கணிதர், மூத்தக்கோப்பார், சங்கறுப் பார் உள்ளிட்ட பல சிறந்த இன்றியமையாத தொழிலாளர் களின் இருக்கைகளையும், வெயிலெறி மணியும், நிலவெறி முத்தும், மின்னிடுபொன்னும், பட்டும் பவளமும், பல்வகை மணங்களும், உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையா உணவுப் பண்டங்கள் பலவும் பிறபொருள்களும் கொண்டுவிற்கும் கடை வரிசைகளையும், கடலோடிகளையும், பிறதேச வாசிகளை யும், அகநகரிலும் புறநகரிலும் நிறையக் கொண்டிலங்குவது பூம்புகார் நகரம். இந் நகரத்திற்கு புகார், காவிரிப் பூம்பட்டினம், பட்டினம் என்னும் பெயர்களுமுண்டு.

இந் நகரத்து அகநகருக்குப் பட்டினப்பாக்கம் எனவும் புறநகருக்கு மருவூர்ப்பாக்கம் எனவும் பெயர். அவ்விரு பாக் கத்துக்கும் இடையே நிலை நிறையாகத் தொழுத்து நிற்கும் மரங்களையே கால்களாகக் கொண்டு கட்டிய கடைத்தொகுதி கள் நிறைந்த இடமொன்றுண்டு. அவ்விடத்திற்கு நாளங் காடி என்று பெயர். நிலமகளின் அணிமுடியில் அகமைந்த நடுநாயக மணிபோல் மிளிர்வது, புகார் நடுவிற் அமைந்த நாளங்காடி. இங்கே பண்டங்களைக்கொள்ளல் கொடுத்தல் இரண்டாம் ஜாமம் எல்லோரும்கடலலையைக் கடையாகிநிற்கும். இதில் நாளங்காடிப் பூதத்தின் பீடிகையும், முத்தப் பந்தர் பட்டிமண்டபம் தோரணவாயில் ஆகிய அழகொழுகு காட்சி நிலையங்களும், ஐவகை மன்றமும், பல கோயில்களும், பள்ளி களும் பொலிந்திருந்தன.

அவற்றுள் நாளங்காடிப் பூதத்தின் வரலாறு வருமாறு : இந்திரன் ஒரு காலத்தில் தனது நகரமாகிய அமராவதியைத் தவிர்க்கலாகாததொரு காரியப்பொருட்டுச் சிலநாள் பிரிவான் ஆயினன். அந்நாள் அவன் அமராவதியைக் காவல்புரிவார் யாருளர் என எண்ணினன். கதிரவன் குலத்துப் பிறந்த மூசுகுந்தச் சக்கரவர்த்தி அஃதுணர்ந்து தானே காவல்புரிவ தாக முன்வந்தான். அதுகேட்ட வானவர் கோமான் ஒரு பூதத்தை மூசுகுந்தனுக்குத் துணையாக விட்டு நீங்கினன். அந்நாளன்று மன்னர் பெருமானகிய மூசுகுந்தனே அவுணர்கள் மாறிட்டு மலைவாராயினர். மூதலில் அவற்கு ஆற்றாது தோற்றோடிய கொடிய அவுணர்கள், பின்னுஞ் சூழ்ந்து வந்தசை இருளம்பொன்று விட்டனர். அந்த அம்பி னின்றும் வெளிப்பட்டு நிறைந்த இருள் கண்ணொடு மனத் தையு மறைத்தமையின், அறிவும் மங்கிப் போரொழிந்து நின்றனன் மூசுகுந்தன். அக்காலை, வாசவனால் துணையாக விடப்பட்ட பூதம், ஓர் மந்திரத்தை அவன் செவியறிவுறுத் தது. அவ்வளவில், அவுணரது வந்த அம்பின் இருள் உடைந்தொழியவே, மன்னர்பிரான் அவுணக்கொடியனைக் கொன்று குவித்து வென்றி கொண்டனன். இவற்றை அறிந்த வானவர் கோமான், என்றும் மூசுகுந்தற்குக் காவ லாகவென அப்பூதத்தை வகுத்தனன். அந்நாளன்று அவனால் நாளங்காடியில் கொணர்ந்து நிறுவப்பெற்று, என்றென்றுந் தோழ மன்னர்கட்கு உறுதுணையாய்ப் நின்று பாதுகாத்து வந்தது அப்பூதம். நாளங்காடியில் நிறுவப்பெற்றமைபால் நாளங்காடிப்பூதம் என அதன்பெயர் வழங்கலாயிற்று.

நாளங்காடிப் பூதம்

மற்று, போரென்ன வீங்குந் பொருப்பன்ன தின் புயத்துக் கரிகாற்பெருவளவன் தமிழ்நாட்டில் தன்தோழ

கோற்றப்பந்தர், பட்டிமண்டபம், தோரணவாயில்

எதிர்த்துப் போரியற்று மன்னரின்மை யின், வடதிசையிற் பகைப்போரைப் பெறலாமென்னும் கருத்தை உட் கொண்டு, நன்னனில் வாளும் குடையும் முரசமும் வெளியேற்றி,

நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கிலென் வலிகெழு தோளென

வேண்டி, வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து, நாற்படையும் புடைசூழ வடதிசைப் போயினன். இமையவரம்பனும் இமயம் வரைச் சென்றும் பகையரசைப் பெறாது மாறித் திரும்புஞ் செம்பியன், அப்பாற் செல்ல வழியிடமாது வாதிர்த்து நின்ற இமயத்தின் பிடர்மீது கண்ட புலிமுத்திரையைப் பொறித்து மீண்டான். மீண்டு வருங்கால், பகையின்றித் திறையாக வச்சிரநாட்டு வேந்தன் ஒரு முத்துப்பந்தர் தந்தனன்; மகதநாட்டு மன்னன் பகைத்துப் போராற்ற வியலாது ஒரு பட்டிமண்டபத்தை நல்கினன்; அவந்தியரசன் நாப்பண் கொண்டு உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த வாயிற்றோரணமொன்று ஈந்தனன். அம்மூன்றும் பொன்னாலும் மணியாலும் இயன்றனவை; எனினுங் கம்மியராற் செய்யப்படாதவை. அவற்றைத் தந்த மூன்றரசர்களின் முன்னோர் களநாடம், ஒவ்வொரு காலத்தில் இன்றியமையா வுதவிகளைத் தேவதச்சனையிய மயனுக்குச் செய்தனர். அவ்வுதவிகளுக் குக் கைம்மாறாக அவர்களுக்கு மயன் படைத்துத் தந்தனவாகும் அம்மூன்றும். அவை தம்மைக் கையுறையா யேற்ற கரிகாலன், அவற்றைத் தனது வாழ்க்கைத் துணை நகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் நாட்டினான். படைப் பின் மேன்மையாலும், பலநாட்டுப் பலதூரின் கன்னையாகிய அவை ஒரு நாட்டு ஒரு நகரில்வந்து தோன்றியிருக்கும் அருமை யாலும், அவற்றைப் பெரியோரும் போற்றுவர்.

இங்ஙனம் சிறந்த அம்மூன்றினையுந் தன்னகத்துக் கொண்ட புகாரில், உடையவர் காவலிலாது பூட்டு முதலியனவுமின்றி வெளிப்படையாகப் பொன் பொதிந்த மூட்டை முடிச்சுகள் கிடப்பினும் திருட்டுப் போகாமற் காப்பதொரு மன்றம் உண்டு. இம் மன்றத்தின் மகிமையால், உடையவர் பெயரெழுதிக் குறியிட்ட எப்பொருட் பொதியும் வைத்தவை வைத்த விடத்திலேயே பத்திரமா யிருக்கும். உள்ளூராரா் எவருங் களவு செய்தலில்லை. அயலூராரா் அறியாமல் திருட்டெண்ணங் கொண்டு யாதாமொரு பொருளை எடுப்பாராயின், அதனைத் தலையிற் சுமந்து ஆண்டுச் சுற்றிச் சுற்றித் திரிதலின்றி வெளியிற் கொண்டு போகார். அங்ஙனங் கொண்டுபோக விடாது அறிவை மயக்குவது அம்மன்றம். இதனால் அப் பட்டினத்தில் களவேயில்லை. இதற்கு வெள்ளிடைமன்றம் என்று பெயர்.

(க) வெள்ளிடை மன்றம்.

இன்னொரு மன்றம், பொய்கை யொன்றைப் பக்கத்தே யுடையது. கூனிய முடம்பினர், செவிடர், தொழுநோ யால் (குஷ்டம்) அழுகிய மெய்யினர் ஆகிய பிணிகொண்டோர் எல்லாரும் அப்பொய்கையில் மூழ்கி அம் மன்றத்தை வலஞ்செய்யின் பிணிநீங்கி நல்லுடம்பு பெறுவர். இதற்கு இலஞ்சிமன்றம் என்று பெயர்.

(உ) இலஞ்சி மன்றம்.

மற்றொரு மன்றத்தில், முனி விசாவதொரு நெடிய கல் லுள்ளது. இக்கல்லை முறுமுறை சுற்றிவந்து வணங்கின், வஞ்சனையால் மருந்திடப் பெற்று மதி மயங்கினோர் மருந்தினீங்கி மனம் பெறுவர்; நஞ்சுதின்றோர், பாம்பு தீண்டப் பட்டோர், பேய் பிடித்தலுற்றோர் என்றின்னோ ரெல்லாம்

(ங) நெடுங்கல் தீர்க்கு மன்றம்.

அவ்வத் துன்பங்கள் நீங்கிச் சுகமடைவர். இன்னன துன்ப நீக்கத்துக்குக் காரணமாயது அக்கல்லின் வெளிட்டாடும் ஒளியேயாம். இவ்வொளி நோயாளர் உடம்பிற் பட்ட மட்டில் நோய் கெட்டோடும். இது நெடுங்கல் நின்றமன்றம் எனப்படுமென்.

இனி, நாளங்காடியின் நாற்சந்தி மன்றத்தில் நிற்பது ஒரு பூதம்.

தவமறைந் தொழுகுந் தன்மையி லாளர்
அவமறந் தொழுகும் அலவைப் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோர்

அதாவது :—‘ இழுக்கிய எண்ணத்தை யுள்ளே கொண்டு பலரும் நம்புதற்கேற்ற தவக்கோலத்தை மேனிற்றுண்டு தம்மை உலகு அறிந்துனிடாதவாறு வஞ்

(சு) பூதசதுக்கம்.

சகோலத்தில் மறைந்தொழுகும் தீங்ருனை... யோர், தம் பாசாங்கிறைற் கணவர் தம்மீது வேறு கொள்ளாவகை மயக்கிக் கூடாவொழுக்கத்திற் பிறரொடு மருவும் மடவார், தன்னை நம்பிய அரசனைக் கிழமைக்கண் கருதிய அமைச்சர், பிறர் மனைவியரை விரும்பும் பேதையர், பொய்ச் சான்று புகலுவோர், ஒருவனை எதிரிற்போற்றி புறத்தே தூற்றுவோர் ஆகிய இவர்கள் என் கையிலுள்ள பாசத்தில் சிக்குவோராவர்’ என்று நாற்காதனாம் கேட்கும் மன்னம் தனது உரத்த குரலால் அப்பூதம் அறிவுறுக்கும். அங்ஙனந் தான் உணர்த்தியதை மீறி யாதானுமொரு தீச் செயலை யாரேனும் செய்யின், அவரை அதன் கைப்பாசம் கட்டி யிழுத்துவர, உடனே நிலத்தில் அறைந்து விழுங்கி விடும். இப்பூதம் ஆங்கிருப்பதால் தீ நிமித்திகன் தலை

யெடுத்தவிஸ்லை. அது நிற்கும் இடத்துக்குப் **பூதசதுக்கம்** என்றும் அதற்குச் **சதுக்கப்பூதம்** என்றும் பெயர் வழங்க லாயிற்று.

இனி, அரசன் செங்கோல் எக்காரணம் பற்றியேனுங் கோடுமாயின், அல்லது அறங்கூ றவையத்தார் எப்போ தாவது நடுவுநிலை திறம்பி ஓரவாரத் தீர்ப் புக் கூறுவராயின், நாவால் யாதும் ஓதாது கண்ணீர் சொரிந்து அழுதாகிற் (ஈ) பாவை மன்றம். கும் ஒரு **பாவை.** இப்பாவை நிற்கும் இடம் **பாவைமன்றம்** எனப் பெயர் பெறும்.

மேலே சொன்னவிட்ட ஐந்தையும் **ஐம்பெருமன்றம்** என்று சேர்த்துச் சொல்வதும் உண்டு.

இவையேயன்றி, இந்நகரின் சிறந்த நிலையங்களுட் **சக்கரவாளக்கோட்டமும்** ஒன்று. எல்லா உலகங்களையும் சக்கரவாளக் கோட்டம். தன்னுள் அடக்கிய கோளத்தைச் சக் கரவாளம் என்பது பௌத்தநூலார் வழக்கு. காவிரிப்பூம் பட்டினம் தென் னிய காலம் முதலாக வுள்ளதொரு **சுதர்சனன்** பக்கத்தி லுள்ளது இச் சக்கரவாளக் கோட்டம். இது ஆக்கப்படு கற்கு முன்னெல்லாம் இப்பகுதி **சுதர்சனக் கோட்டமாக** மட்டு மிருந்தது. இச் சுதர்சனு பலவகைக் கட்டடங்களை யுங் கொண்டது. இதையொரு நகரமென் றெண்ணிச் **சார்ங் கலன்** என்னும் பார்ப்பனச் சிறுவனொருவன் தனியே அங் குச் சென்றனன். அவன் அங்குக் கனிக்காயுடைய வொரு பேயால் அணையப்பட்டு, அலறிச்சென்று, தன் தாயாகிய **கோதமனை** அடைந்து, "அம்மே! காலிலப் பேய்க்கு உயிரைக் கொடுத்தேன்" என்று வீழ்ந்து இறந்தான். இறந்த மைந்தனைத் தொளிலிட்டு அப் பட்டினத்துக்

காவற்றெய்வமாகிய சம்பாபதி திருமுன் சென்று, "என் னுயிரை எடுத்துக்கொண்டு என் மகன் உயிரை மீட்டுத் தந்தருளல் வேண்டும்" என்று கோதனை புலம்பினாள். அதற்குச் சம்பாபதி மனமிரங்கி, "போன உயிரை மீட்டுத் தரல் என்னு லாகுங்காரியமன்று, வருந்தாதே" எனப் பகர்ந்தனள். "கேட்ட வரங்களைத் தெய்வம் தருமென்பது நூல் வழக்காகவும் யான் வேண்டிய இவ்வரத்தைத் தந் தருளாயாயின் இப்பொழுதே உயிர்விடுவேன்" என்று கோதனை கூறினள். அதற்குச் சம்பாபதி, "எவ்வுள்ளு தேவர்களில் எவரேனும் நின் விருப்பத்தை நிறைவேற்று வாயின் யானும் அவ்வண்ணம் செய்தல் கூடும். என் சூற் றலைக் காண்பாய்" என்று கூறி நான்குவகைக் குருவாய்பிர கணங்களையும், பதினெண்வகை உருவப் பிராகணங்களையும், இரு சுடர்களையும், அறுவகைத் தெய்வ கணங்களையும், அசுர கணங்களையும், எண்வகை நாகங்களையும், பல வின் மீன் கூட்டங்களையும், அச்சுவினி முதலிய நாள்களையும், கோட்களையும் தன்னகத் தடக்கிய சக்கரவாளக் கோட் டத்தின் வாழ்தரு தேவரையெல்லாம் வரவழைத்து, அவள் முன் நிறுத்தி, "இவள்கொண்ட இன்னல் இகவாதும், இதனைத் தீர்ப்பீராக" என்று மொழிந்தனள். அவர்களும் போன உயிரை மீட்டளித்தல் தம்மாலாகா தென்று சம்பா பதி மொழிந்தவாறே சாற்றினர். கோதனை மருகுவாறு மனந்தெளிந்து மகனைச் சுடுகாட்டிற் சென்றுவிரி உயிர் துறந்தாள். பின்னர், சம்பாபதியின் ஆற்றலை உலகிற்குவ் வெளிப்படுத்தவும், எல்லாத் தேவர்களும் தனித்தனி கூடிய தன் ஆணைகுறியாகவும் ஆண்டொரு கோட்டம் எழுவித்தனர். அக்கோட்டம் மேருமலையும், அதைச் சூழ்ந்த ஏழு மலைகளும், நான்கு பெருந் தீவுகளும், இரண்டாயிரம் சிறு தீவுகளும், பிற சீரிய இடங்களும், அதனில் வாழ்வோர்

களும் அடங்கிய உருவங்களை விளக்கி மயன் என்னுந் தெய்வத் தச்சனால் நிருமிக்கப்பட்டது.

இனி, காவிரிப்பூம் பட்டினத்தில் இலவந்திகைவனம், உய்யானவனம், சம்பாதிவனம், கோவர வனங்கள். வனம், உவவனம் என வழங்கும் பல சோலைகள் உண்டு.

இவற்றுள் **இலவந்திகை வனம்**: இயந்திரங்களைக் கொண்ட குளத்தை அகத்தேயுடையது. அக்குளத்தினைச் சூழ்ந்த பசுஞ் சோலை சோழவேந்தர்கட்கு வேனிலையும், இளந் தென்றலையும் மன்மதன் திறைப் பொருளாக வழங்கினற் போன்று மலர் பல அலர்ந்து மகிழ்ட்டுவது; மன்னர் பெருமான் மனைவிமாரோடு சென்று விளையாட்டயர்வது.

உய்யானவனம்: பாசத்தைக் கையிற் கொண்ட தருக்கின் கோலையுடையது. அவ்வனத்தின் மலர்கள் தேவர்களால் விரும்படப்படுபவை; அம் மலர்கள் வாடுவதில்லை; வண்டு நுகர்வதில்லை.

சம்பாதிவனம்: சம்பாதி, சடாயுவென்னும் உடன் பிறந்த பறவை. அவ்விரு பறவைகளுஞ் சுங்கரனுள் யார் மிக உயரப் பறப்பது என்பதில் மாறுகொண்டு பறக்கலாயின. சம்பாதி மிக உயரச் சென்றமையின் ஞாயிற்றின் வெப்பமையால் இறகுகள் எரிந்து வீழ்ந்தது. இப்பறவை சுங்கியிருந்தமையால் இதற்குச் சம்பாதி வனமென்று பெயர்.

கோவரவனம்: காவிரி யாற்றை மீன்சேரூரிலுள்ள கோவலன் என்னும் அரச னிஷி யிருந்து தவஞ்செய்த இடமாதலால் அஃது அப்பெயர் பெற்றது.

உவவனம்: அருளும் அன்பும் ஆருயிரோம்பும் ஒரு பெருங்கொள்கையும் ஒழியாது, கோண்டு பூண்ட பகவனைத் தினையாற் பூக்கும் பன் மாங்களையுடையது. அவ்வனத்தில்

ஒரு பளிங்குமண்டபம் உண்டு. அது தன்பால் இருப் போரின் ஒலியை வெளிப்படுத்தாமல் உருவையைமட்டும் வெளிப்படுத்தும். அம்மண்டபத்தில் மாணிக்கச்சுடர் பரந்த தொரு பதுமபீடம் உளது. அப்பீடத்தில் அரும்புகளை யிட்டால் மலரும். பல்லாண்டு கழியினும் அதிலிட்ட மலர் கள் வாடா. அம்மலர்களில் வண்டுகள் மொய்யா. எதனை யுங் கருதாது அப்பீடத்தில் மலரைப் பெய்தால் அவை அங்ஙனே கிடக்கும். வேதனையொரு தெய்வத்தை நினைந்து அதிற் பெய்தால் அங்ஙனம் பெய்த மலர்கள் பீடத்தை நீங்கி அத்தெய்வத்தின் அடிகளிற் செல்லா நிற்குமாம். இது மயலைலாக்கப்பட்டது.

நிற்க, ஒரு நாட்டில் அல்லது ஊரில் சிறந்த செல்வமும் அளவு கடந்து சிறந்திருக்கு மெனினும் ஆங்குள்ள மகளிர் நலஞ்சிறந்தோர் எல்லரெனிற் பயனில்லை. அதிலுங் கற்பு மகளிர் இல்லா நாடு வறிய காடேயாகும். ஆதலின், அவ் வகையாலும் பூம்புகார் சிறந்தவென்பதைப் பின்வரும் வரலாறுகள் தெளிவுறுத்துவன வாகும்.

(க) இந் நகரில் அளவில்செல்வத்து வணிகன் ஒரு வன் இருந்தான். அவனுக்கு ஒரேயொரு மகள்தான் வாய்த்தாள். இப் பெண் பிறப்பதற்கு முன்பு மதுரை யில் மற்றொரு பெண்ணை வதுவையாரிந்து வாழ்கின்ற தன் மருகனுக்கே தன் மகளையுஞ் செல்வங்களையுங் கொடுப்பலென்று பல்லோரும் அறியக் கூறிக்கொண்டிருந்த அவ்வணிகன், சின்னாளில் உயிர் துறந்தான். அதனை யாற்றாத அவன் மனைவியும் அந் நாளிலே இறந்துபட்டாள். சுற்றத்தார் மதுரைக்கு ஓலை போக்கினர். அவ் வோலைகண்ட மருகன் ஆற்றொணாத் துயரத்தனாகி, அண்டையிலுள்ளார் தேற்றத் தெளிந்து,

பத்தினிப் பெண்டிர்.

காவிரிப்பூம் பட்டினஞ் சென்று, மாமன் இல்லைச் சேர்ந் திருந்தான். மாமன்கருத்தை அவனுக்குக் கிளைஞர் விரும்பி னர். அதற்கிணங்கிய அவன், 'தம்மூர்ச் சுற்றத்தார் முன்பு மன்றல் புரிவேன்' என வாக்களித்து, அச் செல்வியையும் செல்வங்களையும் ஏற்றுப் புகாரை நீங்கினன். பொருள் பண்டங்களை யெல்லாம் அவனுடன் வந்த உறவினர்கள், அவன் கட்டளைப்படி எடுத்து முன் சென்றார்கள். இவன் மாமன் மகளோடும் பின் சென்றான். அங்ஙனஞ் சென்ற வன், திருப்புறம்பயம் என்னும் பதியை அடைந்து அன்றிரவு அவன் தங்கி வைகறையில் வழிச் செல்வாமெனக் கருதி, வன்னிமரமும் மடைப்பள்ளியும் கோயிலும் கிணறமுள்ள நிடத்தில் வதிந்து, உணவு சமைத்துண்டு உறங்கலாயி னன். உறக்கத்தில் அவனை அரவம் தீண்ட, உடனே விடந் தலைக்கேறி மாண்டான். உற்றதையறிந்த அப்பெண்மணி, இரவெல்லாம் எங்கி உருகி அழுதனள். தங்தையைத் தாயை இழந்த தமியள், தனவன்கதியும் இன்னவாறாயின் என் செய்வாள் பாவம்! தூக்கமே உருக்கொண்டதுபோல் தோன்றினாள். காலையில் அவ் வூரார் அறிந்து உருகிற்று.

தனையிழந்த அந்த வெளிய பெண்ணுக்கு இரங்கி, இறைவன் எழுந்தருளி, மாண்டு கிடக்கும் வணிகனைக் கண்டங்கொடித்தருளலும், அவ் விடங்கொண்ட வணிகன் திடங்கொண்டு எழுந்தான். இறைவனைக் காதலும் தல முடையாள் அழுகை நீக்தான்; உயலை தூக்தான். பின்னர் வணிகன் தனக்கு நேர்ந்த இன்னலை உணர்ந்தான். இரு வரும், தம்பொருட்டு இங்ஙனம் கருணைபாலித்த இறை வனைப் பலவாறுகப் புகழ்ந்து போற்றினர். இதனாலும் அம் மடினியலான் அவன் உடம்பைத் தீண்டுணர்வில்லை. வதுவை யாழுலன்றி மாமன்மகளுடைய அவலனையும், உயிர்க்

கிறுதி நேர்ந்த காலத்திலுங்கூடத் தீவ்வினை தற்புரிந்தி யன்றனைக் கருதியிருந்தாள். அப்பொழுது "இவ்விடத்திற்றானே மணஞ்செய்து செல்மின்" என்று இறைவன் அருளலும், அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு, "புண்ணியனே! சுற்றத்தார் யாருமில்லாத இவ்விடத்தில், நீயிரே அடியேங்கட்குத் தாயுந் தந்தையும் ஒக்கலும் பக்கமும்" என்று வணிகன் பணிந்தனன். மணமுடிந்தது. புய்படால் அவர்கள், இறைவனைப் பன்முறை வணங்கி, விடைகொண்டு மதுரை சென்று வாழ்ந்து மகப்பேறும் பெற்றனர். புகழன்றன் முதல்மனைவிக்கும் மக்களுண்டு. ஒரு நாள் இருவர் மக்களும் விளையாடுங் கால், மூத்தாள் மக்கள் தன் மைந்தனை அடிக்கவே, அவர்களை அடக்குவான்றாகி, சற்றுக் கடிகடுத்து இளையாள் அதட்டினள். அதுகேட்ட மற்றவன் தன்று, "அடீ பேதாய்! நீ என் அருமைமைந்தனை யையுறல் சாலுமோ? நீ யாவள்? நின் ஊர் யாது? நின் தந்தை தாயர் எவர்? நினக்கு மணமுடிந்தது மாயர் முன்பா? உற்றார் பெற்றோர் இன்றி வறிதேயழுன்ற நீ, என் தாயகன் வரலில் கண்டு மயங்கிவந்த காமக்கிழத்தியல்லையோ? என் கணவன் உன்னை வதுவை முறைப்படி கைப்பிடித்தார் என்பதற்குச் சான்றுண்டோ? உண்டேல் காட்டுவாய்; இல்லையாயின் உன் பொல்லாவாணை முடி அடங்குவாய்" என்று கொடுமொழி கொட்டினள். இளையவள் உளம் நொந்து, "சான்றுகள் உள; அவை திருப்புற்றம்பயத்து வன்னியும் கிணறும் இலிங்கமும் மடைப்பள்ளியும்" என்றாள். "ஆ! ஆ!! அப்படியா! எற்ற சான்றுகள்தாம். யான் மிக்க பல்கியவள். என்னை உன்னல் எமாற்ற வியலாது. நீ சொல்லுவது மெய்யாயின் அவற்றை இங்கே காட்டு பார்ப்போம்" என்று மூத்தாள் வீம்பு கூறினள். இளையாள் யாது செய்வாள்! தன்னந்தனியாளாகிய எனக்கு இறைவனை துணை யென்று

மனங்கவன்று சொக்கலிங்கப் பெருமான் திருமுன் சென்று, கற்புத் தெய்வமே நின்று கரைவதுபோல் உள்ளங்கரைந்து, ஈதத் தழுதழுப்ப "எம்பெருமானே! அடியாள் மணத்துக் குச் சான்றாகிய அணை இங்கேதான்றி என் இன்னல் நீர்த்தாலன்றி உயிர் வாழேன். எளிமையேன், குலையாத கற்புடையேனெனில் அணை இங்குவர அருள்புரிக" என்று முறையிட்டாள். அப்பொழுது அண்ணலருளால் அணை கோயிலின் ஒரு புறத்தே தோன்றலாயின. உடனே மூத் தாளை அழைத்துவந்து காட்டினள். ஊராருங்கண்டு புகார் நகரத்தாரோடு புகழ்ந்தனர். அவள் கற்பின் மேம்பாட்டை யும் தெய்வ வழிபாட்டையும் வியந்தனர். மூத்தாள் வருந்தினள். கணவனும் அவளோடு பழித்தான். தன் கற்பு நிலை வெளிப்பட்டது அவளாலேயாகலின், இளையாள் அவளைத் தழுவிக்கொண்டாள். அன்று முதல் இருவரும் ஒத்து வாழ்ந்தனர். *

(2.) இந் நகரத்தின் கானிலிக் கரையில் ஒருநாட் பல நங்கைகள் கூடி விளையாடினார். அதில் ஒருத்தியைச் சில மகளிர் பழித்து "அடி வெண்பாவாய்! நீயுந்தான் உன் கணவன்" என்று தங்கள் புலமை விளையாடலாயினர். அக் கேள்வியில் மூன்றாம் கன்னி "கல்லென்றழுங் கணவன்" என்ற முறையில் மெய்யே யென்று கருதினள். அம் மடமைக் கொடுமைக்குக் கொழுநனே தெய்வமென்ற கொள்கை இயற்கையாகவே நிலைபெற்றிருந்த

---

* இவ்வரலாறு இலக்கணமாற்றை, செந்தமிழ் தொகுதி—கூ பகுதி—எ-ல் 'திருவிளையாடற் புராணம் 64-வது படல ஆராய்ச்சி' என்ற தலைப்பின் கீழ், திருப்புறம்பயம் ஸ்ரீமான் T. V. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் எடுத்துக்காட்டிய திருப்புறம்பய புராணம் 6-வது சருக்கச் செய்யுட்களும் பிறவும் விளக்குகின்றன.

மையின் அந்த மணற்பாவை மீது படிவுகொண்டு, கன்றைத் தேடி வந்த பெண்களுடன் செல்லாமல், கானிற் நீர் கரைத்து விடாதபடி அதனைக் காத்து நின்றாள். இதுபற்றி அவள் சிறிய **கற்புடையாளென்று** யாவரும் கொண்டாடினர்.

(ஈ) சோழன் **கரிகாலன்** மகள் **ஆதிமந்தி** என்பாள் கல்வி கேள்விகளிற் சிறந்தவள். அப்பெருமாட்டி, தன் கணவன் **சேரன் ஆட்டனத்தி** யொடு **கழார்** என்னும் ஊரில் காவிரியாற்றின் துறையில் நீராடுகையில், அவனைக் காவிரி வெள்ளம் கவர்ந்து சென்றது. ஆதிமந்தி காதலனைப் பல படக்கங்களிலுந் தேடிக் காணாமல், "கல் நவில் தேராளாதியா" எனக் கூவிச் சென்று கடற் கரையிற் புலம்பி நின்றாள். கடலானது **கற்புத்திறன்** மிக்க அப் பெண்மணியின் ஆற்றைமைக் கிரங்கி அவளைக் கரையோரத்திற் கொண்டுவந்து விடுத்தது. இந் நிகழ்ச்சியை யறிந்த **மருதி** என்பாள், நீராடிக் கொண்டிருந்தவள், அச்சேயாள் தோழமையைக் கண்டு அவளுடன் வந்து ஆதிமந்தியோடு கூட்டினாள். கணவன் மனைவி பிரிந்து கற்பரசியாகிய ஆதிமந்தி களித்துப் பொன்னகர்கொடி போல அவளைத் தழுவிகொண்டு போயினள்.

(உ) மற்றொரு மங்கையின் மணவாளன், தொன்று நாட்டுக்குப் பொருளீட்டலும் பொருட்டுக் கப்பலேறிச் சென்றிருந்தான். அவன் மனைவி "கொழுநன் யாருங்காணும் இந்த எழிலிடம்போ டிருப்போமாயின், நம் கட்டழகைக் கண்டு எவரேனுங் காமுறுதல் கூடும். அங்ஙனம் பிறர் காமுறும் நிலைமையில் காமிருத்தல் கற்பன்று. பிறர் இச்சிப்பதற்கு உரியதன்று இவ் வுடம்பு. ஆகவின் தொன்றுதொட்டு நான் எதிலை விரும்பத்தக்கது' என்று மனமுறுகி கொண்டு தன வன் வருங்வரையில் அடியாட்குக் **கல்லுருவம்** வரைந்து காக வென்று எண்ணினாள். **கற்பு** மங்கையர்க்கு வாய்த்தான்

இயலாதது. அப்பொழுதே அவள் நல்லுருவம் நீங்கிக் கல்லுருவம் பெற்றாள். அவ் வுருவோடு, ஒரு மணமலி பூங்கானலிற் கணவன் வருகையை எதிர்பார்த்து நின்றனள். சில நாட்சென்று அவனும் வந்தான். இவளுங் கல்லுருவம் நீங்கினாள்.

(நி) அப் பட்டினத்தில் ஒருவனுக்கு இரு மனைவிகளிருந்தனர். அவ் விருவருக்கும் இரு பிள்ளைகளுண்டு. அதில் ஒருத்தியின் பிள்ளை கிணற்றில் வீழ்ந்து இறந்தது. அதுகண்ட மற்றவள், 'நமது கணவனிடத்தில் நம்மைமப் போன்ற சம உரிமை படைத்த மாற்றாள், குழந்தையை இழந்தாளாக; நாம் மட்டும் குழந்தையோடு குலாவுதல் முறையன்று' என எண்ணித் தன் பிள்ளையையுங் கிணற்றில் தாழ்த்திவிட்டாள். அவளுடைய வீரக் கற்பினையும், அறிவு நிலைமையாலும், இரு பிள்ளைகளுந் தம் உயிருடன் மிதந்து வந்தனர். இருவரும் அம் மங்கலா மகிழ்வொடு எடுத்து மாருயி வாழ்ந்தனர்.

(சு) இன்னொரு நல்லாள், தன் மணாளன் ஊரில் லாத காலத்தில், புரிசலன் தன் புதல்வனைக் காமக் குறிப் போடு உற்று உற்று நோக்குவதைக் கண்டாள். 'நாம் அழகிய முகம் படைத்தார் என்றே அவனியன் இப்படிப் பார்த்தனன்! நாம் இனியும் இவ் வண்ணமே யிருக்கின் கற்புக்குத் தாழ்வுண்டாகும். இந்த இழுக்கத்துக் கேது வான முகம் அழகு நமது அருமைக் காதலன் வரும் வரையில் வேண்டாம். ஆதலால், குரங்கு முகம் கொள்ளலே தகுதி: அங்ஙனம் ஆகக்கடவது' என நினைத்தாள். அவள் கற்பின் வன்மையால் உடனே குரங்கு முகம் வாய்பெற்றாள்; மண மகன் வருமட்டும் அப்படியே யிருந்து அவன் வந்தவுடன் தன்னுடைய சரியான முகத்தை யெடுத்தனள்.

(எ) வேறு இரு சிறுமிகள், மணலிற் சிற்றில் கட்டி விளையாடுங்கால், "எனக்கொரு பெண்ணும் உனக்கொரு ஆணும் பிறந்தால் அவ்விருவரையும் மணமக்களாக்குதற்கு உடன்படுகிறாயா?" என்று ஒருத்தி மற்றொருத்தியைக் கேட்க, அவளும் உடன்பட, இருவரும் அவ்வாறே முடிவு செய்து கொண்டனர். பின்னர், அவ்விருவருக்கும் அவர்கள் பேசிக்கொண்டவாறே பெண்ணும் ஆணும் பிறந்தனர். ஆனால், ஆண் குழந்தை முடமாக விருந்தது. அவ்விருமக்களும் வளர்ந்து மணப்பருவமெய்தினர். அப்பொழுது, பெண்ணின் தாய் தன் கணவனோக்கி, "காதல! நான் இளம்பிராயத்தில் இன்னோளோடு இன்னவாறு சிற்சிலகாலம் விளையாடுகையில் பேசியதுண்டு; பேதைமையால் பெயர்த்தியால் இப்படி அறிவிழந்து பேசிய என் மனம் நம் அருமைக்குமரியை முடவனுக்கா கொடுப்பதென்று அவலமுறுகின்றது; யாது செய்வேன்!" என வருந்திக் கூறினாள். இவ்வண்ணமே தன்தைக்குத் தாயுரைப்பக்கேட்ட இளங்கொடி, 'இன்னானுக் கென்றும் நம் காய்ங்கார்வேந்தரின் ஐயம் என்! அவனுக்கே நான் உரியேனாம்' என்று துணிந்தாள்; கொடிப்படையமைத்தாள்; குழலிலவாளிறுத்தாள்; மணக்கோலம் கொண்டாள்; முடவனைக் கரிலயத்தைக் கொண்டு வாழ்ந்தாள். இதனால் இத்தங்கையின் பெண்ணின் நிறை திறம்பாச் செயலை யாவரும் கொண்மின் எனினார்.

மேற்கூறிய கற்பரசிகளெல்லாம் காவிரிபூம்பட்டினத்தவரே. இவர் போன்ற எண்ணிறந்த பத்தினிப் பெண்டிரை யுடையது அப்பட்டினம்.

கோவலன் வாழ்க்கை.

இங்ஙனம் எல்லாற்றானும் தலைசிறந்த காவிரிப்பூம் பட்டினத்தில், பெரியோர்களாற் பலபடப் பாராட்டிப் புகழப் பட்டது; சோழ மன்னர்களின் பண்டைய தலை நகரமாக வயங்கியது. அப் பட்டினத்தில் சோழன் கரிகாலன் தனி முடி கவித்து அரசு புரிந்த காலத்தில் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்று மூவகை வணிகர் குலம் இருந்தன. அவற்றுட் பெருங்குடியர் குலத்திற் பிறந்தோன், குபேரச்செல்வம் படைத்தோன், இல்லாதார்க் கின்தருமருங் குணனாகிய, மாசாத்துவான் என் பான் ஒருவன் இருந்தான். அவன்றன் அருமைமிக் புதல் வனும், பதினறு பருவமு நிரம்பியவனுமாம்,

மண்டேய்த்த புகழினுண் மதிமுக மடவார்த்தம்
பண்டேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டிக்
கண்டோடத்தருஞ் செல்வமென்ன நிலைபோக்கிக் காதலாற்
கொண்டோடத்தகும்

பேரழகுமும், அறிவு கோவலன் கண்பாலுலவுதலு, அதே நகரில் வாழ் பெருங்குடி வணிகர் பாதி பேரறிஞ்சிய சீலமிக பேரழகும் சுலோசனாவின் மாநாய்கன் மகளும், பண்பாளன்பால் படிவுற் றினளாதலும் அறிவ,

போதிலார் திருவினுள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிலள் திறமென்றும்
மாதராள் மேதகுமித்த வயங்கிய பெருந்தணைத்துக்
கண்ணகி என்னுமோர் பெண்ணரசினையாள் பல்பெருஞ் சிறப் புடன் மனைவாழ்க்கை புரிந்துவர்.

இவ்வாறு கண்ணகியும் கோவலனும், அளவளாவி அன்புடையராகி, சுபர்க்க லோகத்தில் மேவிய

இன்பந் துய்த்தல்

மயன் என்னும் தெய்வத் தச்சனால் நிருமிக்கப்பட்டு வைத்தது போன்ற வனப்பு மிக்க அமளிமிசைச் சென்று நிருப்பா மாயினர். அப்பொழுது, கோவலன், திருமகள் போலும் கலைமகள் காளின் மதிமுகம் பார்த்து,

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகனே!

நினக்கு உவமை யாது கூறுவேன்! நின் உயர்மை என்னென்று புகழ்வேன்! நினது இன்பச் சொல்லையும் பிறவற்றுக்களால் வருணிப்பேன்! எனது உயிரினும் இனிய அருமைக் காதலி! நின்னை,

மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!

அன்னமே! என்னென மொழியினும் என் பெயல்லாவின் நின் செவ்வியும் இனிமையும் அமையா" என்று இங்ஙனம் பல சொல்லிப் பாராட்டினன். இருவரும் மகிழ்ச்சியும் பொன்றும், அன்றிலும் அகன்றிலும் போன்றும், யாழும் பாடலும் போன்றும் இருவரும் ஒன்றி வாழ்வா மாயினர்.

இவ்வண்ணம் வாழ்ந்துவரும் நாளில் ஒரு நாள் கோவலன் தாயாகிய பெருமனைக்கிழத்தி கண்ணகியும் கோவலனும் தனிமனைப் புகுதல்.

இடம் தனிமனை யிருந்து பற்றுக்குறை யில், நிறைந்தோர்ப் போனால், வறுமைபோக்கி தல், விருந்து புறந்தருதல் ஆகிய அன்பு, அருள், இன்சொல் முதலியன வியலிய, பண்பிய பெண் பயத்தை மேன்மைபெற நடத்துங்கள் கடன் விருப்பி,

வேறொரு மாளிகையில் இல்வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பண்டங்களையும் வளம்பட நிரப்பி, பணியாளர்கள் தாதிகள் முதலாயினரையும் அமைத்து அவ் விருவரையும் குடியேறச் செய்தனள். மணையறத்திற்கேற்ற வாழ்க்கைத் துணைவியாகிய மெல்லியலாளரும் அவளது கொழுநனும் வாய்மை முதலிய ஒழுக்கம் வழுக்குதலின்றி மலர்மகளும் மலர்தலைவத் திருமாலும் ஒப்ப மனவொருமை யுடையோராய் இல்லறத்தைச் செவ்வனே நடத்தி வருவாராயினர். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன.

மாதவி மடனும்.

இனி, அவ் ஊரில் நாடகக் கணிகையர் குலத்தில் சித்திராபதி யென்பாளின் மகள் மாதவி, பன்னீராண்டு நிரம்பிய பருவத்தினள், ஆடல், பாடல், அழகு, ஆகிய முன்றிலும் குறைபாடின்றி நிரம்பியுள்ளாள். மாதவி அலை முன்றும் நிரம்பப் பெறுதற்குரிய அழகுடையவள். காவிரிப்பூம்பட்டினத்தே வாணிகன், சோழன் இருங்கிள்ளி என்னும் உருப்பசி இந்திர சிறுவனாகிய சயந்தன்மீது கொண்ட விருப்பத்தால் மனமழிந்து, அவன் பிரிவினால் வருந்தினாள்; அதனைக் குறிப்பால் அவளாய்க் குறமுனி முனிந்து அவளை 'மண்ணினிற் பிறக்க' வென சபித்தனை. சாபவசத்தே அவ்வாறே பிறந்து, மாதவி யென்னும் பெயர் பெறலாயினள். அந்த மாதவியின் கால் வழியிற் பிறந்தவள் இந்த மாதவி. அதனின் காதலே, இளங்கோ, நாடகக்காதை என முன்னர், அவளிடத்துப் பொருளிற் திருத்தல் இயல்பே. அப்பால்,

கன்னற் விருப்புடையோன் கற்குணமும் மிக்குயர்ந்தோன்
கொன்னைகுலத் தலைமைந்த தொன்மையளாய்ப்—பன்
[னிரண்டாண்
டேய்ந்ததற்பின் ஆடலுடன் பாடல் அழ கிரண்டும்
வாய்ந்த அரங் கேற்றல் வழக்கு.

என்றவாறு, மாதவினையச் சோழன் கரிகாற் பெருவளத்தான் திருமுன் அவனது அவையரங்கத்தே ஆட்சினித்தருளி அவனைச் சார்ந்தார் விழைந்தனர்; மன்னன் ஆராமதியும் பெற்றனர். குறித்த நாளில் மாதவி அரங்கேறி, கரப்பிய நூல்களிற் கூறிய முறை பிறழாமல், ஆடியும் பாடியும் அபிநயித்துங் காட்டினள். இவளது அழகிலும் ஆடலிலும் பாடலிலும் அபிநயத்திலும் ஈடுபட்டு, நெஞ்சம் அழிந்து, காமக்களிமயக் கெய்திஞன் மன்னர் பெருமான். மீண்டும், இவள் பால் எண்ணஞ் செலுத்தின் இகழ்ச்சிக்கிடனாதல் நிமித்தங்கள் கண்டு, அறிவைத் தெளிவு செய்துகொண்டு, தலையாங்கானத்து நாடகக் கணிகையர்க்கு ஆயிரந் தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்தல் நூல் வழக்காகலின் இவளுக்குரிய அம்மாற்று நிறை பொன்னை கொடுத்து விடுத்தனன்.

மாதவி மன்னவன்பாற் பெற்ற வினையாயிருபான்ம பரிசமாலையை, அவைஞர் சார்ந்தார், மாசோபாலுள்ள கூலவாணிகனுடைய கூனி யைகைக்கொடுத்து நகரின் பெருந்தெருவில் விலை கூறுவாளாய் நிறுத்தினர். அவளைக் கண்டான் கோவலன்; 'பரிசமாலையின் பெறுமதி ஆயிரத்தெண்கழஞ்சு பொன் என்றும், அதைக் கொடுத்து மாலையைப்பெற்று மாதவிக்குச் சூட்டுதலே தனக்கு மணமகளுதல் கூடுமென்றும்' கூனி கூறினாள்: உடனே மாலையை வாங்கினான்; அவளோடு மாதவி மாளிகைக் குச் சென்றான்; அவன் மாலை சூட்டி மணஞ்செய்கொண்டான்; அவள் தன் அழகில் மயங்கினான்; அறிவு கலங்கினான்; மாதவியாம் காதற் கடலில் மூழ்கிக் கரையேற வொண்ணாது செயலற்று ஆழ்ந்தனன்; அவன் பழைய நிலைமையை பொருளைந்து சிறந்த தில்லையென்று கருதினான்; கைப் பொருள் எவற்றையும் காளும் காளும் மாதவிக்குக் கொடுத்

தான் ; மனைவாழ்க்கையை முற்றும் மறந்தான் ; கண்ணகியைக் கனிந்தும் எண்ணுது துறந்தான்.

இந் நிலையில், அளவற்ற மகிழ்வுடன் கோவலனோடு கூடிவாழும் பெற்றாளாகிய மாதவி, பெண்மகவொன்றையும் பெற்றாள். மாதவி சுற்றத்தார், அம் மகவுக்கு என்ன பெயர் இடலாமென்று கோவலனை வினவினர்.

அதற்கு அவன், "கூறுவன் கேளீர்! முன்னொரு காலத்து, மனத்து முலத்தோன் ஒருவன், மாக்கலம் ஏறிப் பொருளீட்டச் சென்றான் ; காற்று மிகுதியால், கப்பல் சிதைய, மேலும் வழியின்றி, கடலில் உடைகலத் துண் டொன்றைப் புணையாகக் கொண்டு, சிலகான் தத்தளித்து நிற்பானானான். அன்னோன், முன்னைப் புண்ணியம் உள் ளோரை நினைவுறுவோன், அங்கோர் தெய்வம் தோன்றி, 'அஞ்சேல்! இதோ வருகின்றேன் ; என்னோடு மணிமேகலை ; சில நிமிடங்கள் அமைதி காத்தும் பொருட்டு, இந்திரன் என்னை எதிர்கொள்ள போதுகாத்து வருகின்றேனன் ; நின் துயர் கண்டு அதனை நீக்குதற்கு சுரந்து வந்தேன்' என்று உரைத்து அமிழ்தம் கை தீபற்றிற்று. அதனின், மணிமேகலை தெய்வம் மாதவி மகளுக்குரிய இடம் தீவதிலகம்" என விளை யிறுத்தான். அவ்வாறே தெய்வமிடம் மகிழ்ந்தனர்.

கண்ணகியின் பிரிவாற்றாமை.

மற்று, கடலலையால் பிரிந்த கண்ணகியோ பிரிவாற்றாமை மிகுந்து கடலுள் மூழ்கினாள் ; அழுதிய சிலந்து சிறிய மலைமுகடுகளில் நிலம்மனி யான் ; மேகலை புணையான் ; கொங்கை முன்றிற் குருந்தம் எழுதான் ; காதலி அனியான் ; சுழற்சனி புணையான் ; அயில் பொரு கண் களில் அருந்தளம் எழுதான் ; திங்கள் போல் மெற்றியில்

திலகம் இட்டிடாள்; நெறித்த கூந்தலில் நெய்யும் தடவினாள்; 'காதலன் என்று வருவான், கட்டழகனே என்று பாடுவேன்' என்னுஞ் சிந்தையளாய்ப், கோவலனே ஒரு நொடிப் பொழுதும் மறவாளாய்ப், அவன் கணிகையின் நேசத்தைக் கட்டுண்டதற்குச் சிறிதும் சீற்றங் கொள்ளாளாய்ப், புயலில் தூற்றுதல் இல்லாளாய்ப், இல்லற நெறியிற் சிறிதும் பிறழாளாய் ஒழுகி வருகின்றாள்.

இந்திர விழா.

ஆங்கு அவ்வாறாக. மூன்றாவது காலத்தில் தென்புலம் வளம்பெறற் பொருட்டு, தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்பான் சோழ மன்னனும், இந்திரனே வேண்டி யாற்றிய வாகீக, அவன் காலந்தொட்டு ஆண்டாண்டுதோறும் சித்திராபூரணையில் ஆங் நகரில் இந்திரவிழாக் கொண்டாடல் மரபாயிற்று. இச் சரித்திர நிகழ்ச்சித் சித்திரைத் திங்களும் பிற்று. வழக்கம்போற் பெரியார் கூடி இந்திர விழாவை நடாத்த நிச்சயித்தனர். விழாவின் நடைமுறைகளை நகரத்துக்கு அறிவிக்கும் வண்ணம் முரசறைவோனுக்குக் கட்டளை யிட்டனர். அவன், வச்சிரக் கோட்டத்தில் புன்னாமணங்கெழு முரசை யானைப் பிடர்த்தலை யேற்றி, "மன்னவன் செங்கோல் வாழ்க; மாத மும்மாரி பொழிக; நகரீர்! இந்திரவிழா இனிது கொண்டாடுவீராக; விழாக் காண்மின், வானவ ருலகம் வரிதாமாறு தேவரெல்லாம் வந்து கருள்வ ரென்பது ஆன்றோர் துணிபாகலின், விரிதரு மலங்காரித்திடுமின்; குலை வாழை நாட்டுமின்; கமுகின் குலை கட்டுமின்; கொடித் தொகுதி நாற்றுமின்; மணிகளை வண்ணஞ் செய்மின்; வாயில்களில் தோரணம் தொங்கவிடுமின்; மூத்த மாலையின் கொத்து நாற்றுமின்; மணியணிகளை மாண்புற வணிமின்; மங்கல வினாக் கேற்றுமின்; தூபவை குங்குடம் வைமின்; செழும்பாலிகை சேருமின்; பொற்

பண்ணைப் பொடி தூவுமின்; பூவண்ணக்கோலம் போடுமின்; கோயில்களை அலங்கரியுங்கள்; எத்திறத்தும் பகை கொள்ளன்மின்; சினத்தைத் தவிர்மின்" என்று இன்னன பலவுங்கூறி மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் ஆகிய இரு பகுதியிலும் முரசறைந்து அறிவித்தான்.

அம்மாசீற அலங்கரித்த நகரமக்கள், விழாக்குறிப்பிட்ட நாளிலே குழுமினர். நாளங்காடிப் பூதத்தின் பீடிகையில் தூபமும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து பலியூட்டினர். அப்பால், ஐவகை மன்றங்களிலும் தூச்சொரிந்து பலியிட்டதன் மேல், கற்பகத் தருநிற்கும் கோயிலிற் கொடியேற்றி, அளவிறந்த ஆடம்பரங்களோடு சென்று,

தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்திக்

கொணர்ந்து, 'உரைசால் மன்னன் கொற்றங்கொள்க' என வாழ்த்தி, விலைமகளிர் குலவினர் ஈராட்டினர். பின்னர்,

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வாலியோன் மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி வெடியோன் கோயிலும்

இன்னோன் தன் கோட்டத்தோடு பிற தேவகுலங்களுஞ் சென்றிறைஞ்சி வியந்து பாராட்டினர். கலை மக்களின் கலிப்புக்கோ அளவில்லை. மங்கல வாழ்த்தொலி வானவர் விண்ணுலகு வரைக்கும் கேட்குமாம் மக்கள் வழுத்தொலி முகிலிடையாறாய் நின்றது.

மாதவியும் சித்திராபதியும் கோயிலை வலம் செய்தனர். கோவலனைக் கண்டதும் கண்ணகியின் நெஞ்சம் கலங்கியது. அவள் மனம் நடுங்கியது. அதனால் அவளுடைய வலக்கண் துடித்தது! அவள் நெஞ்சம் அறிவின்றி மயங்கிற்று!

களிப்பேது! கண்ணகி கண்கள் அழுகை நீர் நிருத்தன; மாதவி கண்கள் உவகைநீர் உருத்தன. இவ்வாண்ணம், சொல்லொண்ணாச் சிறப்புடன் இந்திர விழா இனிது நிகழ்ந்தது.

விழா முடிவில், சடலும் காவிரியும் கலக்கும் சங்கமத் துறையில் நீராடுதல் மரபாகலின், நகர மாந்தர் கடலாடப் படுக்கனர். மாதவியும் கோவலனும் மலர்த் தாமஞ்சூடி, பொன்னாடை புனைந்து, விலையுயர்ந்த பொன்னணி மணியணிந்து, நறுமணம் தூபி, விண்ணிலுள்ளாரோ வென்று கண்டோர் ஐயுறும்வண்ணம் வனப்புச் செய்து கவின்பெறு துய்யாளனைக் கடற்கரை யடைந்தனர். ஆண்டுள்ள புன்னாகமர நிழலில், தூய புதுமணற்பரப்பில் சித்திரத் திணையால் சுற்றி வேலிக்கு மேற்கட்டும் கட்டப்பெற்ற வென்கால் பரணிலிருந்த கோவலனை கோவலனெடு சேர இருந்தாளாகிய மாதவி, பரந்த வசந்தமாலை கையினிருந்த நல் யாழை வாங்கி, நரம்பு முறுக்கியன திருத்தி, மாகதக்கிதாடி பல மாண்பில் சிலாதிரம் தூண்ட அழகிய செங்காந்தள் மலர் போலும் மெல்லிய விரல்களால் மீட்டினாள். கோவலன் கையை நீட்டினான். யாழை அவன் கைக்கொடுத்தாள். வாங்கிய கோவலன் பல்வகை அகப்பொருட் சுவை குழைந்த கானல் வரியைப் பாடி வாசித்தான். மாதவி, 'ஓ! ஓ! இவன் நிறைகுளிர்புனல் காதலுடையான் போலும்! அல்லதுயின் அகம்படி சுவைபட வாசியான்!' என்று ஐயுற்றாள், மகிழ்ந்தாள், வீணையை அவன் கையினின்றும் பெற்று, தானும் சேரிநூல் நுணிப்புடையாள் போலச் சில கானல்வரிப் பண்களோடு பாடினாள். ஆனால் கோவலன் பாட்டிற்கு எதிராக இன்னணம் பாடினானேயன்றி, நுணிப்பு வேறுபட்டான் அல்லன். எனினும் கோவலன், அவளைப் பிரிதற்கேற்ற வாழ்நிலையைப் வகுத்து கூடினமையின் இனங்கொண்டோனாயினன்.

கோவலன் மாதவியைப் பிரிதல்.

"கானல்வரி யான்பாடத் தாளென்றின்மேல் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடிலனென்"

என்று கூறி அவளைக் கைவிட்டுச் சென்றனன். மாதவி மனங்கலங்கித் துணைவலியைத் தணந்த துக்க மீக்கூர்ந்து தனது மனையை அடைந்தாள். அடைந்தவள் மேனிலை மாடத்திருந்து கோவலனை எல்லாரும் வருந்தினர். பிரிவென்னும் பெருங்கொடுப்பு அவனை மிகவே கனன்றது.

அதனை அவனுக்கு அறிவித்துச் சினத்தைத்தணிக்து அழைத்துவரச்செய்ய உன்னினாள். கன்மாலையில் தொடுத்த காலைமுப் பூவின் வெள்ளிய மடலான்றில், இதழ் விரியா அருட்பொன்னை மழுத்து கருவியாகக்கொண்டு, செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து,

"காதல! நின்னினைப் பிரிந்த னுக் கொன்ற கோபத்தாள், எல்லை யெல்லாம் பிரிந் இன்னல் பல்லூர் தாமன்று. தாமன் தன்னை யானைத்தால் எனை அவனை உள்ளினினிலாள் நோற் தாள்கின்றது. இனியெனினிலென்பான் கூடலைக்கு இன்ப பிரம் மாடலைக்குத் தாள்ப பிரம் செய்யும் இளமானன் நோயுமே. அதுவல், அவள் நன்னெஞ்சு இன்னதென்ன அறிந் லன். அங்கோ நோய் வந்து தீர்தான்றினால் கலைவனர் இங்கதோர செருக்கினல்லன். இவள் வாலறுங் தோடிய தன்கையையாயன். அதனினும், விரக விதனத்தால் மெலிந்த வளியையாய்த்தோற் பிரியுகையாயன். அருளமைந்த காலை! இக் கொடிய நோயினும் பெரிய துயரைக் கடிந்திடுத்து நீங் கியது நிலையுடையன்று. இதனை அறிந்தீர வருந் வீரன" என்ன வாழ்த்தினாள். வசந்தமாலையும் கொடுத்தாள். "இந்திரவிழவில் வருகிய பொருளுந்தரும் பொருந்து வளமிகச் சோமரைக்கு அறிந்துவிரைவில் அனைத்து வருதி" என்ன அனுப்பினாள். வசந்தமாலையும் வளமிகச் சுவர்மனி மயிலையிழி சுவிரும்

பரிவொடு ஓலையைக் கொடுத்தனள். அதைப்பெற்ற பெருங் குடிச செல்வன் அதில் தீட்டிய வெண்டுகளினுங் கருத்துக் கொள்ளாது மறுக்கலாயினன். செயல் பணியாது திருப்பிய வசந்தமாலை, கோவலன் நிலையை மாதவிக்கு முன், "இம் மாலை வாராராயினும் நாளைக் காலையிலாவது வரக்காண்பது" என மொழிந்து வருந்தியிருந்தனள். இஃதிங்ஙனமாக.

தேவந்தி வாலாறு.

ஆம்பலார் நகரில் மாலதி யென்னும் பெயருடைய ஓர் பார்ப்பனி, தன் மாற்றாள் பிள்ளைக்குப் பாலூட்டி வருவள். அப்போது பால்வெறுக்கி அழுது முரண்டி நின்றது. மாலதி வெய்ய கோபங்கொண்டு, "அந்தோ, இதனுக்கென்ன செய்வேன்! பார்ப்பனனும் அவன் மனைவியும் பிள்ளையைக் கொன்று விட்டேன் என்று படாப்பழி சுமத்துவரே" என்று அஞ்சி, அக்குழவியை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள கோயிலுக்குள் எங்குஞ் சென்று, "தெய்வங்காள்! அடியேனுக்கு கொடுத்த இப்பொல்லாங்கைத் தீர்த்தருளல் வேண்டும்" எனக் கூவி யிரந்தாள். அங்ஙனம் முறையிரந்தும் குழவி வெறுத்து எழாதாகவே, பாசண்டச்சாத்தன் கோயிலை யணைந்து, "பெரியாள் கொண்ட இன்னல் தவிர்த்து இம் மகவுக்கு உயிர் தந்தருள வேண்டுமென்று அழுது தொழுது வணங்கி நின்றாள். அந்நாள் இரவில் சுடுகாட்டுக் கோட்டத்திலுள்ள இடுபிணந் தின்னும் இடாகினிப்பேய் மூன்று, அழகிய பெண்ணுருக்கொண்டு, அவள் முன் நின்று, "வா முற்ற மற்றவளே!

செய்தவ மில்லார்க்குத் தேவர் வாய்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே.

என் வீணை பழுதிடக்கின்றாய்! நின் கையிலுள்ள பிணத் தைத் தா பார்ப்போம்" என்று வாங்கி விழுங்கி விட்.

டந்து. மான் செய்வாள் மாலதி! இடிமுழக்கம் கேட்ட மயில்போல் வந்து அழுதாள்; மண்ணிற் புரண்டு கதறினாள். அன்னாள் முன் சாத்தன் தோன்றி, "அன்னாய்! மன்னவை யுயர்ந்துகின்றனை! அழாதே! நீ கொண்டுவந்த மகனை யுதோ தோன்றுகின்ற சோலைக்கீழ்க் காண்பாய்" என்று வாக்களித்துத் தானே அக்குழந்தையாய் அவ்விடத்தில் புக்குக் கிடந்தான். மாலதி மகிழ்ந்து பிள்ளையை வாரியணைத்து உச்சிமோந்து எடுத்துப்போய்த் தாய் கைகொடுத்தனள். அக் குழவியாகிய சாத்தன் வளர்ந்து கல்வித்துறையில் வல்லனாகிக் காவலாட்பருவம் எய்தினை காலையில், தந்தை தாயாய் இறந்தனர். அவர்கட்கு நீர்க்கடன் செலுத்துங் கடனையாயும் முறைப்படி செய்து, அதன்பின் ஒரு கல்லாசீர் மணந்து மாட்டியாகவே செல்லுமட்டும் வாழ்ந்தனன். அந்நல்லாளின் பெயரோ தேவந்தி என்பது. பின்னர், மதுரையம் பிரியக் கருதினனன்; பிரிதற்கு எற்ற தெய்வ தாமனம் தன் மனையாளுக்குங் காட்டுவான் விரும்தனன். அங்ஙனம் காட்டற்பாலது தன் தெய்வ யாக்கையே. அந்தீங்கனி வடிவை அவள் தானின் பொறுக்கலாற்றாள். வகையினில், தீங்கனி யாக்கையை மங்கலிகள் தங்கள் காவல்கில் அற்று. அதனினும், இக்குறைபாடு நீங்க "இவள் தன் மாய் தெய்வக்கோலத்தைத் தந்து ஆற்றக் காட்டுதாக" என்று மனங்கொண்டான்; என்ன நினை மாறு இளமையாய் எழிலும் பொலிந்து வடிவம் தெய்வத்தி தன்மைபுனல் பினிர்ந்தது; தன் டன்; வணங்கினன்; வாழ்த்தினன்; மெய்ம்மறந்து நின்றனள்; என்னுயிர் நிற் கோலத்திறுக்குத் தெரியாய் டாற்றுதலினும் சிலபுரியாய் தோற்ற தால் சென்றி என்று குறிப்பிடுகின்றாள். அந்நிலையில் தான்... மாசாத்தன், "நி நிற்குறுயர் யாய் கோட்டத் தேறு வருக" என்று தன் ஊருக்காக்கினன். பிறர்க் கெய்லாம் "நீர்த்தகம் நூடர் சென்

கின்றேன்" எனச் செப்பிப் போயினன். அந்நாள் காள் தொட்டு, தீர்த்தத் துறைபடியச் சென்ற மன் காதலற்குத் தீங்கு நேராவண்ணம் காத்துத் தருவாளென்று நோற்று கொண்டாள் போன்றொரு கற்பினை செய்துகொண்டு, காள் தோறும் சாத்தன் கோயிலிற் சென்று வழிபாடு செய்து வருகின்றாள் தேவந்தி.

கண்ணகி கதை.

இவள் இளமை தொட்டுக் கண்ணகியிடம் தோழமை பூண்டவள். பார்ப்பனத் தோழியாகிய அவளும் காதலன் பிரிந்த வேதனை நிலையைக் கழறினாள் கண்ணகி. தேவந்தியோ, கண்ணல் மிகவும் நேசிக்கப்பெற்ற நல்லாள் இல்லாள் பிரிவைப் பற்றி யாதுஞ் சொல்லாள் எனினும், அவளும் அதன் துன்பத்தை ஓர்ந்து அதைத் தவிர்த்தற்பொருட்டு சாத்தன் கோயிலை நண்ணினாள். அவற்கு, அவருக்கு, பிறர்க்கு, நல் ஆகியவற்றைத் தானினாள் "கோவலனுங் கண்ணகியும் கூடிவாழ அருள் புரிதி" என வேண்டினாள்; கண்ணகியிடம் சென்றாள்; "நீ இனிக் கணவனுடன் கூடிடம் பெறுவாய்" என்று வாழ்த்தினாள்.

வாழ்த்திய தேவந்தியை நோக்கி, "மாண்டாய்! நின் அருமை வாக்கால் இன்னணம் வாழ்த்தினை. ஆகின், காதலனுடன் கூடிவாழும் பிறவி பெறுவேன் எனினும் என் நெஞ்சம் இயலுகின்றதுகாண். அங்ஙனம் இயலுதற்கு ஏற்ற நிகழ்ச்சி யொன்றும் உண்டு. அதை நினைத்து வினவுவேன்.

"மதிறுதால்! நேற்றிரவு ஒரு தீநிமித்தம் கண்டேன். அஃதியாதேனவெனின், கேண்மதி! "யானும் என் கொழுநனும் இந்நகரை விட்டு வேறொரு பதியை நோக்கிச் செலவினேம். போகுங்கால் அவர் என்னை இங்கு பிரிவரது

கைகோத்து அழைத்துச் சென்றார். நாங்கள் போய்ச் சேர்ந்து அப்படியிலுள்ளார் எங்கள்மீது படாப்பழி யொன்று எற்றி எண்ணைத் தூற்றினர். கோவலற்கொரு தீங்கு நேர்ந்தென்றுந்த சாற்றினர். இடி தேள் விழப் பெற்றான் போலப் பதறினேன். அப் பொல்லாங்கைப் பொறுக்க லாற்றாது, செல்லுந் தகுதியில்லா நான் அவ்வூர் அரசன் முன்பு சென்றேன்; வழக்குரும் உரைத்தேன். அந்தோ! அவ்வூருக்கு என்னுல் ஒரு தீங்கும் உற்றது. தோழீ! அதை என்னென்று இயம்புவேன்! அது நீத் தண்மையதாதலால் நினக்கு விளித்துரைக்க விரும்பேன். அதை நீ கேட்பாயாயின் நினைக்கது சிரிப்பைத் தரும்" என விளம்பினன். செவிக்கொண்ட தேவந்தி செப்பு கின்றனள், "பொய்மொழி!

கைத்தாயும் அல்லே கணவற் கொருதோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பில்; போய்க்கெதுக; உய்த்தக்
கடவொடு காவிரி சென்றலேக்கு முன்றில்
படல் அவிழ் நெய்தலங் கானல் கடவுள
சோம குண்டுஞ் சூரிய குண்டமும் கானலுழ்ந்திக்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவனோடு
காவின் புறவர் உலகத்து.

[நீ நின் கணவனுடன் வெறுக்கப்பட்டவளாம் என்பது... தவறுக்கு யாருங்காரிகை. முன்னோட்பிறப்பில் நின் கணவனும் வேறுபெண் ஒருத்தியை மணந்தான் போன்றதைச் செய்ய யாது தவறினை. அதனால் இத்தகைய தீங்குகள் சூழலாயின; அதை நின்னை வருத்தாமல் முடியும் என்றாலோக. அறிவுரை! இவ்வாறாக் கவலன் மனைவியாகப் பிறந்த புனிதகாரி வந்த பூம்பின் அப்படியாதலைத் தனிச்சிறும் தவறைமை வாய்ந்த இளங்கி தடாகங்களன் உள. அவை காவிரி தன் கிளைக் கொண்டிருக்கின்ற கடலொரி பரவிக் கிடக்கும். அதிலம் சங்கமுகத்

துக்கு அயலிலே, மலர்கள் இதழ்களை விரிக்கின்ற நெய்தலும் கானலிலே பிரகாசிக்கின்றன. அவை சோமகுண்டம் சூரியகுண்டம் எனப்படுவன. இவ் விரு தீர்த்தங்களிலும் பக்தி காமவேள் கோட்டம் சென்று தொழுதார் கணவன் அன்பு மீதூரப் பெறுவார்; என்றும் மணவாளக்கோலம் பிரியா வாழ்வு பெறுவார்.] இவ்வுலகத்தே இங்ஙனம் இன்பநுகர்ச்சி அனுபவித்தே தேவருலகத்திலும் பிறந்த நாயகனை நீங்கா கற்பினாள் கண்ணகி. கற்பருங்கலமே! ஒருவன் நாவிலும் சேயாய் அவற்றில் ஆடா மன்மதனையும் வணங்கிவருகின்றார்" என்றனள்.

அவற்றை உளங்கொண்ட கண்ணகி, தீக்கடவுளை நோக்கி, "அன்பே! நீ என்பாற் கொண்ட அறிவுத்திறம் என் பழவினை தீர்க்கக் கழுவாய் விளம்பினை. அதற்கு மிக மிக நன்றி பாராட்டுகின்றேன். ஆதலால், பயன்தீர் நீராடுதலும் பிறதெய்வம் தொழுதலும் வாய்க்க இயல்பினால்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

என்பது தெய்வத் திருமொழி யன்றே! கணவனை உள்ளன்புடன் தொழுது வாழும் மடவார் கடவுளையும் தொழுதல் வேண்டுமோ? வேண்டா. கணவனைப் போற்றும் கற்பு மங்கையர்க்கு ஒல்லாதது ஒன்றுமில்லை" என்று இங்ஙனம் சொல்லாடிக் கொண்டிருக்கையில், வினைமுது முடிவுக்கு ஒரு பணிப்பெண், "அம்மா! நம் வாயிற்றாழ்க்கு வருகின்றார் நின் நாயகர்" என்றனள்.

மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் காய்வகான்ற
லாவதாகிய மாலைக்காலத்தில் பகலையிற் பிரிந்தான் நாயகன்; பள்ளியறையில் செய்யும் நிகழ்ச்சிக்கு சேக்கையில் அமர்ந்தான். காதலனும் காதலியும் அன்யோன்ய அன்பில்

கோவலன் வருகை.

எழுந்தாக்கத்தன்று; இயம்புகை தகையதன்று; "பிரிந்தவர் கூடுறுல் இனிதேவண்டுதலால்" என்றார் கவிதேவர்தர் கம்பர்; சின்னாளாம் ஆங்குப்பிரிவாகில்லை கூடற்று. தன் இல்லாளின் மேனி வாட்டமும் மன வருத்தமும் கண்டான் வணிகப் பெருந்தகை. தன் தவறைத் தானுணர்ந்தான். அதனை வெளியிடாதிருக்க அவனுக்கு கூடவில்லை. அறிவுடையோர் சோர்வையுடையோர் தாம் செய்தறியாத செயல் தவறையே யெண்ணுவரன்றோ உடனே அதற்கு வருந்துவானேறு! மாண்புமிகு பெண்ணினத் துதித்திடுவானேறு! அங்ஙனமே கோவலனும் வாய்விட்டு, "மன் அன்புக்கருங்கலமே! பெண்கள் தாயகமே! தனியுத்தெருவதான உருவப் பாவையே! நின்னைத் தனிமையாயிருத்தித் துயரங்கள் செய்த இக் கொடியேனை மன்னியென்னை மன்னியாயோ? இத் தீவினை செய்த தன் கொடுமை மன்னியாயோ? இத் தீவினை செய்த தன் கொடுமை அறுக்க வியலுமோ? மன்னியாயோ" என்று வருந்தினான்.

சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலக்குரு மன்பொருட் குன்றம் தொலைந்த;
இலம்பாடு தானுற்றதும்

என்ற நிலையில் தன்னை நினைத்து மனம் நொந்து பொருட். குவியலால் பெரும் கூட்டம் கொள்ளை கொண்டு போனதால் வருந்தினான். அந்த கூட்டம் தனக்கு மனமகிழ்ச்சியளித்தது. இதனை உண்மறிந்தார் உண்மறிந்தார் தானும் மனைவி மக்களை விட்டு" என்று வருந்தினான்.

தன்னை தேற்றிக்கொண்டான்; "தேவி! மாதவிக்குக் கொடுத்த இனிய வாழ்வை நான் இல்லாத வாழ்வை கருதினாலும் **இலம் பாடு தானுற்றதும்** என்று" என்று நினைத்தான். இன்னல் தனை தனிமையிலிருந்து சுவைத்தல் மனதிற்கு ஆறுதல் என்று எண்ணினான். அந்த வீட்டை மனைவியின் நினைவு வீட்டை விட்டு நீங்கியது

மைக்கு வெறுப்புங் கொண்டிலள். இதுவன்றி, கொடுமுன் சொற் கடவாக் கோதையர் நடுங்குணர்ப். கணவனும் விருப் பத்தை நிறைவேற்றக் கருதினள். அவளிடம் பொருள் ஒன்றும் இல்லை. நகைகளுஞ் இல்லை. யாவும் மாதவிக்குக் கொடுத்துத் தீர்ந்தன. ஆனால், ஒரு சோடி சிலம்புகள் இருந்தன. இவற்றைக் கொண்டு காதலனைக் களிக்கச் செய்ய லாம் என்று அகமலர்ந்தாள்; ஒளி மிகுந்த முகம் மலரிருந்த புன்முறுவலைப் பூத்து அப்பொழு தலர்ந்தசெங்கை மையாயினை வென்றது. அம் மலர் முகத்துங் கிளிமொழி காதலன் முகம் பார்த்து, "என் ஆருயிர் அமிழ்தே! காணற்க; தையற்க; இன்னும் இரண்டு சிலம்புகள் இருக்கின்றன; கொடுவன்; பெறுக" எனச் சாற்றினள்.

"செவியகம் நிறைதரப் பொழிதருஞ் அமுதெனும் மொழியாளே! நீ சொன்ன சிலம்பை மறுவரச்சுக் கொடு போய் விற்று, அவ்விலைக் கொடையாகவை முதலாக வைத்து, அங்கேயே வாணிகஞ்செய்தும், நான் இங்காகாயின் தெய்வத்துக் செல்வத்தை மீட்டும் சூட்டுக் குவிப்பேன். நாம் பிரியலுற்ற இன்று விடியற்காலையில் வெளிப்பட வேண்டும்" என்றனன் கோவலன். முன்னைப் பிறப்பின் வினையாக்கிய கூடுவிளக்கம் அவன் மனம் இன்னணம் கடலாயிற்று. மாதவியை அதற்கு உடன்பட்டாள்.

வழிச் செலவு.

இருவரும் வான் கண் விழியா வைகறைப் போழ்தில் புறப்பட்டனர்.

புறப்பாடு.

ஏழகத் தகரும் எனைக் கவரியும்
தாமயிர் அன்னமும் தனெனத் திரியும்

நெடிய பெரிய தெருநிலை சிறந்த மாளிகையைக் கடந்தனர். அழகிய ஆவணமீது அறிதுயில் கொள்ளும் **திருமால் கோயிலை** வலஞ் சூழ்ந்தார். ஐம்பெருங் இலக்கணமுடைய மாமோதி நிழலிலிருந்து **புத்தன்** அருளிய ஆகமத்தை, அந்தராசாரிகள் மறைந்திருந்து கூறிப் பொருள் விளக்குவனவும், இந்திரனால் நிருமிக்கப்பட்டனவும் ஆகிய **ஏழு விகாரங்** களையுங் தொழுதனர். பின்னர், புலாலுணவு விடுத்து பொய்ம்மொழிதல் தவிர்த்து, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலிய இழுக்குகளை ஒழித்து, நன்னெறி நின்று அறநூல் உணர்ந்த பெரியோர் உறைவது **பூரீகோயில்; அருகன்கள் பஞ்ச பரமேட்டிகள்** எனக் கூறுகின்ற அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள் ஆவார் ஐம் படிவினர் வதியும் தெருக்களின் ஐஞ்சக்தியுஞ் சந்திக்கும் இடத்திலுள்ள நிகர் பெரிதொரு மன்றத்தில், பொன் மலர் தூங்கும் பின்னடமர நீழலில் சாவகரால் ஆக்கப்பட்ட ஏழுனி னைங்கும் **சிலாதலம்** உளது; அதைத் தொழுது வலங்கொண்டனர். அப்பால், மலையிற் பிறந்து என்றென்றும் வற்றுதலின்றி இடையறது ஒழுகும் பெரிய பாறுபோல் வது உலகிலுள்ளார் போக்குவரத்தைப் புரியும் நகரப்புற வாயில்; அதையுங் கடந்து, அரச காலையின் காப்பைக் கொண்ட **இலவந்திகைச்சோலை** மதிலைத் தான்டி, புனல் வளம் பொலிந்த பொன்னியின் வடகரைக்கணுள்ள

பொழிலையுங் கழிந்து, ஒரு காவததூரம் போயினர். நெடுந் தூரம் நடந்தறியா பசுங்கொடியின் மலரடிகள் கடுக்கலாற்று மல் மிகவும் வருந்தின ; இடையோ இறுவதுபோல் இளைத் தது. இளமரச்சோலை யொன்றை யுடைந்தனர்.

மிகவும் களைத்து மெலிந்த பூங்கொம்பை யன்னாள், அருந்தை நிகர்த்த எயிறுஇலங்க, பூதிராமழலை மொழி யாலே "மதுரை யென்னும் பூதூர் யாதோ" என வினவினாள். கோவலன் தடியிடையின் துயர் உணர்ந்தான் ; உள்ளம் நெக்குருகினன் ; துன்ப நகை நகைத்தானுகி, "மதுரை இனி அணித்தே யுளது ; ஆனாங் காவதங் காண்" என விடை பிறுத்தான். மூன்றாது காவதத்தை ஐந்தாறு காவதமென்று பொருள்படுமாறு ஆனாங் காவதம் என்றது அவள்தன் மனக்கிட்டம் குன்றுதிருக்கும் பொருட்டே போலும்.

கவுந்தி யடிகளைக் கண்டடிபணிதல்.

இன்னணம் மொழியாடிச் செல்லையில் வந்திப்பார் தோர் அறப்பள்ளியில் ஆருகத மதத்தினராகிய கவுந்தியடிகளைக் கண்டனர் ; அடிபணிந்தனர். கவுந்தியடிகள் அவர் விருவரையும் நோக்கி,

"உருவுங் குலனும் உயர்பே ரொழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா தோன்பும்
உடையீர்!

என்னே நீவிர் நிலனோ ளாளோபோல் தமது நகை மனையைச் சுற்றத்தை நீங்கி, வறுமையுற்றிருவென வலவயிற்கீர்! இங்ஙனமே மடக்கொடியுடன் வெளிப்போதல் தம் மரபுக்கு ஏற்றதன்றே! யாது கருதி யிங்ஙம் போந்தீர்?" என வினவினர். "மிருதவத்தீர்! நான்கன் றிவ்வாறு வெளிப்பட்டது மரபன்றென்று நீவிர் நுவைத்து வியவியது

உறுதியே. அவ் வரைக்கு வற்ற மறுமொழி கொடுத்தற்கு அடியேன் ஆற்றல் பெற்றிலேன். எனினும் முன்னோர் தொகுத்துவைத்த பொருட் குவியலை அறியாமையால் அழித்த யான், மதுரை சென்று வாணிபஞ் செய்து அதனை மீட்டுந் தொகுத்தலில் வேட்கை கொண்டேன். அவ் வேட்கைதான் எம்மை இவ்வாறு வருதற்கு ஏவிற்று" என்று கோவலன் கூறினான். அடிகள் அவனை நோக்கி, "நுங் கருத்து இதுவாயின் இப் பொற்கொடியின் அடி கமலம் மிக நுண்ணிய; மதுரை செல்லும் வழியோ கல்லும் முள்ளும் நிறைந்த காட்டை இடையே யுடையது; அக் கல்லிலும் முள்ளிலும் செல்லல் இவளால் ஒல்லாது; இவள் அதற்கேற்ற கண்மையளல்லள். இனி, ஊழ் என் செய்யுமோ! அவ் ஆழ்ந்த வலியன்றே இங்ஙனம் நம்மை யீர்த்து வந்தது! நும் முடிபறிவிற்கும் இயல்பாகக் கூட்டிச் செல்லல் தெரியலன். நு. அதனின், இனிச் செல்லுதலை ஒழிமின் என்று யான் கூறினேனாக. நம்மை இட்டு வந்த விதியே வலிய நு. அதுகிடக்க. யாதோ

மறவுரை தீர்த்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங்கு அறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதிலர் மதுரைக்கு
முன்றிய வுள்ளம் உடையேன்.

ஆகலின், யானும் உங்களோடு வருவேன்" என்று கருணை யொழி மொழிந்தார். அவரைக் கோவலன் கையாற்றொழுது காவாய் மறுத்து, "அடிகளே! நீவிர் இவ்வாறு அருள் புரிவீராயின் இத் தொடி வளைக் கோவலிகன் தாயலைவாம் இல்லாழுதே நீக்குதிகன்" என்று பராவினான். மேலும் காவற்கு யானை மொழியும்; "கோவல! நாம் போகக் கடவ காவிய வழியில் இன்னல் விளைவிக்கும் இடையூறுகளோர் பலவுள்ளன. அவை இன்னவை யென்பதனை நீ அறியாய்.

அவற்றை விவரிப்பேன் கேள். கதிரோன் வெயிலொளி யைக் கண்ணுறப் பார்க்கவும் ஆற்றுக இரு மையங்கொடியை கொண்டு பொழிலூடு செல்குவ மெனின், அங்குப் பூ மலர்களால் தூர்ந்து அடையாளங் காண வியலாதனவாகிய வள்ளிக் கிழங்குகளை அகழ்ந்தெடுத்த குழிகள் பல உண்டு புதிதாகச் செல்வோர் அவற்றை அறியாமற் பிற்ந்து மிக்க வருத்தமுறுவர். அங்ஙனம் விழுகினின்றும் கட்புல் பொருட்டு நிலைநோக்கி நடக்கின், காற்றுக் கிளைகளில் முறிந்து தேனிறைதுகும் பலாக்கனிகள் தலையில் தாக்கினும் தாக்கும்; வெள்ளிய பலாவினைகள் இவள் கால்களிற் பருக்கைக் கல்லென உறுத்தவுங் கூடும். சோலைகள் மலிந்த வழியையன்றி வயல்க ளூடு செல்குவ மெனின், பின்பிடித் துண்ணப் பாயும் நீர்நாயைக் காணினும், கயற்கெண்ணை கள் புரளக் காணினும், வாளைமீன்கள் தாவக் காணினும் இக்காரிகை கலங்குதல் கூடும். நத்தை கண்டு முதலிய வற்றை அறியாமல் மிதித்திடின் அதனுளுண்டாங்துன்பமோர தாங்கொணாதது. இவை போன்ற தீங்குகள் இவ்வும் பல வுண்டு. ஓ பெருங்குடிச் செல்வ! நீ நின்னோடிருப்பிய மனைவியோடு செல்லுகையில் அத்தீமை களனைவற்றைக் குறியறிந்து ஒதுங்கிச் செல்லல்வேண்டும்" என இவ்வாறு உணர்த்திய கவுந்தியடிகளோடு அவ்விருவரும் புறம்பணி வழிக்கொண்டனர்.

அப்பொழுது, என்றும் இடையறாது ஒலிக்கும் காவிரி நீரொலியேயன்றிக் கிணற்று நீர் இறைக்கும் ஏற்றம் பூட்டை முதலியவற்றின் ஓசை கேட்கப் பெறாத மருதநிலக் காட்சி. மருத நிலத்தின்கணுள்ள செங் கொல்லும் செழுங்கரும்பும் செறிந்துவளர் கழனிகளின் வனப்பைக் கண்டனர். அவற்றின் மருங்கே பொருந்தியே நீர் நிலைகளில், தாமரைக் காடுகளில் வாழும்,

கம்புட் கோழியும் கனைகுரல் நாரையும்
செங்கால் அன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்
முதலான பறவைகளின் ஓரவாரமும்; அறுகையும் செந்
நெற் கதிரையும் குவளை மலரையும் கலந்து தொடுத்த
மாலையை மேழிகளிற் சூட்டி, பொன்னேர் பூட்டி, நிலத்
தைப் பினைபார்போன்று உழுதவார் பாடும் வர்மங்கலப்
பாட்டோசையும்; மெய்ம்மேற் படிந்த சேற்றுக் கோலத்
தோடு கார்நாடும் பள்ள மாதர்கள் களிக்குப் பாடும்
குரவை முழக்கமும்; சுந்தம் முகம் போன்றதன்றே பங்க
யம், கண்போன்றதன்றே கருநெய்தல், வாய் போன்ற
தன்றே குமுதம் எனப் பரிவுகாட்டாமல் உவைகளைக் கவர்ப்
புல்லொடு கவர்ந்தெறியும் கடைசியர் கனிவாயொலியும்
பகலவர்களிய ஒரு முழுக்கத்தைக் கேட்டனர். இங்ஙனம்
காண்பவற் கேட்டல்களால் வருத்தம் தோன்றுதாகக் காவிரி
யாற்றின் கரையழகிலே கடக்கலாயினர்.

இவை போல, சிகரம் வானவன் கொற்றிருவிக்கும் யானைத்
தென் வானம்புரிக்கும் வாய்ப்புப் புத்தியின் சுவையிய
புகை புகழ்கலிங்கமும் கோள்த்து பஞ்சாழிற் பகலோன்ற
மாட்சிமை நெறி தோன்றப் பெரிதாய் இருப்பிடங்களும்;

பரப்புநீர்க் காவிரிப் பாலைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விடாப்போர் பழவிறல் வயிரமும்

(அதாவது, மரிப்போர்களிடம் இரக்குமதியும் உலகு காவ
லுறுகிய கொங்குளிடம் வெற்றியையும் தங்கள் முழவால்
வளர்க்கும் தயவாளர்கள் வாழ்வென்று, மனமுடைய அந்தச்
சிறிய வயிரமும்) உள்ளிட்ட சிறப்புகள் பல பழுதிலனாயும்
பரந்துவிளைவுகளிடை தோய்வினர்.

இவ்வாறு போவோர், காளைான்.யக்கு ஒரு காவதத் திற் கதிகமாக நடந்து தெய்லக்க மாட்டாராய்ப் பலகான் நடந்து **சீரங்கம்** என்னும் திருப்பதியை அண்மினர்.

சாரணர் எதிர்ப்படல்.

ஆங்கே, புகார் நகரப் பட்டினப்பாக்கத்தில், தேவர்க ளுறையும் மணிமாடு மலர்ச்சோலைக்கண், பிண்டி மர நிழலில் இடப்பட்ட சில கலந்திலிருந்து யாவ்வமை பிறழா புற நெறியை யாவருங் கேட்கும் வண்ணம் கூறியருளுநர் **சாரணர்** இருவர் வந்து தோன்றினர். அவரைக் கண்ட வயந்தியு கள் முதலாயினர் மூவருந் '**பண்டைத் தொல்வினை பாறுக**' என்று எண்ணினராகிச் சாரணர் தாள்களில் தலையுறத் தாழ்ந்தனர். அச்சாரணருள் மூத்தோன் முக்கோல் மணிச்சி யுடையோனுகளின் மனையின் நீங்கி வந்தார் இருவர்க்கும் பின் நிகழ்ச்சிகளையும் தெரிந்தானெண்டானன்; எனினும் அன்னேனென் விருப்பு வெறுப்பறுத்த வீரரைகளால் இயன்ற வருக்கும் மெக்கடவதாகிய ஞானமும் பற்றி அவலங்கொண் ளாது, வயந்தியை நோக்கி,

> "கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணுய்!
> ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை,
> இட்ட வித்தின் எதிர்ந்து வந்தெய்தி
> ஒட்டுங்காலை ஒழிக்கவும் ஒண்ணு.

என்றியும், யாக்கையோ நிலையற்றது. அதனை யுடையோரும் யாவரும்,

> அறிவன் அறவோன் அறிவுவாம் பிசந்தான்
> செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
> தரும முதல்வன் தலைவன் தருமன்
> பொருளன் புனிதன் புராணன் புலவன்
> சினவரன் தேவன் சிவகதி நாயகன்
> பரமன் குணவதன் பாதத்தில் ஒளியோன்

தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பொியவன் செம்மல் திகழொளி
யிறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்
குறையில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருண்முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் வினைக்கொளி

ஆகிய இறைவனை அருளிய அருள்நெறி பிழையாது ஒழுகல் வேண்டும். அங்ஙனம் ஒழுகுதலென்றிப் பிறவியாகிய சிறை விட்டு னின்றும் நீங்க வியலாது" என்றின்ன நீதியுரை பகர்ந்தனன்.

இங்ஙனம் சாரணனை அருளிய உண்மை மொழிகளைக் கேட்டு மகிழ்ந்தடிகளும் வையெதிர்த்துக் குரல்விட்டு,

" ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானக்
திருமொழிக் கல்லதென் செவியகற் றிறவா.

காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு
காம மில்லது ஈவிலா தென்ற.

மூவரை வென்றோன் அடியினை யல்லது
வையகைக் காணினும் காறு வென்கண்.

அருணறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது.

அருகாசனன் அறிவோர்க் கல்லதென்
திருவையும் கூடி ஒருவழிக் குவியா.

மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசை யுள்ளி தானணிப் பொறுதி.

இறையில் இன்பத்த இறைமொழிக் கல்லது
மறுதா ஓதிலென் மனம்புடை பெயராது."

என்று போற்றிப் புகழ்வாராயினர். அப்புகழ் மொழியைச் செவிக்கொணடெழுந்த சாரணர் "பவந்தருபாசம் கவந்தி கெடுக" என்று கூறி அந்தரத்தே விரைந்து சென்றனர். அவர்தம் உருவம் மறையும் வரையும் அவரை நோக்கித் தொழுது நின்ற மூவருமம் மேலும் நடந்து சென்று காவிரியை ஓடத்தாற் கடந்து அதன் தென் கரையை அடைந்து ஆங்கண் போதுகள் மலிந்த குளிர் மரப் பொதும்பொன்றில் தங்கினர்.

அவ்வழிப் பாத்தினமைத் தொழிலாய் புரிதாய்க் வாழ்க் கொண்டாளொரு பொது மகளும் பயனில் சொற் பேசுவாரெனை பேணுமகனுஞ் சேர்ந்து அங்க மணஞ்செறி சூழலில் வந்து, கன்னிகையும் யும் கோவலனோடிங் நீங்க, 'காமனும் இரதியும் போலுமிவர் யாரெனக் கேட்டு அறிகுவம்' என்று கலங்கிபோற் சென்று "பட்டினி விட்டிலம் தமித்தீர்! இவ் விருவருமம் யாவர்?" என வினைய, "இருவருமம் கற்பேபான்ற மானிட யாக்கையரே; நீயிர் என்னுமாறு காமனும் இரதியும் அல்லர்; என் மக்களை காணுமம் இவர்; நெடுந்தூரம் நடந்துவந்த வருத்தத்தால் மிகவும் களைத்திருக்கின்றனர். அவர்பாற் சென்று அவர்க்கு வேதனை கொடாமல் விலகிச் செல்லுமம்" என்றார் காவந்தி ஐயை. அதற்கு அவர் கள், "முதியீர்! நமது மாற்றம் நன்று! நன்று! இது போலுமம் ஒரு வாலாறு இருகாறுங் கேட்டிலம். இவ்விரு வருமம் உம் மக்கள் என்றீர். ஒரு வயிற்றில் பிறந்தோர் கொழுநனும் மனைவியுமம் ஆதல் எங்ஙனமும் உண்டோ? கற்றறிந்த நீர் இன்னனம் விளம்பியது எவ்வாற்றிலோ? இதற்குச் சான்றுண்டோற் சாற்றுமம்" என்று இயற்சிக் குறிப்புடன் கேட்டனர்.

வம்பப் பரத்தையும் வறுமொழியாள னும் நரியா யினமை.

இவ் விசுழ்வுரை கேட்ட கண்ணகி, 'தவறுதாட்டி யிடம்வீண் வம்பு பேசிப் பழிதேடிக் கொள்கின்றனரே' என்று நடுங்கினள். அப்பொழுதே கவுந்தியடிகள் "முட் கனாயுடைய காட்டில்திரியும் முது நரியாகக் கடவீர்" என அவ்விருவரையும் சபித்தனர். தவ விளாவுள்ளார் வாய்ச் சொல்லாகலின் அச்சாபம் அக்கணமே அவர்களைச் சென்று பற்றியது. உடனே அவர்கள் நரிகளாகி ஊளையிடத் தொடங்கினர். இதை யறிந்த கண்ணகியும் அவள் காதலனும் மருண்டு காவுந்தி அடிகளைக் கைதொழுது,

"நெறியின் நீங்கியோர் நீல கூறினும்
அறியா மையென் றறியல் வேண்டும்
செய்தவத் தீர்நும் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக்காலம் உளையீரோ?"

என வேண்ட, கவுந்தியடிகள் அவ் வேண்டுகோளுக்கு இரங்கி "அரியாலையிலில் இன்று இருபிறப்பாற்ற இவர் உறையூரின் மருங்கு காட்டில் தாபதம் கிடந்து, பின்னர் முன்னுருப் பெறுவராக" என்று சாபவிடை செப்புகனர். அதன்படி அவ் விருவரும் உறையூர் புக்கு, அங்குள்ள அறுகாலிளையை அடைந்து அருகக் கடவுளை வணங்கினர். பின்னர், அப்பார்ப்பனியி னுயரும் அறனிலாட்டியர் தம் கணவன்மார் அருகையில் சிறந்த தெய்வநிலை சான்ற தருமத்தை கைகளால் கும்பிடுதலை கடன் சாற்றி நோற்கும் கவுந்தியடிகள்.

மாங்காட்டு மறையோர் வழிக்கூறல்.

சென்று நீரும் நிழலும் நிறைந்தோர் இளமரக்காவின் கணுவுள்ள மண்டபமொன்றிற் புக்கிருந்தனர். அக்காலை ஆண்டோர் மறையோன்

"வாழ்க எங்கோ : மன்னவர் பெருந்தகை !
ஊழிதோ றூழிதோ றுலகங் காக்க"

என்று தென்னவனை வாழ்த்தி வந்திருந்தான். அம் மறையோனை நோக்கிக் கோவலன், "ஐய! நும் ஊர் யாது? ஈண்டு வந்தது எற்றிற்கு?" என வினவினன். மறையோன், "சிறிய! யானோர் குடகமலை நாட்டில் மாங்காடு என்னும் ஊரின்கணுள்ளேன். திருமால், பொன்மலை நீது மேலேகம் படிந்தாற் போன்று ஆயிரமுடி அரவப் பாயலின், தேவர் பலரும் தொழுச் சிரங்கத்தே கிடந்த வண்ணத்தையும்; அந்நெடுமால் தின்னும் பொன்னுடை யுதித்து, விண்ணிலங்கி, ஆழியும் வளையும் கைக்கொண்டு, அருநிலமுழுது முகமலர்ச் செந்தாமரைப் போது போலுந் திருக்கண்களினாற் நிரு வேங்கடத்தே நின்ற திருக்கோலத்தையும் காண்டற்கண் ஈண்டு வந்தேன். வருநெடுவிசும்பிற் பாண்டில் வெண் திங்களையும், பாண்டியனது கொடையையும், அவனது கோயிலைக் குளிரக் கண்டு உவந்தேன். ஆகலின், அவனை மனங்குளிர வாழ்த்தலானேன். இது காண் எம் வரலாறு" என்றனன்.

அதுகேட்ட வாணிக வள்ளல், மாறாத மனத்தினர்! அந் நிறைகுணப் பாண்டியன் உறைதரு மாதுலனைத்துஞ் சென்று நல்ல நெறியை எங்கட்குக் கூறுதிர்" என இரந்தான்.

"கோவல! கூறலென் கேள்மோ. வெங்கதிர் சென்தன் செஞ்சுடர் வெய்படத்தை நிரம்பிவைது, முல்லை குறிஞ்சி யென்னும் இருதிணை நிலையும் முகமறியாமற் கெடுத்துப் பாலை நிலமாகச் செய்யும் கடுங்கோடைக்காலம் இது. இக்காலத்தே, இப்பருவின் மெல்லடிப் பாலையையும் இங்

வந்தனை. செல் பாணைதீயா கற்பாறையும் துவாகல்லும் நிறைந்த அருநெறி; வெய்யவன் வெண்மையாற் பேய்த்தேர் விஞ்சிய கொடுந்தானம். ஆகலின், நீ நு கொலையாய் பெரு வழியாரும். இதனைத் தெரிவுத்தாய் போதல் வேண்டும். போருங்கால், கொடும்பாளூர் நெடுங்குளம் என்று வரைக்கள் இருக்கின்றனை. அவ்விரண்டிற்குப் பொதுவாகிய வரி யொன்றுண்டு, அதை நீயிர் எய்துவிர். அதன் கண்மீதே சென்றால் பிறைமுடிப் பெருமான் கைக் சூலம் போலும் கவர் வழி மூன்று காணுவிர்.

"அவற்றுள், வலப்பக்கத்து வழியிலோ, விரிந்த தலை தலையுடைய வெண்கடம்பு, வரண்ட கிளைதலையுடைய நுண்மை, பொரிந்த தாள்தலையுடைய யானை, உலர்ந்த புறங்கில் புறுதலான பரங்கள் தெரிந்திருக்கும்; படர்ந்தடர்ந்தென்ற தாளை யினை நீ நெருங்குவை; உன்னை நீ இன்னர் என்பது அவை கொள்ளா. அவற்றை விட்டு நீங்கி, அதனை வலமாக வைத்து, நடுவழி, மணலழி, மலையழி, கடலழி, பாலையழி, இவற்றைக் கடந்து, அப்பாலும் புறம்பாலும் பாலைவழி நடந்தால் நீ அவ்விடத்தே பெரிய மரமொன்று காண்பை. அதன் நிழலிடத்தே நின்று, நின் வருத்தம் தீர்ப்பை. அதன் பழுவிர்.

"இனி, கோடுயர்ந்த குன்றமும் வழிதடுமாற் இடப்பக் கத்து வழித் தோன்றும். அதனை நீ அதன்மேல், அதுவையும்

வண்டுகள் யாழொன இரைக்கும் தடங்களும் வயல்களும் தண்டூங்காவும் செறிந்திருக்கும். 'இடையிடையே பாலை நிலமும் காடுகளும் உண்டு. இவற்றை யெல்லாங் கடந்தால் திருமால்குன்றம் (அழகர்மலை) தோன்றும். அக் குன்றில் மிக்க மயக்கந் தருவதோர் பிலத்துவழி உளது. அப்பிலத்தினுள் புண்ணியசரவணம், பவகாரணி, இட்டசித்தி எனப் பெயரிய மூன்று பொய்கைகளுள. அவை தேவராலும் போற்றப்படுவன; மற்றெவராலும் வியக்கத்தகுவன; எங்கும பரந்த சிறுமையை யுடையன; ஒன்றை யொன்று அடுத்திருப்பன. அவற்றுள், புண்ணியசரவணம் பொய்கையில் ஆடிடின் இந்திரன் இயற்றிய ஐந்திர வியாகரணமென்னும் நூலை உணர்வீர். பவகாரணியிற் படிகுவிராயின் இப்பிறப்பிற்குக் காரணமாகிய முற்பிறப்பின் வரலாற்றை அறிவீர். இட்டசித்தியில் இனிது முழ்கிடின் இட்டசித்திகள் யாவும் எய்துவிர். அப் பிலத்துக்கட் படுகுவிலராயினும், அம்மலையில் வீற்றிருக்குமுள்ள அழகர் திருவடி கனவு மனத்தால் நினைந்து, கையாற் றொழுது, வாக்கால் புகழ்ந்து, மும்முறை வலஞ்செயல் வேண்டும். அங்ஙனம் வலஞ்செய்கையில் எதிர்வது ஒரு யாறு. அதற்குச் சிலம்பாறு என்பது பெயர். அதன்கரையிலார் கோங்குமரம் நிற்கும். அதன் அடியில், பொன்னின் கொம்பு போலவும் மின்னின் கொடி போலவும் ஒரு தெய்வ மகளைத் தோன்ற யுயர்வீர். தோன்றி, 'யான் இம்மலைக் காஞ்சனையில் வசிப்பேன். என் பெயர் வரோத்தமை. இப்பிறப்பிற்கு இன்னமலையாது? மறுபிறப்பிற்கு இன்னமலையாது? என்றும் அழியாநிலை வாய்ந்த இன்பம் எது? இம் மூன்றிற்கும் தக்க விடை தருவீராயின் இப்பிலத்தின் கதவைத் திறந்திடுவேன்' என்று சாற்றுவாள். மற்றவளை மொழிந்தால் கதவம் திறந்து வழிகாட்டுவாள். அவ்வழியில் இன்னும்

பல வாயில்கள் உள. அவற்றையெல்லாம் கடந்து சென்ற பின் இரட்டைக் கதவுள்ள வாயில் ஒன்று இருக்கின்றது. அதன் பக்கலில் **வட்டிகைப் பூங்கொடி** போல்வாள் ஒருத்தி வெளிப்பட்டு சுறில்லாத இன்பம்யாது? அதை மொழிருயி ராயின் நீயிர் எதை யடைய விருந்தி வருகின்றீர? அதை யடைவீர். மொழியெனினும் அதற்காக தம்மை யடுத்து செய்வேன்' என்று படுவாள். அதற்கும் வினாயிடுத் தால், மேற்கூறிய முப் பொய்களையும் அவளுக்குச் சென்று அவற்றைக் காட்டி நீருவாள். அப் பூஞ்சுனை நீரில் ஆடினையும் பொய்கை யொன்றில் அது, அதனைப் பொருத்தும் பயனைப் பெறுவீராக. அங்ஙனம் அதிலும் **திரு எட்டெழுத்தையும் திரு ஐந்தெழுத்தையும்** அருளைப் பட்டு நினைந்து அதிற்கல் வேண்டும். அங்ஙனம் அடுத்து நிற்கும் பெண்ணாள் பெறுவிப்பதற்கு எவற்றிலும் பெரிது

டானுகும், ம.

" அவ்வொரு நீயிர் பொய்கை யாடினிருந்திடினும். மேற்கூறிய அழகினையைக் கண்ட அடியீர் அவளாய். அவளிடம் அழகினை நீருவாள். நீருவதற்கு அவளிடம் அழகு இல்லாதிருந்தால் அவளுக்கு அழகு இல்லாதிருந்தால் அவளுக்கு அழகு இல்லாதிருந்தால் அவளுக்கு

தொன்றி மயக்கத்தக்க செயல்களைச் செய்யா நிற்கும். அம் மயக்கின் வயப்பட்டாரை ரிக்க நுன்பருந் செய்வது அதன் தொழில். ஆனல், அது முதலில் வெய்யித இருக்கவைஞ் செய்வதில்லை. நயத்நினல் வஞ்சித்து வழிச் செல்வோ ரைச் செல்லவிடாமல் மாயஞ் செய்து நிப்பதுதான் அதன் செயல். அதன் மயக்கினுக் குடன்படாமல் மேற் சென்றால் இனிதே மதுரையை வய்தலாகும்.

"இம் மூவழிகளினும் ஏது நும்மால் விரும்படப்படு வதோர் அதன்மேற் சென்று சேருவீராக. யாஞும் அரவ னைக் செல்வன் அடிசேரைச் செல்வேன்" எனக் கினைத் தான். இங்ஙனம் கினைத்தமை கோட்டங் கையறியுங்கள்,

"கலம்புரி கொன்னை நான்மறை யாள!
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை.
கப்பத் திக்கிரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின் விளங்கக் காணுய்.
இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணுயோ நீ
வாய்மையின் வழாத மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வய்தா அரும்பொருள்?

யாங்கள் நீ கூறிய மூப் பொய்கையினும் படுத்தாயிர் வெற லாவதான பயனை அவற்றிற் படியாமலே பெறுவோம். ஆகவின், பிலத்து வழிப் புகுதலை விரும்பேம். உன் னல் விரும்பப்பட்ட தெய்வத்தைப் பணிந்து நீ போக. நாங்களும் மதுரைப் பெருவழியே நடந்தின்றேழுவம்" எனத் நினைத்துக் கண்ணகியும் கோவலனும் பின்தொடரச் சென்று ஒருநல்ல பதியை நண்ணி அங்கு அமர்ந்தனர்.

அம் மற்றவரான், அப் பதியிற் பொயர்ந்து வையவழியே புக்கு மறையோ ரணைத்த கொடும்பாளூர் நெடுங்ருமைக்கு யாம்

வன தேய்வம்.

[illegible]

[illegible]

[illegible]

டாரால் அறிந்து தனியே மிகத் துயருழந்து வாணிகஞ் செய்வோர் கூட்டத்திற் கலந்து இங்கு வலாயினேன். பண் புடைபீர்! இங்ஙனம் துயருழந்த எனியேனுக்கு ஏதேனும் நன்மாற்றங் கூறி யருளுவீர்" என்று வருந்தி நின்றாள்.

பார்த்தான் கோவலன்; 'ஓகோ! அன்று இவ்வணத்தி லொரு மயக்குந் தெய்வம் உண்டென மறையோன் மொழிந் தனனே. அத்தெய்வம் இதுதானே? அன்றி வந்தமாலை யேயோ?' என்றையுற்றான். உண்மை யறிய யுன்னினான். அந்தரி மந்திரம் அறிவாளுதலால் அனைத் தொற்றினான். வசந்தமாலை வடிவொடு வந்த அவ்வணதேவதைத் அம்மந்திரத் துக்கு அஞ்சிற்று. மாதவத்தாட்டியாம் கவுந்தி யடிகட்கும் என்ன தேருமோ வென்று மலங்கிற்று. கற்பின் மிக்க கண்ணகி தெரிந்தால் யாது சூழுமோ வென்று கலங்கிற்று. கற்பின் மகிமையை எத்தெய்வந்தான் மதியா திருத்தல் கூடும்! தவத்தின் ஆற்றலை எதிர்த்து நிற்க வனத்துச் சூர்க்கோ வல்லமையுண்டு! உடனே அத்தெய்வம் நிற்கத் தடன் கோவலனை நோக்கி, "அன்னாய்! உன்னை சூழ் கின்றேன். யாதேனு இவ்வனத்தில் வாழ்தல் இயற்கை. உன் மீது விருப்புற்று இவ்வேடம்பூண்டு மயக்கலானேன். நினது ஆற்றல் அறியாமல் இயற்றிய இப் பெருங்குற்றத்தை மன்னித்துக் கவுந்தி யடிகட்கும் கண்ணகிக்கும் இதை விளம்பாமற் செல்லக் கடவை" என வேண்டிப் போயிற்று.

கோவலனும் தாக விடாய் தணிந்து மற்றிருவருக்கும் தாமரை யிலையில் நீர் கொண்டுபோய்க் கொடுத்தான். அவ ருடன் அக் குளிர்ந்த நிலையுண்டு வேட்கை தணிந்திருந்தனர். மேற் செல்லவேண்டிய பாட்டையோ அருகு சூழ். வெயிலோன் வெப்பமோ வெகுகொடுமை. கண்ணகியோ மெய்சோர்ந்து விட்டாள். அவள் பாதம் தினவு சிலந்து கொப்புளம் கொண்டி

ஐயை கோட்டம்

கடைக்கொள்ளுங்கல் பாடலாயினர். பாட்டு நிற்ற இடங்களிலெல்லாம் கொண்டு நிற்கின்ற தலைவர்க்கு தொடர்ந்து தருவர். அரி தென்று கண்டோர் அருங்கலம் கவர்ந்தேயுண்பர். மருங்கில் குரவழும், கடம்பும், தேமாவும், வேங்கையும் முதலான மலர் மரங்கள் விரவிக் கனிகளோடு முலைக்கும் பழமிலையாகிய,

விழுதுதற் குமிழி விண்டுளர் பாலை
மையற சிறப்பின் வான சாடி

ஆகிய ஐயைகோயிலைக் கண்டார். அங்கிருந்து இரு வரையும் அணைந்துச் சென்றார். அற்சனைகளின் அடுக்காட்டத்தின் முருகனுக்கு மூவரும் வழிபாடாயினர்.

அஃது கன்னனாக. வேலனுக்கு அரிச் சொல்லாடும் இளங்கை வேட்டுவத் தொல்குடியின் பிறந்த சுணினி பெண்பாலொருத்தி தேவராட்டி சன்னதங்கொண்டு வெள்ள மயிர் சிலிர்ப்ப ஆடல் நடிக்குமுக் கைகளை பரப்பித் தோளை பிடித்து கொக்கரித்து வானின் நிலைமேல் நின்ற மயிலைச் சுழலும் விழிகளுக்குத் தானத்திலைக்கு நாள் அரசு, "ஐ! விண்ணவர்க்கு வேள்கோள்! கிளர் இருந்த கோயிற்றிரு நாடி. வரி தழையாக் காலம் அறிந்து! அயிர மறைகளாலைக் கிளர் கிள்ளன் விலையன்னை கொள்ளாள்; அந்நலங்கிழ அழிதோளை கரை அரற்றுக்கால் ஊறித்துள்ளுறுவல் எங்கள் வரி வளை முன்றில் கோயிற்று; அம் பலைகளாரன் வெறிக்கை; மருக்கழு. மங்கலவிய கிளி அருக்கழு. எங்கள் கோயும் நிலைஞ்சுன்றில் கொருங்கொழிக்கி. இன்னும் காலம் கடத்தறிக் எம் வரம்புயும் கலம் கொடி. மடலை மலிக்கை வெறிவிர்; இல்லையாயின் காப்பரி" என வரங்குரைத்தாள்.

அவ்வாறே மயிலை வெள்ளாட்டியும் வேலனுக்கு வேண்டிய சிறப்புச் செய்வதைவும் கொடி முருக்கினர். மடலை, வரும் வம்பலர் தங்கள் ஆலத்தாலையாகு ஆடினைவை நுள்ளாங்கை செய்

வான் தொடங்கி, அவளின் நெளிந்த கூந்தலைச் சடையாகப் பின்னி அதனைப் பாம்பின் குட்டிபோற் பொன்னூல் செய்த கயிறுகொண்டு கட்டினர். அச்சடைமுடியிற் பன்றியின் சிங்கப்பல்லை மூன்றும் பிறையெனச் சாத்தினர். புனிப்படற் கூளை ஒழுங்குபெறக் கோத்துத் தாலியாகச் சூட்டினர். அதன் தோலை மேகலையாக அணிந்தனர். வலிய சிலையை வளைத்துக கையிற் கொடுத்தனர். கூலமான்கீறு காழ்ச் செய்தனர். அன்றியும், பாணையும் மயிலும் மைந்நிறக் கிள்ளையும் காணிக்கையாக எடுத்தனர். பங்குனி முழங்கும் கொடுத்தனர். இத்துணைச் சிறப்புகளோடு,

ஆறறி பறையும் சூறைச் சின்னமும்
கோடுங் குழலும் பீடுகெழு மணியும்

முதலான பல்லியங்கள் முழங்க, எயிற்றியர் எடுத்து வந்த வண்ணமும், சுண்ணமும், கண்ணறுந் சாந்தமும், பூவும், புகையும், எள்ளருநண்டையும், நிணச்சோறும், ஆகிய பலவும் ஐயை திரு முன்பு படைக்கப்பட்டன. யாவரும் அடி தொழுதனராகி அம்மையின் சந்நிதியில் நின்று,

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றுயால்,
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்.

வரிவளைக்கை வாளெந்தி மாமயிடற் செற்று
கரிய திரிகோட்டுக் கலிமிசைமேல் நின்றுயால்,
அரிஅரன் பூமேலோன் அகமலர்மேல் மன்றும்
விரிகதிர் அஞ்சோதி விளக்காகி யேநிற்பாய்.

சங்கமும் சக்காரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றுயால்,
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்."

என்று இன்னன விபடம்பி எத்தினர். அப்பால்,

"வம்பலர் பல்வி வழியும் வளம்பட
வம்புடை வல்வில் வயிண்கடன் உண்ருவாய்,
சங்கரி அந்தரி கீலி சடாமுடிச்
செங்கண் அரவு பிறையுடன் சேர்த்துவாய்.

தண்ணென் குடியொடு தங்கு மெறிதரு
கண்ணனில் வயினர் இருகடன் உண்ருவாய்,
விண்ணோர் அமுதளும் சால ஒருவரும்
உண்ணுத கஞ்சுண்டி முருத்தருள் செய்குவாய்.

பொருள்கொண்டு புண்செய்யின் அல்லதை யாரிக்கும்
அருளில் வயினர் இருகடன் உண்குவாய்,
மருதில் கடந்தின் மாமன்செய் வஞ்ச
உருளுஞ் சகடம் உதைத்தருள் செய்குவாய்."

என்று வேண்டி நின்று தொழுதனர்.

பின்னர் நீதி மன்றுக்குச் சென்று தொழுதனர். நீதிபதி வழக்கை விசாரித்து,

"ஐயோ!
வெங்கச் செல்வி! குடமலை வாட்டி!
தென்றமிழ்ப் பாவை செல்துயர் கொடுத்தை!
ஒருமா மனிதர புலருக் கொல்லிய
இருமாமணி!"

என்று கூறியருளினான்.

தினைப் புனம் காக்கும் பெண்கள், வரகு விளையும் வயல்களில் பறவைகளை ஓட்டி,

அஞ்சுவ்வாறுக, கொற்றவை வேட்கட்கு வேண்டிய வரம் அருள அவர்கள் அகமலர்ந்து களிமிருந்து சென்றனர்.

மாதவி ஏவிய கோச்சுற் காண்டல்.

அப்பால், கோவலன் கவுந்தியடிகளைப் போற்றி, புண்ணிய முதல்வீ! நான் செல்லும் இவ்வழி காடும் நாடும் கலந்ததாயினும், முதலை, பாம்பு முதலியனவுந் தொல்லை செய்யா! காடு. புலியாதிய காட்டு விலங்குகளுஞ் அல்லல் செய்யா! மலைவாழ் சூருஞ் வருந்தாஞ் செய்யா! இதனுலென்றே தென்னவர் ஆணை சிறந்ததென்று எங்கும் இசை பொங்குகின்றது. மதிகுல வழுதியர் ஆட்சி நன்று! நன்று! ஆனுலொன்று: கதிரோன் கொடுமை கணக்கிறந்தது. அக் கொடுமையைக் காங்கலாற்றாது கண்ணகியின் தளிர்போலு மேனி ஒளிமழுங்கிற்று. பருக்கைக் கற்களில் நடந்தறியா அவள் தம் சீறடிகள் நொந்தன. அதனின், பகலில் வழிநடத்தல் இனி இயலாது. திங்களாளரியிற் செல்லுதலால் ஏதம் ஏதும் இலதே!" என்று யிணைப்பித்தான். கவுந்தியடிகளும் உடன்பட்டனர்.

கொடுங்கோல் மன்னன் குடைக்கீழ் வாழுஞ் குடிகள், அவன் என்று தொலைவான் செங்கோல் வேந்தன் என்று வருவான் எனப் பார்த்திருப்பதேபோலத் திங்கட் செல்வன் வருகைக்குக் காத்திருந்தார் கவுந்தியடிகள் முதலாயினர். வெண்கதிரோனுந் தண்கதிர் பரப்பி வெளிவந்தான்.

இவர்களுந் வெளிப்போந்தனர். ஆயிடை வருந்திய ஆரணங்கை வணிகப்பெருந்தகை கண்ணி, "காதலி! இவ் விரவில் நாம் செல்லும் வழியில் சில வேளை புலி குதறுகிடும்; போராந்தை குழறும்; காடி இடிக்கும்; இவற்றிற்குத் திடுக்கிடாது வருவாயாக" என்று திடங்கூறித் தயிர்மோர்க்கும் கொண்டாளாகிய அவள் தன் கையைத் தன் தோளிற்

சோத்தி இவ்வா பிரியாமல் வகிணன். மாதவக் கவுந்தியடி களரும் பல மெய்யுரைகளோ கனின்று நடந்தார். குளிர்நிலா வழிநடக்கும் இவ்கட்டு மகிழ்ட்டியது. தவமுதாட்டி யின் அறவுரைகளோ இனிது கேட்டு நடத்தலால் கண்ண கிக்கு அயர்வு தோன்றவில்லை; பொழுது புலருங்காலும் நடந்தனர். பின்னர், வழியிடையே யுள்ளதொரு பார்ப்பனச் சேரியை கண்ணி, ஆங்குள்ள தூலணி மார்பினர் கான்மறை கவிலாது வாரிப்பாட்டினைக்கும் இழுக்குடையார யிருத்தல் கண்டு, அவ்வூருக்கு அயலேயுள்ள கோயிலின் புறத்தே கன்னகிலையையும் கவுந்தியடிகளையும் இருக்கச் செய்து, காலேக்கடன் கழிப்பான் நீ னெனறிக்க ணுள்ளதோர் குளத்தை யடைந்தான் கோவலன்.

"மாலைவாரா ராயினும் நாநீக் காலேக் காண்குவம்"

என்று தேறியிருந்த மாதவி, கோவலன் கண்ணகியோடு சேர்ந்ரர் புக்கசெய்தி கேட்டு, அடங்காத் துயர்கொண்டா னாய் வழுதிக்கொடுத்த றலேகொண்டு, கோவலனை நேடி, யாண்டும் அலேந்தலைந்த கௌசிகன் என்பான் ஓர் அந்த ணனர், கோவலன் புக்க நடாகத்தருகே நிற்பாணுயினன். காதலியொடு சென்ற கானகவழி நடக்க நேர்ந்தமையா லும், அங்ஙனம் நேர்ந்த விதியை எண்ணியெண்ணித் துக் கித்து உள்ளம் கலங்கினையாலும், உடலம்வாடிய கோவ லனைச் சற்றுத் தூரத்தே நின்று பார்த்த அவ் அந்தணன் அவை யாவும் காணமாட்டாமுப் இயுற்றான். பின்னர், சற்று நிதானித்து இவன் கோவலனை என்று கருதிய அந் தணற்கு, அவன்முன் வெளிப்படுன்றிய பான்மையால் மீண் டும் ஐயம் தோன்றியதாக, அதனைத் தெளிதற்கு எண்ணி, அருகிப் படர்ந்திருந்த குருக்கத்தி நீழலிற் சென்று நின்றான். குருக்கத்திக்கு மாதவியென்ற பெயரும் உண்மை யால் அதனை நோக்கி,

"கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்று, இவ்
அருந்திறல் வேளிற்கு அலர்களைந்து உடனே
வருந்தினை போலுநீ மாதவி!"

என்று மொழிந்தனன். அம்மொழி கேட்ட கோவலன் அந்தணனை அடுத்து, "ஐய! நீவிர் உரைத்த மாற்றத்தின் பொருள் யாது?" என வினவினன்.

அந்தணன் இயம்புகின்றான், "கோவலனைக் கண்டீர்கள்!" என்று உளம்பூரித்து அவனை நோக்கி, "செல்வனே! நினைக் காணலாயினமையால் எம் மனம் பெரிதும் மகிழ்கின்றது. உம்மை யிழந்த நும் தாய் தந்தை பகருந் தன்மையதன்று. வயதிலும் நரை திரை மூப்பிலும் தளர்ந்த நாளில் நீ இன்றி மீளாத் துயரில் ஆழ்ந்தனர்; நின் அருந்தாய் உயிரை யிழந்தாள்போற் செயலற்று வாடினாள்; தந்தை, சீதையுடன் இராமன் வனஞ்சென்ற அயோத்தியே போன்று களையிழந்தது. விரைந்து குடிப் பிறந்தோய்! அன்று வாசுதேவரின் தெய்வத் தேரினைத் தடுத்த மாலுக்கு திருமுகத்தை நீ மறுத்தமையால் நின் தாதைக் கல்கோளையுங் காங்கமாட்டாது இயலு மென்னச் சோர்ந்து பாயலில் வீழ்ந்து விட்டனர். நின் தந்தை நீக்கத்தையுங் கேட்டு நினைவிலை. வெய்துயிர்ப்பான் அப்பொழுது அவள்பாற் சென்றேன். அவள் என்னை வணங்கி 'எனக்கு நேர்ந்த இன்னலும் தவிர்த்தி' என மன்றாடினள். இந்த ஓலையைத் தன் கையிலெழுதி என் கையிற் தந்தாள். 'இதனை நான் கண்ணகிச் சிறுமனைச் சிறுமகட்குக் காட்டுதி' என்று விரைந்தனள். அவளை நின்னைத் தேடிப் பல தேயங்களிலும் [illegible]

பின்னர், இவ் வுருவெளித் தோற்றம் அழுங்கலுற்றதன் ” என்று சொல்லிக்கொள்ளல்.. முகிலையைக் கொடுத்தான். அதில்,

அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தென்
வடியாக் கினவி மனக்கொளல் வேண்டும்;
குரவர்ப்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு? அறியாது

கையறு நெஞ்சம்; கடியல் வேண்டும்;
பொய்தீர் காட்சிப் புணர்வோய்! போற்றி!

(அதன்தாவது: “தேவரீர்! தங்கள் திருவடிகட்கு வணக்கம்; இவ் வுலகத்தை அடியேனுக்கு முன்னிருந்து செய்துவரும் தாயத் தியற்றும் பணிவிடைகளையும் விட்டுக் குலத்திற் பிறந்த கற்புடையாட்டியை யும் உடன்கொண்டு இரவில் தனியாகச் சுரத்தை நடந்து போதற்கு யாது நியாயமுண்டு? அடியேன் தனியாகவுமல்ல; பெரும்பழி தரும் தங்களைவிட்டு! உம்மைப் போற்று சின்றேன்; மீண்டு வருகின்ற பொழுதுகளில் வேண்டும்”) என்று மாற்றுருவாகி மறைந்தான். சிறிது நின்று, “மாதவி நீ சென்னாள்! யாதென மாழ்கி வெண்ணினை! இதோ வெள்ளம் வியோகமடி பெண்ணே!” எனத் தெளிவித்து அவள்மேற் கொண்டான். அவளும் தெளிந்தாள்.

அதன்பின், மாதவி விடுத்த பொருள்மேல் முன்னை யிழந்தும் அடங்கா வினைப்பயனுடம் கோவலன் பயணமாகிறான். கோசிகனை நோக்கி, “ஐயா! நீதானே யிப்பொழுது மாலுற்ற பின்னே நினைந்து கொண்டு அவனுக்குத் திருவடி சூட்டுக; அவன் கொண்ட தவப்பெரு மையும் நீ பெற்றதும் யாம் கண்டோம்; விரைந்து செல்லுக் கடவீர்;

அடியேன் நும்மொடு வாயாமைக்கு வருந்துகிற்” எனப் பல குளிர்மொழி கூறி யகலுப்பினன்.

வையை கடந் மதிற்புறஞ் சார்தல்.

இப்பால், வணிக வள்ளல், மாநில் கற்பின் மாநாயியும் மாதவக் கவுந்தியடிகளுடம் இருக்கு மிடத்தைச் சார்ந்து, அவர்களோடும் அவ்விடத்தை விட்டுப் போயினன். போம்வழியில், கொற்ற வையின் வெற்றிபாடும் பாணனைக் கண்டு அவனோடு அளவளாவி “மதுரை எத் துணைத் தூரத்துள்ளது?” என்று கேட்டான். அதற்கவர், “கண்ட! சங்கப் புலவர்தம் பாடல் மணத்தோடு பணைப்படல் நறுமணமுங் கமழும் பாண்டியன் ஊராம் சேயதன்று; அணிமைத்தே” என அறைந்தனர். அன்று அப் பாணர் ஊரில் தங்கியிருந்து இரவில் கிளர் வெறுங்குரிசில் வெளிப் பட்டு வழிச் சென்றனர் கோவலன் முதுபெரியோர் மூவருமாய்ச் செல்லச் செல்ல, மதுரையம் பதியிற் கடலென முழங்குவ,

காலை முரசக் கனைகுரல் ஓசையும்
கான்மறை யந்தணர் கவின்ற ஓசையும்
மாதவ ரோதி மலிந்த ஓசையும்
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோ டெடுத்த காளணி முழவமும்
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பனிநிலைப் புரவி ஆலும் ஓசையும்

கலந்த பெரு முழக்கம் அவர்தம் செவிப்புலைத் தெய்தியது. வாரீர்! வாரீர்! எனக் கூடலம்பதி முழங்குமா போன்ற அப்பேரொலியைக் கேட்ட அவர், மேலும் சுடர்ந்து,

கூவலும் வகுளமும் கோங்கமும் வேங்கையும்
ஆவலும் காகமும் திலகமு மருதமும்

சேடலும் செருந்தியும் செண்பக ஓங்கலும்
பாடலச் தன்னெடு பன்மலர் விரிந்து

குருகுக் தனவும்மும் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமலர் அதிரலும் வெண்கூ தாளமும்

குடசமும் வெதிரமும் கொழுங்கொடிப் பகன்றையும்
பிடவமும் மயிலையும்

அடர்ந்து படர்ந்த வைவை யாற்றின் கரைமேலை கடந்து அருகன் மதுரைத் துறையை அடையலாயினர்.

புலவர் காவிற் பொருந்திய பூங்கொடியாம் வைவை, பல மலர்களையுக் தன்மேற் பூண்டு போதலால் "புனல் யாறன்றிது பூம்புனல் யாறு" என்று அதனைப் பாராட்டிக் கொழுதனர். கொழுத மூவரும், புணையேறி கதியைக் கடந்து நகரின் கிழக்கணை வாயலின் பக்கத்தே அமைந்த அருக முனிவர் இருக்கையை அடைந்து அதில் வதிய லாயினர்.

மதுரைச் செய்தி.

மதுரை மாநகரம், துதல் விழிப்பெருமாறுகிய சோ

நகரக் காட்சி.

கேசர் கோயிலும், முருகர் கோயிலும், திருமால் கோயிலும் கலப்பை கைக்கொண்ட பலதேவர் கோயிலும், அறவோர் பள்ளியும், புரச மனை யும் ஆங்காங்கு விளங்கப்பெற்றது. நகரின் புறமெங்கும் வளையிநீர் பாய்தலால் பலவகை மலர்க்கரு நெய்தல் கழுநீர் மொழை ஆகிய பலன்றாரு மாங்காங்கும் பெரு கலுங்கும் கொடிகளுங்கும் செழித்திருக்கும்; வாவியும் வயல்களும் பொலிந்திருக்கும்; தென்னிலச் சாங்கும் தென்னல் வீசுத லாற் கோடைக்காலமும் குளிர்ந்திருக்கும்; ஆம்பல்களும் அகழி சூழ்ந்திருக்கும்; பலகையாற் தூகளாக்கும் நிறுத்த விசைப்பொறிகள் அமைக்கப்பெற்று வெற்றிக் கொடிகள் நாட்டப்பெற்ற மதில் வாயில் புரவின் வாயில் விளங்கும்; மதில் வாயில்களில் யவனர் காவல் செய்திருப்பர். நானாதேசத்தவர், பல்வேறு குலத்தவர் பல்வேறு வீதிகளில் வதிந்தாள்வர்; எங்கும் செல்வம் பொங்கியிருக்கும்; விசேயபயிர்க்கு மாலிக்க முதலிய இரத்தினக் கடைகளும் பொற்கடைகளும் பூக்கடை வைக் கடைகளும் சுகந்தக்கடைகளும் விளங்கி நிறைந்திருக் கும்; அழகு சான்ற மகளிரும் ஆடவரும் அணிகளும் ஆடை களும் தேவ நாடரோவெனத் திகழ்ந்திருப்பர்! நாடகக் கலை கும் கைத்தொழிலாளர் களிக்கிருப்பர். அருங்கலை எல்லா நலமும் வாய்ந்த கூடலம்பதியானது திருநகரம் அருங்கலைப் பேரழகைத் திரண்டிருக்கும். சங்கம் மருவிய அந்தென்னாடர் பாண்டிய மன்னர்களின் பன்னெடுங்காலம் வரை அரசாண்டு வந்த சிறப்புடையது.

இச் சமயத்தில் கோவலனுக்கும் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பானுக்கும் சொற்போலொத்தி யிருக்கின்றன.

அரசர்களுக்கு. அறவுரைகேட்டு அறிவினை யேத்தற் பொருட்டு மதுரைப் புறஞ்சேரியில் முனிவரிருக்கையிற் சங்கிய கமழ்தியடிகளைக் கோவலன் கை தொழுது, "செய்தவத்தீர்! நற்குடிப் பிறந்தார், காணம் பொரிசிலுக்கு சிறந்த தெனவும் பொற்றும் மகளிரொடு கனிவழியேகுதல் சான்றண் ருகவும், பொருள்முடி வணிகருடைய யான் ஒழுக்கம் நீங்கிய இழுக்குடை. மக்கள்போல், இற் கடமலர் மேனியாள் கற்கற்பும் அயாவுயிர்ச்செவ்வாய் வண்ணமும், காட்டிலும் மலையிலும் கல்லிலும் முள்ளிலும் அவளை அழைத்து வந்த கொடுமை அற்றிலதெனவும். அருந்தொழியில் அரிபாத் தெய்வத்தில் கடம்கள் அவிந்த நிலைய நாலும் வருமென்று கலைவிரும்பி யுரைத்தல் வேண்டும். இப் பெரிய அருந்தவத்தோடிட முற்ப வத்தில் யாம் என்ன தெய்தினேம்? யாது குறைபோ? அறிகிலேம். பெரியீர்! நாங்கள் தங்களை முதன்முதலாகக் கண்ட அன்று 'யாதொரு மருவா வருத்தமோ' என்று தாங் கள் வினவிய பொழுதே எங்களைத் தாம் பாதகமாகிய காவல்பால் வெறுப்புள் ளவர் என அறிவிக்கின்றனர். இன்றுதான் அறிகின்றனர் இங்ஙனம்வாழ்தல் யாவரிடத்தும் கடிது அவர்பால் காலந்தாழ்த்தல் விடாது என விரும்பி னர்கொல்? தெவ்வரிற் திரிதலாற்றுவ மல்லமோ?" என்ன மனமகிழ்ந்து விடையிறுப்பர்.

அப்பொழுது அவர்முன் வணங்கிநின்ற கவுந்தியடிகள், கோவலனை நோக்கி, "ஐய! நீரும் மாசு நீங்கி 'தாங்காம் முற்செய்தவினை தானே யனுபவிப்பது' என்னும் திரு மொழியை அறியாதவரோ? இங்ஙனம் முன்னோர் பிறப்பினுள் முன்பு செய்தவினைக் கண்ணிய மறுமையில் இன்பமும்

செய்தனை. அதனால், இவ்வாறு அன்னை தந்தைதனைச் சுற்
றத்தைதச் செல்வத்தைதச் சுகத்தை நீத்து அல்லலுழந்தாய்.

மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்று
அறத்துறை மாக்கள் திறத்திற் சாற்றி
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை யுருத்த காலைப்
பேதைமை கந்தாப் பெரும்பே தறிவர்

(அஃதாவது, எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யுந் தன்மையினின்
றும் நீங்குமின்; நீங்கிராயின் அத்தீவினை விளைவு நும்மைத்
துன்பம் நுகரச்செய்யும்; என்று அறங்கூறும் பெரியோர்கள்
தமது நாவைக் கோலாகவும் வாயைப்பறையாகவுங்
கொண்டு யாண்டுஞ் சாற்றினும், புண்ணியத்தின் உரு
யற்றோர் அந்நல்லுரைதனைக் கடைப்பிடியார்; பின்னர்த்
தீவினையால் பொல்லாங்கு சூழ்ந்து வருத்துங்காலத்து
அதனை ஆற்றாராய்த் தமது பேதைமையையே ஆதாரமாகக்
கொண்டு அழுங்குவர்.) ஆனால்,

ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்;
பிரிதற் றுன்பமும் புணர்தற் றுன்பமும்
உருவி லாளன் ஒறுக்குந் துன்பமும்
புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது
ஒருதனி வாழ்க்கை யுரவோர்க் கில்லை.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் பொருளும்
இன்பமும் சிறுபான்மை இன்பம் பயந்து பெரும்பான்மை
துன்பம் விளைவியா நிற்கும், அறமோ சிறுபான்மை துன்ப
மும் பெரும்பான்மை இன்பமும் விளைவிக்கும். இவற்றை,
ஒன்றை மற்றொன்றாக மாறியெண்ணி யுல்லுயிர்ப்பார்
மிகப்பலர். கோவல! "தந்தைசொன் மிக்க மந்திர மில்லை"

என்ற பெருமொழியைக் கடைப்பிடித்து மனைவியோடு அயோத்தியை விட்டுக் கடுங்காலுறைந்து மனைவியை மாற்றான் கொள்ளச் சாற்றெறுழ் வேதனையுற்ற இராமன், வேதனை யின்ற திருமால் என்பதை அறியாயோ? அதுவே யுமன்றிச் சூதாட்டத்தால் நாடிழந்து நகரிழந்து மனைவியொடு வனம் நண்ணிக் காதலியைக் காரிருளிற் கான்கத்தே கைவிட்ட நளன் கதை தெரியாயோ? அங்ஙனம் அவன் இடையாமத்தே தமயந்தியை விட்டுப் பிரிந்தது அவன்றன் பிழையோ? அன்றித் தமயந்திசெய் பிழையேயோ? இவையெல்லாம் அம்மை வல்வினையான் விளைந்தவன்றே?

"நம்பி! எதுக்கு மனங்கலங்கினை? இராமனைப்போல் நளனைப்போல் காதலியைப் பிரிந்தா யல்லையே! பிரியா வாழ்க்கை பெற்ற நீ இவ்வண்ணம் கலங்குதல் வேண்டா. வருத்தம் விண்டு மதுரையுட் சென்று விருந்தெதிர் கொள் வாரைக் கண்டு வரக்கடவாய்" என்று ஆறுதல் கூறி அனுப்பினர். இப் பொருளுரையால் உள்ளந்தேறிய செல்லாச் செல்வன் அவரை வணங்கி மதுரைத் திருநகரை நோக்கிச் சென்றான். மங்குல் தங்கிய மதிலகத்தடைந்து உட்புக்க அவன்,

எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்
வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய
அரசுவிழை திருவின் அங்காடி வீதியும்;
நாவிய மயிரிலும் நலமுனற் பட்டிலும்
பால்வகை தெரியாப் பன்னிறு அங்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்;
கூலம் குவித்த கூல வீதியும்;
பால்வேறு தெரிந்த நால்வேறு வீதியும்;

பல்வேறு நாத்தினைவாகிய இரத்தினங்கள் பொன் முதலியன கொண்டு விற்கும் அவணை வீதியும்; நாற்சந்தி கூடும் இடங்களையும்; முச்சந்தி கூடும் இடங்களையும்; குறுக்கெறு

நெடுந்தெரு முதலிய எங்குஞ் சென்று ஆங்காங்குள்ள கண் கொளாக் காட்சிகளைக் கண்ணுற்று இறம்பூதெய்தி, வந்த காரியத்தை மறந்து, தவமுதாட்டியார் உறைவிடஞ் சென்று, அவரிடம் மதுரைப் பெருவளனையும் எழுதிதன் வண்மையையும் எடுத்துக்கூறி இன்புற்றிருந்தனன்.

அவ்வமயத்தில், காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தென் மேற்கில் நான்கு நாழிகை வழித் தூரத்திலுள்ள **தலைச்செங் காடு** என்னும் ஊரினின்றும் அகத்திய முனிவர் இருந்தருளும் பொதியின் மலைக்கட் சென்று, அம்மலையை வலங் கொண்டு, குமரியாடி மீண்டு, தன் ஊராகிய தலைச்செங் காட்டை அடையவருகின்ற **மாடலன்** என்பான் வேதியர் தலைவன், வழிவந்த வருத்தந் தீர்தற் பொருட்டு, கவுந்தி யடிகளிருந்த அருகப்பள்ளியில் வந்து இருப்பாறையினன். கோவலன், அந்தணர் முதல்வனை முன்னரே நன்கறிந் தோன் ஆகலின், அவன்முன் சென்று சேவடி பணிந்தான்.

அக்கால், வள்ளலைக்கண்டு மன்மிகக் குழைந்த மறை யோன் அவனை நோக்கி "செம்மால்! நின் காதற்கணி கைக்கு மகள் பிறந்தாளாக, அக்குழவிக்கு நின் ஆணையின் வண்ணம் அணிமேகலையார் ஆயிரங் கணிகையர் **மணிமேகலை** எனப் பெயரிட்டு மங்கலங் கொண்டாடிய ஞான்று, வனப்பு நனிமிக்க மாதவியும் நீயும் ஆதலர்க்குச் செம்பொன்னை அள்ளியள்ளி அளித்தபோழ்து, மூப்பால் முதுகு வளைந்து தளர்நடைகொண்டு தண்டூன்றித் தள்ளாடித் தள்ளாடித் தானம்பெற வருவோன் ஒரு முதுமறையோன் எதிர்வந்த மதயானை கையில் சிக்கிஞெரைக, நீ அதுகண்டு, கழிபேரிரக்கங் கொண்டு ஓடிச்சென்று யானையை அதட்டி அதன் துதிக் ்கையிற்பட்ட மறையோனை விடுவித்து அக் கையிற் புகுந்து வெள்ளிய கொம்பின் வழியாக அதன் பிடரில் ஏறி அம் மதயானையைச் சினம் அடக்கிய கருணைவீரன் அல்லையோ!

"அதுவேயுமன்றி, தும்புகாய்ப் பதியிலுள்ள பார்ப் பனி ஒருத்தி, தன் பிள்ளையையும் தான் வளர்த்த கிளையையுந் தனிவைத்து வெளிச் சென்றுளாக. அக்காலை ஆங்கோர் பாம்பு அணுக, கிளி அதனைத்துணித்து இரத்தந்தோய்ந்த வாயுடன் எதிர் நோக்கியிருந்து அவளைக்கண்டதும் அவள் முன்சென்றது. அது தன் பிள்ளையைக் கடித்துக் குருதி யாடி வந்ததெனக் கருதி மனங்கொதித்துக் கையிலிருந்த மகளையிறுல் அதனை அடித்துக் கொன்றுள். அத் தீய செய லைப் பொறுக்கலாற்றுத அவள் கணவன் 'இப்படியினைதுக்க நின்னெடுவாழும் வாழ்க்கை இனித் தகுவதன்று; யான் கங்கையாடச் செல்கின்றேன்' என்று வெளியேறிச் செல் லோனைப் பார்ப்பனி பின்தொடர்ந்து பரிபவப்பட்டாளாக; உடனே ஓலையொன் றெழுதி அவள் கைக்கொடுத்து, 'வட மொழி வாசகம் வளர்ந்த இவ்வோலையை வாசித்துப் பொரு ளுணர்வார் மாட்டுக் கொடுப்பாய்; பொறையற்ற நினக்கும் எனக்கும் இனித் தொடர்பிருத்தல் செல்லாது; யான் செல்கின்றேன்' என மொழிந்து போயினன். அப்பால், பார்ப்பனி அவ் வோலை கைக்கொண்டு கடை வீதிகளிலும் பிறமருங்குகளிலும், 'இவ்வோட்டை வாங்கிப் பாவந் தொலைத் துப் புகழ்கொள்வீரோ' என்று கூறிச் சென்றுள். செல்வதைக்கண்ட நீ அவளை யழைத்து, 'ஓ அருமறை யாட்டி! நீ பெற்றதுயர் யாது? கூறுவது என்?' எனக் கேட்க; அம்மாது நடந்தவற்றை நவின்று ஓலையை நீட்ட, அதைப் படித்துணர்ந்த நீ 'அம்ம! அஞ்சற்க; கவலற்க; யானே நின்துயர் தொலைப்பேன்' என்று ஆறுதல் கூறி அவள் சுட்டிய தொலைப்பாவம் கழிதற்கேற்ற தானங்களை நாலோர் நவின்ற வகைசெய்து, அம்மடந்தையோடு நில் லாது, சென்ற அவள் கணவனையும் மீட்டுக்கொணர்ந் தீத்து, அவ் விருவரையும் சேர்ந்து வாழச்செய்து, அவர் தம்

பிற்கால வாழ்க்கைக்கு வேண்டும் பெருஞ் செல்வமும் கனி கல்கி வழிப்படுத்திய செல்லாச் செல்வன் அல்லையோ!

"அல்லாமலும், பத்தினி யொருத்தியைப் படிற் றொழுக்கப் பட்டாள் என அவள் கணவனிடம் ஒரு பெண்மை யாளன் பொய்க் கற்பனை கட்டி விடவே, அங்ஙனம் கட்டி விட்ட பழிமொழிக்குத் தண்டனையாகச் சதுக்கப் பூதத் தின் கைப்பாசம் அவளைக் கட்டி யிழுத்துச் செல்ல, அவன் தாய் தன் ஒரு மகனை இழந்தற்கு ஆற்றாளாகி அலறி அரற் றித் துயருற்றனள். அவள் துயர்கண் டிரங்கிய நீ, அவ் வறியோளைக் கட்டிய பாசத்துள் நுழைந்து, 'ஆ பூத நாதனே! அடியேன் உயிரைக்கொண்டு இந்த எளியோன் உயிரைக் காத்தருளுதி' என வேண்டியும், அதைப் பொருட் படுத்தாத அப்பூதம்,

'நாகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பாகதி யிழக்கும் பான்மை யீங்கில்லை;

ஆதலால் நின்கருத்து வலாது' என மறுத்து உன் கண் முன்னே அவளை அறைந்து விழுங்கிவிட, அதனால் சொல் லொணா இடர்கொண்ட அவன்றன் அன்னையைத் தேற்றி அழைத்துச் சென்று அவட்கும் அவள் தன் சுற்றத்தார்க் கும் அவன் சாவால் நேர்ந்த அல்லல நீக்கி ஆக்கம் நல்கி அன்புமீக்கூர்ந்து பல்யாண்டு பகிப்பினி தீர்த்துக் காத்த இல்லோர் செம்மல் அல்லையோ!

"ஏ விருத்தகோடபால! நீ இம்மையில் இன்ன பல நல்வினை யியற்றக் கண்டதன்றி யாதாமொரு தீவினை யிழைத்ததைக் கண்டறியேன். இங்ஙனமாகவும், இத் திருத்தகு மாமணியாடம் தளிரனையாளோடு இவ்வண்ணம் போந்து உழலுதற்காய அருவினை அம்மையிற் புரிந்த தேயோ!" என்றான்.

இம் மொழிகளைச் செவியேற்ற கோவலன், "ஐய! அடியேன் விடியற் காலத்தே யோர் நிக்கனவு கண்டேன்; அதனைத் தங்கட்குக் கூறுதிருக்க வியலவில்லை; ஆதலாற் கூறுவேன். நம் கண்ணகி நடுங்கு துயர் எய்த யான் உடுத்திருந்த ஆடை பிறரால் களரப்பட்டது; அப்பால் பன்றியின்மீது ஏறலானேன்; பின்னர் நாணும் கண்ணகியும் பாசக்கட்டை யறுத்த அருளுடையோர் பெறும் பேற்றைப் பெற்றோம்; மாதவி மணிமேகலையைப் புத்தருக்கு அளித்தாள்; இதுதான் அக் கனவு.

கோவலன் கனவு.

விடியற்காலக்கனவு உடனே பலிக்கும் எனப் பல்லோரும் பகருவர். ஆதலால், ஏதோ ஒரு தீங்கு என்னைச் சூழப் போகின்றது" என்று மனம் உளைந்து உரைக்கலாயினன்.

இம்மாற்றங் கேட்ட மாடல மறையோனும் கவுந்தியடிகளும் அவனைப் பார்த்து, "இவ் அறப்பள்ளி யிருக்கை துறவிகட் கல்லது மற்றையோர்க்குப் பொருந்தாது; ஆகலின், நீ நின் மனையா ளொடும் போதுபடு முன் நகருட் போது வாயாக; ஆண்டுள்ள வணிகர் பெருமக்கள் நின்னை மாசாத்து வான் மகனென அறிந்தக்கால் எதிரேற்றுப் போற்றுவார்கள்" எனப் பரிவுகையில், மாதரி யென்பாள், ஆயர்குலத்து அரிவை, ஆரியாங்கனை யென்னும் இயக்கிக்குப் பாற்சோறு படைத்து வழிபட்டு வருபவள், அறப்பள்ளிக்கண் இருந்த கழிபெருந் சிறப்பின் காவந்தி அடியைக் கண்டு வணங்கி தொழுதனள்.

அடைக்கலம் அருளல்.

தொழுத முதியாளுக்கு ஆசி கூறிய அடிகள், 'பசுக் கன்றைக் காத்து அதனால் வரும் பயனைப் பலர்க்கும் பகிர்ந் தளிக்கும் ஆயர்தம் வாழ்க்கை தீங்கற்றது; மாதரி மனத்

தாய்மை யுடையவள்; வாய்மை மிகுந்தவள்; நாணுவிதத் தும் நனி நல்லள்; ஆகலின், இவளோடு கண்ணகியை இருக் கச் செய்வதில் ஏதம் யாதும் எய்தாது' என்று எண்ணி, அவட்குக் கோவலனைக் காட்டி, "மாதரீ! கேட்பாயாக. இவன் இம் மயிலியலாளின் மணமகனுவான். இவன் பெயர் கோவலன் என்பது. இவர்கள் காவிரிப்பூம் பட்டினத்தினின் றும் போந்தவர்கள். இவன் தந்தை மாசாத்துவான் என் பான் காவிரிப்பூம்பட்டினத்தின் திரண்ட செல்வன். இவனை இன்னன் மகனென்று மதுரைப் பெருவணிகர் அறிவா ராலுல், பெறற்கரிய பெரும்பொருள் பெற்றூர் போல இவளையும் இவன் துணைவியையும் எதிரேற்றுக் கொண்டு போய் இல்லின்கண் வைத்துப் போற்றுவர். அங்ஙனம் இவரை இவ்வூர் வணிகச்செல்வர் அறியுமட்டும் இக் குல மகளை நினக்கு அடைக்கலமாகத் தந்தேன். இட்டுச் சென்று, இம்

மங்கல மடந்தையை நன்னீர் ஆட்டிச்
செங்கயல நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தல் சின்மலர் பெய்து
தூமடி யுடுத்தித் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கு"

என்று பணித்து மேலுங் கூறுவார்.

"நல்லோய்! இம் மடமகளை அடர்வனத்தில் நடை யான் மெலிந்து இடருழந்தாள். யாண்டும் நிலமகள் காணுப் பஞ்சின் மெல்லிய இவள் சீறடி பாறையும் பருக்கை யும் விஞ்சிய சுரநெறியில் அருங்கோடையில் பட்டபாடு பன்னத்தரமா! ஆ மாதரி! அங்ஙனமாகவும் தன் தூயர் கருதாது, கனல் பரப்பிடு கதிர்வெம்மையிற் காதலன் இங்க ணம் வாடலாயினனே என்று நடுங்குதுயர் எய்தி நாப்புலர

வாடின வண்ணமாக வந்தான் இப் பூங்கொடி; இதனால் இவளது கற்பின் மேம்பாடு எத்துணைச் சிறந்ததென்பதை உய்த்துணருவாயாக. ஆனதால்,

'கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்!
வானம் பொய்யாது வளம்பிழைப்பு அறியாது
கீன்நில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தகாடு'

என்று உலகோர் உரைக்கும் அந்தச் சால்புமிக்க கண்ணகியை நீ அறியாதவளோ! அன்றியும்,

தவத்தோர் உடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருவது!

அதைப்பற்றிக் கூறத் தகுந்ததும் முன்னொரு காலத்தில் நடந்ததும் ஆகிய கதையொன்றுண்டு. அதையும் நினக்கு விளம்புவன் கேட்டி.

"காவிரிப்பூம் பட்டினத்துப் பின்னடமா நீழலிலே தருமம் சாற்றி யிருந்த சாரணர் எதிரே வானவில் போல ஒளிவிட்டுப் பூமாலை மணிமாலை புனைந்து, பொன்னணிகள் அணிந்து, அழகுநனிமிகுந்த ஆகத்தழகிய ஒரு வானவன் தோன்றினான். அவன் கைகளிலொன்று குரங்கின் கையாக விருந்தது. ஆங்கிருந்த அறங்கேட்டார் சாவகர் யாவரும் அதுகண்டு வியப்புற்றெழுந்து சாரணரைத் தொழுது 'இஃதென் வரலாறு' என வினவினர். அதற்குச் சாரணன், 'அவையீர்! வணிகருட் சிறந்தார்க்கு அரசனால் அளிக்கப் பெறுங் **எட்டி** யென்னும் பட்டம் பெற்றொரு வணிகன் இப் பட்டினத்தில் இருந்தான். அவன் பெயர் **சாயலன்** என்பது. அவனுடைய மனையாள் ஒரு நாள்,

தூங்குதுகில் வானவர்.

தவத்தின் மிக்கான் ஒரு முதல்வனைத் தனது சொல்லை கருதி எதிர்கொண்டு வரவேற்று உண்பித்தாள். அவ்வமயத்தில் ஊராரால் துரத்தப்பட்டு உணவுங் கொள்ளாது ஆக்கங் கெட்டு வந்த கருங் குரங்கொன்று, அம் மானை நண்ணி அஞ்சிப் புகுந்து மாதவன் பாதம் வணங்கி அவன் உண்டு எஞ்சிய மிச்சிலையும் கைகழுவிய நீரையும் அருந்தி, கடும்பசி தணிந்து, அவ் அறநெறியாளர்க்குத் தனது நல்குரவைக் குறிப்பித்து இரங்குமாபோல அவன்றன் அருள் முகம் பார்த்து இருந்தது. அதன்பாற் பரிவுகொண்ட மாதவன், தன்னை உண்பித்த அறக்கிழத்தியை நோக்கி, "அன்னாய்! இதனை உன் பிள்ளைகளோடு ஒப்பக்கொண்டு காப்பாற்றுவாய்" என்று அடைக்கலமாக விடுக்கலாயினன். அம் மாதவன் உரையைப் பொன்னே போல் பாராட்டிய அவள், குரங்கை அன்பு கனியப் பாராட்டினள். அதற்குத் தன் குடும்பப் பொருள் பண்டங்களில் தன் மக்களுக்கொடுப் பப் பாகமும் பிரித்து வைக்கச் செய்தாள். இங்ஙனம் சீராட்டி வளர்க்கப்பெற்ற குரங்கு சின்னாளிருந்து இறந்து விடவே, அதற்கென ஒதுக்கப்பட்டிருந்த செல்வங்களை யெல்லாம் அக் குரங்கின் இழிபிறப்பு ஒழிகவெனத் தானஞ் செய்தாள் அவ்வறச் செல்வி. அத் தானப்பயனால் அக் குரங்கு மத்திபதேசத்திலே வாரணவாசி என்னும் நகரத்திலே உத்தரகௌளத்தன் என்னும் அரசனுக்கு ஓர் அருமை மகனாய்ப் பிறந்து, உருவினாலும், திருவினாலும், உணர்வினாலும், பிறவாற்றாலும் மேம்பட்டு, பலவனைப்பட்ட தானங் களை மேலும் மேலும் புரிந்து, மூப்பதிரண்டு யாண்டு செழு முடிகவித்துச் செங்கோலோச்சி, யாக்கை நீத்து, பின்னர் இத் தேவயாக்கை பெற்றது. அதுதான் இத்தேவ குமாரன்! இவன் பழம் பிறப்பிலே தன்னைக்காத்த தாயை வன் மனைவியின் தானப் பெரும் பயனால் இங்ஙனம் தேவ

யாக்கை பெற்றதை உலகறியக் காட்டவும், அங்ஙனம் காட்டுமாற்றால் அவள்பால் தான்கொண்ட நன்றியை வெளிப்படுத்தவும் கருதி வானின் நீங்கி யானைக்கையையும் ஒருபாற்கொண்டு இன்னணம் வந்தான். தானைப் பெரும் பயனுல் இழந்த துரங்கொன்று எப்படியோ பெற்றதனை இதனுல் கண்டீரோ! அடைக்கலங்காத்த எட்டிசாயலனும் மனையியும் வீட்டிலதித்த இன்பம் திளைக்கின்றார்கள்!" எனக் கினைந்து முடித்தான்.

"கண்டாயோ மாதரி! 'தவத்தோர் அடைக்கலம் தான் சிறியதாயினும் மிகப் பெரின்பம் தருவது' என்றதை வலியுறுத்த வேறு சான்றும் வேண்டுமோ? நேரமாகின்றது. பொழுதுபடுமுன் இந்த மட்டார் குழலியையும் இட்டுச் செல்" என்று சொற்பெருக்கிட்டார் கவுந்தியடிகள்.

மாதரி மனை.

"யாம் நன்மொழிகளை மனத்துக்கொண்ட மாதரி, அடிகளைத் தொழுது நங்கையையும் நம்பியையும் உடன் கொண்டு செல்வாளாயினள். வழியில் பசு நிலை கக்கும் பால் சுமந்தும் வந்தார காகிய ஆயர் ஆய்ச்சியர், கண்ணகியின் கட்டழகைக் கண்டு வியந்து புறஞ்சூழ்ந்துவப் பொருளைப் போலாற்றிப் புறங் காட்டினிற்கும் பொறிகள் மிக்க மதில்வாயிலைக் கடந்து சென்று தனது மனையைச் சேர்ந்தாள் மாதரி. கண்ணகி யைக் காதலினுடு, தனது இல்லத்தின் பக்கத்தே யுள்ள தும், காற்புறமும் கட்டுவேலி சூழ்ந்ததும், குளிர்தரு காவ ணம் புனைந்ததும், செம்மண் பூசியதுமான அழகிய புதிய சிறு வீட்டில் அமரச் செய்தாள். அதன்பின் தன் குல மங்கையர் சிலரும் புடைசூழ நின்று கண்ணகியை நோக்கிய மாதரி அவட்கு "இயற்கை எழில் மிக்கீர்! உமக்கு உறு துணையின்றே என்று எண்ணுதிர். இவள்தான் என் மகள்

ஐயை என்பவள். இவளை நீர் உம்முடைய பணிவிடைக் காரியாக ஏற்றுக்கொள்ளும். நீர் ஒன்றிற்கும் கவலை வேண்டா, நாங்கள் உம்மைப் பொன்போற் போற்றுவோம்" என்று தேறுதல் கூறி சமையலுக்கு வேண்டிய புதுப்பாண்டங்களோடு,

கோளிப் பாகற் கொழிங்கனித் திள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலியரிசி

முதலானவைகளும் பாலும் தயிரும் நெய்யும் பிறவும் கொடுப்பாளாயினள்.

அவற்றை யேற்ற கண்ணகி, ஐயை வைக்கோலால் எரிமூட்டி உதவ, அட்டில்புக்கு அடிசில் சமைத்தாள். பின்பு மட்கல நீரால் மணவாளன் மலரடிகளைக் கழுவி வணங்கிப் பணியோலைத் தடுக்கில் இருக்கச்செய்து, தரையில் நீர் தெளித்து, தலைவாழை இலையிட்டு அமுதுபடைத்தாள். கோவலன் உண்ணலாயினன். அப்போழ்து புறம்பே நின்ற ஐயையும் அவள் தன் அன்னையும் "அந்த வடமீனைக் கண்ணே,

ஆயர் பாடியில் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி! ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம்குலத்துத்
தொழுனை யாற்றினுள் நாமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்!"

என்றும், "நமது இல்லின்கண் எழுந்தருளிய இவர்தம் எழிற்காட்சி கண்கொளாக் காட்சிகாண்" என்றும் மகளை பொங்கப் புகழ்ந்தனர்.

இப்பால், உண்டு வாய் மூசியிருந்த கோவலன், வெற் றிலைச் சுருள் மடித்துக் கொடுத்துநின்ற கண்ணகியை அரு கழைத்து, "பெண்ணே! வேட்டுவர் வழிப்பாறி செய்யும் கடுங்கானகத்தில் இவ் வேனிற்காலத்தில் கல்லிலும் முள்ளி லும் நாம் எப்படி பட்டோமோ வென்று நம் பெற்றோர் கள் பெருந்துயரெய்தி யிருப்பரே! கண்மணி! இதனை உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் உள்ளம் உடைகின்றது. நாம் இங்ஙனம் உழந்தது கனவோ நனவோ! நனவாயின் இத்தகைய பேரிடும்பை யெய்துதற்கு நாம் இழைத்த தீவினைதான் யாதோ! ஒன்றுந் தோன்றவில்லை. கண்ணகி! நாளை முன்னம், பயனில்சொற் பாராட்டுவோரையும் பாத்தை யின்பம் துகரும் காமுகரையும் நட்பாளராகக் கொண்டேன்: அவரோடு புன்மொழி புகல்வதும் பெரு நகை புரிவதும் இனியவெனக் கொண்டேன்; பெரியோரின் உண்மை உரைகளை வெறுத்தேன். இங்ஙனம் ஒழுக்கங் கெட்டமையால் மூப்படைந்த பெற்றோருக்குப் பணி யியற்றும் அருமை பேற்றையும் இழந்தேன்! கொஞ்ச வயதில் விஞ்சிய அறிவு படைத்த உன்னையும் இவ்வாறு சிறுமையடையர் செய்தேன்.

"இன்னல கொடுமையிழைத்த யானும் நற்கதி யெய்தப் பெறுவேனோ! வாழ்க்கைத் துணைவி! இங்ஙனம் பிழைபட்ட யான் 'மன்னூறு மதுரைக்கு எழுக' என்று கூறினை அளவில் நலங்கெட்ட இவனோடுபோதல் நன்றன் றென மறுக்காமல் உடன்பட்டு வந்தனையே. வாவாய்! அந்தோ! யாதுகாரியஞ் செய்தனை!" என்று இரங்கினன்.

கண்ணகியும், "உமது வேறுபட்ட நடையால்

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்

துறந்த யான், உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்குங் கடப்பாடுடையேன். ஆதலால் உம்மொடு வருதற்கு உடன் பட்டேன்" என்று இசைத்தனள்.

அப்பால் கோவலன் காதலியை நண்ணி, "தாயர் தந்தையராதிய சுற்றத்தாரையும் ஏவலாளரையும் சேடியர் வகுப்பினரையும் நீங்கி,

நாணமு மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்து, ஈங்கு என் துயர் கூர்ந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வீ!

தனிமைக்கு வருந்தாதிருப்பாய். யான் உன் பாதச் சிலம்பு களில் ஒன்றைக் கொண்டுபோய் விற்று வருவேன்!! மான் றுரைத்து அவளைக் கட்டித் தழுவினன்; இங்ஙனம் தனி வைத்துப் பிரியலாயினமைக்கு உள்ளம் வெதும்பிக் கண் கலங்கினன்; காதலி தன் கண்ணீர் கண்டால் மனந்தளர்வா னென்று அதனை மறைத்துச் சிலம்பை யெடுத்துப் புறப் பட்டான்.

சிலம்பு விலை பகர்தல்.

மனம் கண்ணகியை நோக்கிப் பின் இழுத்தது. கோவ லன் நெஞ்சத்தின் நெகிழ்ச்சியால் மாட்டாதடையுடன் முன்சென்றான். செல்லுங்கால் ஓர் எருது அவனை எதிர்த்துப் பாயவந்தது. அது தீயநிமித்தம் என்று அறியாளுகையால் மேலுஞ் சென்று காதெருமன்றத்தைத் தாண்டி மாதர் வீதியூடே நடந்து கடைத்தெருவிற் போயினன்.

எதிரே, பொற்பணி செய்வதிற் கைதேர்ந்த தட்டார் நூற்றுவர் பின்தொடர்ந்துவர அரசனுல் வினையாக அனுப்

கப்பெற்ற சட்டைநூன்று, கையிற் குறுவெரிவிடுத்து, மேன் மக்களைக் காணுங்தோறும் ஓதுங்கி ஓதுங்கி வந்தான் ஒரு பொற்கொல்லன். அவனைக் கண்ட கோவலன். இவன் பாண்டியன்பால் பட்டழும் பரிசும் பெற்ற தலைமைத் தட்டான் என மதித்து, அவனருகிற் சென்று, "மன்னவன் தேவி மாண்புற அணிதற்கேற்ற காலணியொன்று என் மாட்டுள்ளது; நீ அதை விலைமதிப்பையோ?" எனக் கேட்டான்.

அதற்கு கூற்றின் தூதுவணைகவந்த பொற்கொல்லன்

"அடியேன் அறியேன் ஆயினும், வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான்"

என்று விடைகூறிக் கைதொழுதனன். கோவலன் உடனே மூடப்பை அவிழ்த்துச் சிலம்பை யெடுத்துக் கொடுத்தான். வாங்கிப் பார்த்த பொற்கொல்லன் சிலம்பின் சிறந்த வேலைப் பாடுகளையெல்லாம் உற்றறிந்தாக்கி, தான் வஞ்சித்த அரண்மனைச் சிலம்பை இவ்விடத்தே யென்று வெளிப்படுமுன் இந்தச் சிலம்பு எனக்குக் கிட்டியது. இதை அரசனிடம் காட்டி இதை விற்க வந்திருக்கும் அயலானின்மீது களவுக்குற்றம் ஏற்றுவேன். தப்பினேன்! தப்பினேன்!! என்று எண்ணி இறுமாந்து நடக்கலாயினன். இப்பால்,

கூடல் மகளிர் ஆடற் சேற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயன்களும்

நம் மன்னன் மனத்தைக் கொள்ளைகொண்டனை. அந் நாடக மகளிர்தம் பண்பில் ஈடுபட்டுவிட்டான்

அரசன் ஆணை. நம் தலைவன் என்று ஊடல்கொண்டாள்

கோப்பெருந்தேவி. அவ் ஊடலைத் தணிப்பான் விழைந்த பாண்டியன் நெடுஞ்செழியன், அமைச்சர் குழாத்தினின் றும் பிரிந்து, தோழியர்கூட்டம் சூழ்ந்துவரத் தேவியின் மாளிகையை நோக்கிச் செல்கின்றான். அங்ஙனம் செல்வானை மாளிகை வாயிலிற் கண்ட பொற்கொல்லன், நிலத்தில் வீழ்ந்து, தொழுது நெடுந்து, "காவலனே! வணக்கம். கருணைமா கடலே போற்றி" எனப் பன்முறை வாழ்த்தி, "அடியேன் முறையீட்டைத் திருவுளங் கொண்டருள்க. அண்ணலே!

கன்னகம் இன்றியும் கணைக்கோல் இன்றியும்
துன்னிய மந்திரம் தூணெனக் கொண்டு
வாயிலாளரை மயக்குதியில் உறுத்து

நமது அரண்மனைச் சிலம்பைக் கொள்ளைகொண்ட பெருங் கள்வன், காவலர் கண்ணிற்படாமல் கரந்துவந்து அடியே னது சிறுகுடிற்புறத்தே யிருக்கின்றான்" என்று விண்ணப் பித்தான். அரசன், காய்சினங் கொண்டானாய்ப், "ஆ ஆ! நன்று! நன்று!! அச்சமின்றி அரண்மனை புகுந்து என் தாழ்பூங்கோதை தன் காற்சிலம்பை வௌவிய கள்வன் வந்திருக்கின்றனை! அங்ஙனமாயின், காவலர்காள்! இங்கு வாருங்கள். இப் பொற்கொல்லனுடு போய் அவன் காட் டும் கள்வனிடம் நமது கோயிற் சிலம்பைக் காண்பீராஞல் அவனைக் கொன்று அச் சிலம்பைக் கொண்டு வாருங்கள்" என்று ஆணையளித் தனுப்பினான்.

ஆனல் பாண்டியன் நினைத்தது, "அவனைக் கொல்லு தற்கு அச் சிலம்பொடு கொண்டு வாருங்கள்" என்பது.

பண்டைத் தொல்வினைவந்து மூண்டமையாலும், அந்தப் புரத்தில் அறிவைப் போக்கிய பான்மையாலும், தெவியின் ஊடல் தீர்த்தற்கு இதுவும் ஓர் உதவியாம் என்ற கருத்தினாலும் தடுமாற்றங் கொண்டு 'அவனைக் கொல்ல' என்னாது 'கொன்று' என்று சாற்றினன்.

மேல், பொல்லாப் பொற்கொல்லன் தனது எண்ணம் பலித்ததென்று களிகொண்டு காவல்வீரரை அழைத்துச்

களவுத்தீயன்

கோவலனை அணுகி, "ஐயனே! இவர் தான் மன்னவன் கட்டளையாற் சிலம்புகாண வந்தவர்" என்று காவலரைக் காட்டிச் சிலம்பின் வேலை நயங்களையும் விலை மதிப்பையும் அவர்கட்குக் கூறுவான்போலப் பாவனை பண்ணி, காவலரைத் தனித்தழைத்து, "அரண்மனைச் சிலம்பு இதுவே; கள்வன் இவனே" என்று பழியஞ்சான் பெரும் பொய்யன் சொல்லிக் காட்டினான்.

காவல்வீரர், அவன் சொல்லியதைக் கேட்டுக் கோவலனது களங்கமற்ற மெய்க்காட்சியையும் பெருந்தன்மையையும் பொற்கொல்லனுக்கு எடுத்துச் சொல்லி, "இவன் எவராலுங் கள்ளனென்று சொல்லப்படுவானும் அல்லன்; கொல்லப்படுவானும் அல்லன்" என்று விளம்பினர். அவர் சீற்றப் பார்த்து இகழ்ந்தகை யாடிய பொற்கொல்லன், "வீரர்காள்! கள்வர்களின் திறமையை நீவிர் நன்கு அறியீர். யான் அவர்களது களவு தூற்றினை உமக்கு இயம்புவன். கேளுங்கள்.

வஞ்சனைஞ்சம் படைத்த அவர்கள்,

மந்திரம் தெய்வம் மருந்தே நிமித்தம்
தந்திரம் இடனே காலம் கருவி

என்று கூறலாகும் எட்டுவகைகளையும் ஆதாரமாகக்கொண்டு பிறர்பொருளைக் கொள்ளையிட்டுப் பிழைப்பவர்கள். இங்கு வந்திருக்கும் கள்வனுடைய,

மருந்திற் பட்ட ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருஞ்சிறைப் பட்டோர்.

உம்மைப் பொருத்த மட்டில் பாரும். (இவனை அரசன் ஆணைப்படி செய்யாமல் இவனுடைய மருந்தில் அகப்பட்ட ராயின் கீழில் அரச கண்டனைக்கு ஆளாவீரன்றோ?) இப்படியே மற்ற மாயக் கள்வரும் ஏமாற்றுவரென்பதை அறியுங்கள். மேலும் அவர்கள்,

மந்திரம் காவிடை வழுத்துவ ராயின்
இந்திர குமரரின் யாங்கண் குவமோ.
தெய்வத் தோற்றம் தெளிகுவ ராயின்
கையகத்து உறுபொருள் காட்டியும் பெயர்குவர்.
மருந்தின் நம்கண் மயக்குவ ராயின்
இருஞ்சேனம் பெயரும் இடனுமா ருண்டோ
நிமித்தம் வாய்த்திடின் அல்ல தியாவதும்
புகற்கிலர் அரும்பொருள் வந்துகைப் புகுதினும்.
தந்திர காரணம் எண்ணுவ ராயின்
இந்திரன் மார்பத்து ஆரமும் எய்துவர்.
இவ்விடம் இப்பொருள் கோடற்கு இடமெனின்
அவ்விடத்து அவரை யார்காண் கிற்பார்.
காலங் கருதி அவர்பொருள் கையுறின்
மேலோ ராயினும் விலக்கலும் உண்டோ.
கருவி கொண்டவர் அரும்பொருள் கையுறின்
இருநில மருங்கின் யார்காண் கிற்பார்.
இரவே பகலே என்றிரண் டில்லை
காவிடங் கேட்பின் ஓர் புகலிட மில்லை.

"வீரர்காள்! மேற்கூறிய களவுநூலின் பொருள் விளங்கிற்றோ? நன்கு விவரிப்பேன் கேளுங்கள். கள்வர், தாங்

கள் பயின்ற மந்திரத்தை ஓதுவாராயின் தேவமக்களை போல நமது கண்ணிற் படாமல் மாயமாய் மறைந்து விடுவர்; தாங்கள் வழிபடும் தெய்வங்களை மனதில் நினைப்பாரானால் அவருடைய கையிலகப்பட்ட பொருளை நமக்குக் காட்டியும் தப்பிப் போவர்; மருந்திலை மயக்குவாரால் நாம் இருந்தவிடத்தினின்று பெயரவும் இயலுமோ? அரும் பொருள்கள் கைக்குள் வந்து புகுவதாயிருப்பினும் கல் நிமித்தம் உண்டாலென்றித் திருடப்போகார்; களவுதாற் றினை மட்டும் நன்கறிந்து செய்வாரால் இந்திரன் மார் பகத்து ஆரத்தையும் வானகஞ்சென்று வெளவி வருவர்; இதுதான் இப்பொருளைக் கொள்ளையிடற்கு வற்றிட மென்று துணிவாரால், அவ்விடத்தில் அவர்களை மாவரும் காண ஒண்ணாது; தக்ககாலம் இதுதானென்று ஒரு பொரு ளைக் கைப்பற்றி விட்டாராலும் மேலோராலும் அதைத் தடுத்தல் செல்லாது; கருவிகளைக் கொண்டு பெறற்கரிய பொருள்களைப் பெற்று விடுவாரால் இந் நிலவுலகர் எவரும் அதனைக் காணுவாரல்லர்; அவர்கட்கு இரவென்று மில்லை; பகலென்று மில்லை. எவரும் அவர்கள் கண்ணிற் படாமல் தப்பி வாழ்வதற்கு இடமில்லை. எங்கு மக்கள் உண்டோ அங்கெல்லாம் அவரும் உண்டு.

அன்றியும், முன்னொருகால் நடந்த களவொன்றை உங்கட்கு நினைப்பூட்டுகின்றேன். நம் மன்னர்பெருமான் நெடுஞ் செழியரின் தம்பி இரவில் துயில் கொண்டார். அதனர் கோலத்துடன் முதுகுள் அரண்மனையுட் சென் றிருந்த கள்வன் ஒருவன், இரவில் பெண்ணொருக் கொண்டு பள்ளியறைக்குள் அழைத்து நுழைந்து விளக்கு நிழலிற் பதுங்கி இளவரசர் தரித்திருந்த வயிரமணிக் கோவையைக் கைப்பற்றினன். கோதர் விழித்து உடைவாளை உரு வினர். அதன் உறையைக் கள்வன் எடுத்து அரசர் குத்தாங்

தோறும், குத்துந் தோறும் அவ் உறைக்குள் வாள்புகும்படி ஏற்றான். அதைப் பொறுத்த அரசர் மற்போர் தொடங்கினர். ஆங்குள்ள தூணொன்றைத் தானைக் காட்டித் தனது களவுநூற் கல்வியால் அக் கள்வன் தப்பினான். இது நீவிரும் அறிந்த தொன்றே.

"அங்ஙனம் தப்பிய கள்வனை இதுவரை கண்டாருண்டோ! உண்டாயின் கூறும் பார்ப்போம். இதுகாறும் யான் மொழிந்துவருமாற்றால் இவர்க்கு இவரே நிகராவ தன்றிப் பிறரை நிகராகச்சொல்ல இயலாதென்பது நன்கு விளங்கும். வீரர்காள்! இனிக் காலங்கடத்தாதீர்." என்றான்.

தீமையே உருவாகவந்த வஞ்சகப் பொற்கொல்லன் இவ்வாறு மொழிந்த மாற்றத்தைக் கேட்டவீரருள் இளையோன் ஒருவன், "முன்பு, மழைக்காலத்தில் கள்ளிரவில் கண்மயங்கும் இருளில் நிலத்தைத்தோண்டும் உளியைக் கையிற்கொண்டு, நீல உடை உடுத்து, கையிற்பற்றிய பொருளை விடாத தன்மையால் கொடும்பசியிற் கவ்விய ஊனை விடாத புலியைப்போல் ஒரு கள்வன் வந்து தோன்றினான். காவல்செய்திருந்த யான் அவனை நெருங்கி வாளை உறைகழித்தேன். அவன் அவ்வாளைப் பறித்தான். இன்னமும் என்வாளையும் அவனையும் எவ்விடத்தும் காண்டலென் கள்வர்களின் மாயம் யாராலும் கண்டுபிடிக்க வியலாது. ஆகவின், நம் பத்தர் கூற்றத்தகும். இவனை நாம் கைதவற விட்டால் அரசரால் ஒறுக்கப்படுவோம் என்பதில் ஐயமில்லை. இனி என்ன செய்வ தென்பதைக் கூறுமின்" என்று மற்றக் காவல் வீரரை உசாவினான்.

அந்தோ! அந்தோ! பின் நடந்ததை என்னென்று கூறுவல்! நெஞ்சு நடுங்குகின்றது! மனந் தடுமாறுகின்றது!

கோவலன் இறுதி

இவ்வளவில், அவ்வீரர்களுள் கற்றறிவில்லா மூடன்றுருவன் கொலைக்கஞ்சாக் கனிமகன், தன் கைவாளாலே வணிகப் பெருந்தகையை வெட்டினான். அவ் வெட்டுக் குறுக்கே ஊடறுத்தது. செங்குருதி கொப்பளித்து எங்கும் பரவியது. நிலமடந்தை பெருந்துயர்கூர, காவலன் செங்கோல் வளைய, பண்டை யூழ்வினை ஏதநிச்சியால் வெட்டுண்டு வீழ்ந்தான் கோவலன்.

அடிகள் கூற்று.

"கண்ணும் இருவினையும் கன்னுமின்கள் கல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
வினைவாகி வந்த வினை."

ஆய்ச்சியர் ஆட்டம்

இனி, அன்று விடியற்காலையில் அரச மாளிகையில் காலை முரசம் ஒலித்தது. அதைக்கேட்ட மாதரி, நாம் இன்று அரண்மனைக்கு நெய்யளக்கும் முறையென்று, கடைகயிறும் மோர் சிலுப்பியுங் கொண்டு தயிர்த்தாழிகள் இருக்குமிடத்தை போய்ப் பார்த்துவிட்டு, ஐயையை அழைத்து, "மகளே! நாம் பிழையிட்ட தாளிகளிற் பால் உறையவில்லை. உருகணைத்த வெண்ணெயும் உருகவில்லை. நமது தொழுவைத்திலுள்ள கானைகளின் கண்கள் நீரைச் சொரிகின்றன. பசுக்கள் உடல் நடுக்கத்துடன் அலறுகின்றன. கட்டுக்குட்டிகளும் துள்ளி விளையாடாமல் குழைந்து கிடக்கின்றன. பசுக்களின் கழுத்திற் கட்டிய பெருமணிகளும் கட்டறுந்து வீழ்ந்து கிடக்கின்றன. ஆகவின் நமக்கு வருவதோர் தீங்குண்டு. அஃது எதுவோ! என்னவோ! அறியேம். ஆயினும், மகளே! அஞ்சவேண்டாம். எவற்றிற்கும் **கண்ணபிரான்** இருக்கின்றார். அவர்

மூன்பு ஆயர்பாடியில் காதெரு மன்றத்தில் தமையன் பல ராமரோடு ஆடிய விளையாடல்கள் பலவுள. அவற்றுள், பின்னைப் பிராட்டியொடும் பலராமரோடும் ஆடிய குரவைக் கூத்தை மங்கையர்க்கு அணிகலனுகிய கண்ணகியுங் காண ஆடுவோம். இந்த ஆட்டம் அத்தொல்லுகளை யெல்லாம் தொலைக்குங் கன்மையது. அதனல் கன்றுகளுந் தழை களுடம் பிணி நீங்குகும்" என்று இசைத்தாள்.

அதன்மேல் ஆய்ச்சியர் கூடினர். மாதரி, அவர்கட்கு முன்னைக்காலத்தில் பின்னைப்பிராட்டியின் தோழியரான ஏழு கன்னிப்பெண்கள் வந்வகை தருதுகளை வளர்த்ததும், அவற்றின் வன்மை தொலைத்து அவைகளின்மீது ஏறிச் செலுத்தினவளை பின்னையை மணக்கத்தக்கான் என்று அப் பெண்கள் கருதினதும் விவரித்துக் கூறினுள். "அவர்கள் அந்நாளில் ஆடியதுபோல, நாம் நம்முள் ஏழுவரைத் தெரிந் தெடுத்து, ஆடவேண்டிய முறையில் நிறுத்திக் கொல்லேப் புனத்துக் குருந்தொசித்தான் றன்னை முல்லேப்பாண்ணேற் பாடி யாடுவோம்" என்றும் உரைத்தாள்.

அதுபோல, மாதரியால் தெரிந்தெடுத்து அமைக்கப் பட்ட ஏழு பெண்மக்களும் ஆடத் தொடங்கினர். அவ் வாட்டத்தில்,

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றும் மானுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையங் தீங்குழல் கேளாமோ தோழீ!
பாம்பு கயிறுக் கடல்சடைந்த மாயவன்
சங்கும் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!
கொல்லேயஞ் சாறற் குருந்தொசித்த மாயவன்
எல்லோரும் மானுன் வருமேல் அவன்வாயின்
முல்லேயந் தீங்குழல் கேளாமோ தோழீ!

என்னும் பாடல்களையும் இன்னும் சில பாடல்களையும் பாடினர். பண்டைய இவ்வாட்டத்தை மாதரி சால்புடைத்து என்று வியந்தாள். பின்னர்,

எல்லா நாம்
புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்ளரிப் பாணியொன் றற்று.

என்று பாடத் தொடங்கி,

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பாரால்

என்பது முதலிய பாடல்களையும் பாடி வாழ்த்தினர்.

அதன்பின்,

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றூல் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே

அறுபொருள் இவனென்றே யமரர்கணங் தொழுதேத்த
உறுபதியொன் றின்றின்றியே உலகடைய உண்டனையே
உண்டவாய் கனிவுண் உறிவெண்ணெயுண்டவாய்
வண்டுழாய் மாலேயாய் மாயமோ மருட்கைத்தே

திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்தின் செங்கமல
விரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்தஅடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தஅடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே

என்று முன்னிலைப் பரவல் பாடினர். பிறகு,

மூவுலகும் ஈடியான் முறைநிறம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்இலங்கை சுட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

பொியவனே மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுறும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணுத கண்ணென்ன கண்ணே
கண்ணிணைமத் துக்காண்பார்த்தங் கண்ணென்ன கண்ணே.

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனர் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ணைமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயண வென்ற நாவென்ன நாவே.

என இவை கூறிப்பரவினர். ஈற்றில், "நாம் வந்திய தெய்வம் நம் பகைக்களிடத்துத் தூலப்பட்ட பினைகளைத் தீர்ப்பதாக; தென்னவன் முராசம் எந்நாளும் மாற்றரை வென்று முழங்குவதாக" எனவேண்டி ஆட்டத்தை முடித்தனர்.

முடித்ததும், மாதரி திருமாவின் அடித்தாமரையைச் சாந்தம் பூசிப் புகையிட்டுப் பூத்தூவிப் பூசித்தற்கு நீராட வையை சென்றாள். அப்பொழுது மதுரை உள்ளகினிருந்து கோவலன் கொலையுண்டசெய்தியை அறிந்துவந்த ஆய்ச்சியொருத்தி, விரைந்தோடிவந்து கண்ணகிக்கு அதனைச் சொல்ல மனமின்றி, நீராடிவந்த ஆயர்மகளிடம் தனித்துச் சொல்லி அவர்களொடு தானும் நெஞ்சம் அழிந்து விம்முதலுற்று நின்றாள். கண்ணகி அவளை அறிவுறுத்தி "தோழீ! நீ கூறியது யாது? நகருட்சென்ற என் காதலனை இன்னம்

வரக்காணேன். காணுமையால் என் மனம் கலங்குகின்றது. கொல்லன் உலைக்களத்துத் துருத்தியையுந் தோற்கடிக்கும் படி அழல்மூச்சு எழுகின்றது. அவர்சென்றது முதலே அவரை எப்போது காண்போம் எப்போது காண்போம் என்று நெஞ்சம் அலமருகின்றது. குறிப்பால் நீயும் இம் மாதருடும் என்னை நோக்கிப் பேசிக்கொள்வது என்னவோ தோழி? அதை விரைவிற் சொல்லுவாய்" என்று கரைந் தனள்.

அதற்கவள் "ஐயோ அம்ம! அரசியின் சிலம்பைக் களவாடிய கள்வனென்று காவலாளரால் உன் கணவன் வெட்டுண்டார்" என்று சொல்லி வாய் மூடுமுன், கண்ணகி துடி-துடித்து நிலத் தில் வீழ்ந்தாள். மூர்ச்சித்துக் கிடந் தாள். பொங்கி எழுந்தாள். ஓ வென்று அலறினாள். மறு படியும் வீழ்ந்தாள். கண்கள் சிவப்பக் கையால் முகத்தில் அறைந்துகொண்டு,

கொடுந்துயர் பூண்டாள் கோவ லற் காண்டல்.

இன்புறு தங்கணவர் இடரொரி யகலுழ்ந்தக்
துன்புறு வணிகோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ

நறைமலி வியன்மார்பின் நண்பனை யிழந்தேங்கித்
துறைபல திறமுழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறவெறி திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனை மடவோயான் அவலங்கொண் டழிவலோ

தம்முறு பெருங்கணவன் தழலெரி யகலுழ்ந்தக்
கைம்மைகூர் துயர்முழுங்கும் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ

என்று அழுது புலம்பினாள். அரற்றினாள். ஏங்கினாள். அருகில் நின்ற மகளிரைநோக்கி "அந்தோ மாதர்காள்! நீவிரெல்லாங்கேண்மின்" என்று சொல்லிவிட்டுச் சூரியனைப் பார்த்து "ஆ காய்கதிர்ச்செல்வனே! கள்வனே என் கணவன்?" என்றுகேட்டாள். உடனே வானிலிருந்து "ஏ மாதராய்! உன் கணவன் கள்வனல்லன்; அவனை இவ்வாறு செய்த இவ்வூரை எரியுண்ணுமாம்" என்றொரு சூல் எழுந்தது.

இங்ஙனம் வெய்யவன் கூறியதைக் கேட்ட கற்பரசி, கணவன் கொண்டுபோன சிலம்புபோக மற்றச் சிலம்பைக் கையிலெடுத்துக்கொண்டு நகருட் சென்றாள். சென்றவள், நகருள் எதிர்ப்பட்ட மகளிரை நோக்கி, "ஓ ஓ!

முறையில் அரசன்றன் வாரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்!

யாமொரு வணிகன்மனைவி; என் கணவர் கள்வனல்லர்; அவர் என் காற்சிலம்பை விற்க வந்தார்; அதனைக் கவர்ந்து கொள்வதற்காக அவனைக் கள்வனென்று பெயரிட்டு இவ் வூரார் கொன்றுவிட்டனர். அந்தோ! அநியாயம்! அநியாயம்! மடவீர்காள்! என் கையிலிருக்கின்ற இதுதான் அதன் இணை யாகிய மற்றைச்சிலம்பு. யான் படாதபாடும் பட்டேன். உறுதுயருறும் உற்றேன். என்போன்ற மங்கையர்காள்! நீங்கள் உங்கள் கணவனை எப்படிக் காதலிக்கின்றீர்களோ அதுபோலக் காதலிக்கின்ற நான் என் கண்முன்னே என் கண்ணாளர் வரக்காண்பேனே! அவர் பேசும் இனிய சொற்களைக் கேட்பேனே! நான் அவர் வெட்டுண்டு கிடக் கும் இடத்திற்குப் போகின்றேன். அவர் என் அல்லலைக் கண்டு எழுந்து ஒரு வார்த்தையாயினுஞ் சொல்லக் கேளா தொழிவேனுகில், நிறையுடைப்பத்தினிப் பெண்டிர்காள்

என்று நம்மை அழைத்த என்னைக் கள்வன் மனையினென் றிகழுமின்" என்று சொல்லி அல்லலுற்று ஆற்றாது அழுதாள்.

அங்ஙனம் அழுகின்றவளை, ஆற்றுதற்கு ஒருவழியுங் காணுத மதுரையார், தாழும் வருந்தியழுது "இறக்கும் வரைக்கும் நீங்காததுன்பத்தை இம் மடமங்கைக்கு உண் டாக்கியதால், என்றும்கோடாத பாண்டியன் செங்கோல் கோடியது; குளிர்ந்த குடையையும் வெய்யவனையும் உடைய தென்னவன் கொற்றந் சிதைந்தது. அந்தோ! ஒரு பொற்சிலம்பைக் கையிலேந்திய இத்தெய்வக்கற்பினள், ஈண்டு இவ்வாறு அலமருகின்றாள்; வாய்விட்டு அரற்றுகின் றாள்; சுன்னதங் கொண்டாள்போல் மருளுகின்றாள்; சுழலுகின்றாள். இதனல் என்ன நேருமோ! யாது சூழுமோ!" என்று இரங்கினர். பின்னும் அவர்கள் "ஐயோ, இப்படியும் அரசன் நெறிபிறழலாமா! ஒரு சிலம் பின் பொருட்டா இங்ஙனம் முறைதிறம்பினன். என் மன்ன வன் மதி இன்னணமாயிற்று" என்று பல சொல்லிப் பழி தூற்றினர். நகரத்தின் நாலுபக்கங்களிலும் இந்தப் பேச் சொலியே கல்லென்று ஒலித்தது.

இவ்வாறு ஊரவரித்துக் கூடிய மக்கள், அந்த மாலைக் காலத்திலே கோவலன் வெட்டுண்டுகிடந்த விடத்தை அவ ளுக்குக் காட்டினர். கண்டாள் கண்ணகி; பதை பதைத் தாள்; இரத்தந்தோய்ந்து கிடக்கின்ற காதலன்மீது வீழ்ந் தாள்; உருண்டாள்; புரண்டாள்; கட்டிக்கொண்டாள்; முட்டிக்கொண்டாள். "என் ஆருயிர்க்காதலனே! இனி உய்வை என்று காண்பேன், என் அருமைத் தெய்வமே! இனி உய்வை என்று தொழுவேன். 'காதலி! தனிமைக்கு வருந்தாதே; சிலம்பைவிற்று வருகின்றேன்' என்று

இந்தப் பேதையைக் கட்டித்தழுவிக் கனிமொழி புகன்று வந்தீரே! என் கண்ணனைய தலைவரே! உம்மை மீட்பொழுது காண்போம், எப்பொழுது காண்போம் என்று வழி பார்த்திருந்த யான் இந்தக் கோலத்தையா காணவிருந்தேன்! என் அருமைத்துணைவ! நாம் இதற்காகவா நாட்டைவிட்டு, வீட்டைவிட்டு இங்கு வந்தோம்! ஆ என் செல்வமே! பூவிற் புதைந்து கிடக்கும் உமது மார்பு இப்படிப் புழுதிபடிந்து கிடக்கின்றதே! பாண்டியனன்றோ இத்தீங்கிழைத்தான். திக்கற்ற இவ் வெளியாளருக்குத் தீதுதலொன்றும் சொல்கின்றீரில்லையே! உமது அருமை வாய் திறவீரா? ஆ கண்ணாளா! ஆ ஆ என் செய்வேன். யாது புரிகுவேன் ஐயோ! இங்ஙகில்,

பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்

சான்றோருரும் உண்டுகொல் சான்றோருரும் உண்டுகொல்
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோருரும் உண்டுகொல் சான்றோருரும் உண்டுகொல்

தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்

என்று குய்யோ முறையோ வென்று அழுதரற்றினள்; துணைவனை மார்பொடு மார்பு பொருந்த இறுகக் கட்டித் தழுவிக்கொண்டு கதறினள். அம்மட்டில் கோவலன் உயிர் பெற்று எழுந்து நின்று, "ஐயோ காதலி! என்மதி முகம் வாடியதே" என்று சொல்லித் தன் கையால் அவள் கண்ணீரை மாற்றினன். உடனே கண்ணகி எங்கியழுது தரையில் வீழ்ந்து அவன் பாதங்களை இருகைகளாலும் பற்

றிக்கொண்டான். இவ் வினோயுடம்பை நீத்துத் துறக்கம்புக எழுந்த கோவலன், "கண்ணகி! நீ இரு" என்று சொல்லி விப் போயினன்.

"ஆ! இஃதென்ன மாயம்! இங்கெழுந்தாங்கின்று என் மனத்தை மருட்டியது யாதோ! தெய்வந்தானே! வேறென்னனோ! ஒன்றுந் தெளிகில்லேன். யாதாயினும் ஆகுக. யான் எங்குஞ் சென்று ஆராய்ந்து என் கலைவனைக் காருவேன். அஃதெனக்கு மிக எளிதே. என்றாலும், ஆ! ஆ! இப்போது கடுஞ்சிற்றத்தின் கைப்பட்டிருக்கின்றான், இச்சிற்றந் தணிந்தன்றி என்மணாளனை நாடேன். அது தணிதற்கு இக்கொடியபாண்டியனை நான் போய்க்கண்டு, என் ஆருயிர்க்கலைவனை வேண்டுமென்று கேட்பேன். சும்மாவிடேன்" என்று எவ்வணி யெழுந்தாள் கண்ணகி. தான் ஊரிற்கண்ட கனவைக் சுற்று நினைந்து நின்றாள். கயல்விழியாற் சோரியும் நீரைத்துடைத்துக் கொண்டாள். புறப்பட்டாள். பாண்டியன் மாளிகைக்குட் போகின்றாள்.

வழித்துணைத்தல்

அக்கருணத்தில், கோப்பெருந்தேவி தன் நிலையை நோக்கி, "தோழி! நான் இரவு பலதீக்கனவுகள் கண்டேன். அவற்றை உனக்குக் கூறுவேன். அதில் ஒன்று, நம் செங்கோலும் வெண்குடையும் சாயக்கண்டது. மற்றவை, அரண்மனை வாயிலின் ஆராய்ச்சிமணி ஆரவாரிக்கவும், என் கைகளும் அதிர்ந்திடவும், சொங்கதிர்ஞாயிற்றை இருள் விழுங்கவும், இரவில் இந்திரனில் தோன்றவும், பகலில் விண்மீன் விழவும் கண்டனைதாம். இக்கக் கனவுக்களால் ஏதோ கேடு சூழப்போகின்ற தென்று தெரிகின்றது. இதனை மன்னனுக்கு அறிவிப்போம்" என்று எழுந்தாள். அவளுடன்,

ஆடியேந்தினர் கலனேந்தினர்
அவிர்ந்து விளங்கு மணியிழையினர்
கோடியேந்தினர் பட்டேந்தினர்
கொழுந் திரையலின் செப்பேந்தினர்
வண்ணமேந்தினர் சுண்ணமேந்தினர்
மான்மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணியேந்தினர் பிணையலேந்தினர்
கவரியேந்தினர் தூபமேந்தினர்

ஆகிய மடமங்கையர் பலர் சூழ்ந்து வந்தனர். 'பாண்டியன் பெருந்தேவி வாழ்க' என்று பல மாதர் வாழ்த்திவந்தனர். ஆயமகளிரும் காவல்மகளிரும் அடியீடுபரவி வந்திவந்தனர். இன்னணஞ் சென்ற கோப்பெருந்தேவி, தயாசனையடைந்து தான் கண்ட கனாக்கனவினைக்கொண்டிருக்கின்றாள். அச் செய்தியைச் செவியேற்று அரியணையில் அமர்ந்திருந்கின்றான் பாண்டியன் நெடுஞ்செழியன்.

அப்போது கண்ணகி, மாளிகை வாயிலை அடைந்து வாயில் காப்போனை அணுகி,

"வாயி லோயே! வாயிலோயே!
அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடைபுகத் தானென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே"

என்று அறையலாயினள். காவலன், மாநிலங் காவலன் முன் சென்று வணங்கி, "மன்னர் பெருமானே! வாழி; நம் அரண்மனை வாசலிலே ஓர் ஆரணங்கு வந்திருக்கின்றாள்; அவள் மயிடன் தலையைப் பீடமாக்கொண்ட கொற்றவையும் அல்லள்; மாதொருபாகனை ஆடல்கண்டருளிய பத்திரையும் அல்லள்; ஆலல், மாற்றங் கொண்டாள்போலும்

சிற்றங்கொண்டாள் போதலும் காணப்படுகின்றாள்; பொற் சிலம்பொன்றைக் கையிற்கொண்டிருக்கின்றாள். கணவனை இழந்தவளாம்" என்று விண்ணப்பித்தான்.

"காவல! அங்ஙனமாயின் அவள் இங்கு வரட்டும்" என்று அரசர் பெருமான் ஆணைகொடுத்தான். வாயிற் காவலன் நீர்வார்ந்த கண்ணளாகிய கண்ணகியை அரசன் திருமுன்பு செல்லவிட்டான். அவள் அரசனை அணுகினாள். அவ்வளவில் அரசன் கண்ணகியை நோக்கி,

"நீர்வார் கண்ணை என்முன் வந்தோ
யாரையோ நீ மடக்கொடியோய்?"

என்று கேட்டலும், "தெளியா அரசே! செப்புவேன் கேண்மோ, யான், ஒரு புறவின் உயிரைக் காத்தற் பொருட்டுத் தன் உடற் சதையை அரிந்துகொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் நாட்டிலுள்ளவள். அன்றியும்,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் சொரிதர
தான் தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்

யாவரே அந்த மதுரைநெறிக் சோழன் நாட்டிலுள்ளவள்; வசாஸ்சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி மாசாத்துவான் என்னும் பெருவணிகன் மருகி; எனது காற்சிலம்பை விற்க வேண்டி இனது நகரிற் புகுந்து உனது நெறிதப்பிய ஆணையால் கொலையுண்ட கோவலன் மனைவி; என் பெயர் கண்ணகி" என்று கழறினள். அரசன் கேட்டு "மாதே! நீ வினவியதனை மெய்தான். ஆனால் நெறிதப்பிய செய்கையென்றனை. இதுவா நெறிதப்பிய செய்கை? கள்வனைக் கொல்லல் குடிக்கோ லாகுமா?" என்றான். "வேந்தே! நீர

விசாரியாமல் தண்டிப்பதும் நீதிதானே? எந்த நீதி நூல் அப்படிக் கூறுகின்றது? எந்த மன்னர்கள், அமைச்சர்கள், அறிவாளர்கள் அதை ஆதரிக்கின்றார்கள்? நீ செய்தது பிழையென்று கண்டால் என் நுகினவன் உயிரை மீட்டுத் தர உன்னால் இயலுமோ? என் கணவனிடமிருந்து உன் காவலர் கவர்ந்துவந்த எனது சிலம்பின் உள் முரி மாணிக்கம். உன் முரண்மனைச் சிலம்பின் உள் முரியாது? முதைக் சோதித்துப்பார். முகன் மேல் உன் முறைநெறி வெளிப்படும்" என்றாள்.

"அம்ம! உன் கூற்றுச் சாலவும் தகுவதே. எங்கள் சிலம்பின் உள்முரி முத்து" என்று சொல்லி, தன் ஏவலாளனை, "கோவலனிடமிருந்து கொண்டுவந்த சிலம்பை இங்கே தாரும்" என்று கேட்டு வாங்கித் தன்னெதிரில் வைத்தான். கண்ணகி முதலை உடைத்தாள். முச் சிலம்பு வாய்விண்டு மாணிக்க முரி சிதறிற்று. கண்டான் முதன்.

"ஆ கெட்டேன்! சற்றும் ஆய்ந்தோராய்ந்து பாராமையால் என்றே இம்மாபெருந் தீங்கிழைத்தேன்; வஞ்சகப் பொற் கொல்லன் சொல்லை நம்பியன்றே இங்ஙனம் முரண்புணர்த்தேன். முருளொழித்தேன். பாண்டியர் மரபுக்குப் பழி தேடிவைத்தேன். ஐயோ! இந்தக் கொடும்பாதகன் இனி உயிரோடிருத்தல் இழிவன்றே! என்னால் இதச் செங் கோல் தளர்ந்ததே! செழுங்குடை தாழ்ந்ததே! முந்தா!

"பொன்செய் கொல்லன் றன்சொல் கேட்ட
யானே அரசன்! யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகென் ஆயுள்"

என்று புலம்பினான். மயங்கி முரியனையின் னின்றும் நிலத்தில் வீழ்ந்தான்.

மெய்யிற் பொடியும் விரிக்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டனனே தோற்றான்அக் காரிகைதன் சொல்செவியில்
உண்டனனே தோற்றான் உயிர்.

உடனே, கோப்பெருந் தேவி மெய்ம் நடுங்கி விதிர் விதிர்த்து ஆடைகுலைய அணிகுலைய அலறி எழுந்து :" தானை இழந்தால், தங்தையை இழந்தால், மக் கள் இழந்தால், மற்றிழை இழந்தால், அவர்களின் முறை கூறிப் பிறரைக் காட்டலாம். கணவனை இழந்தார்க்கு வேறு கதியில்லையே !" என்று கண்ணகியின் இணையடியில் தொழுது விழுந்தாள். வீரமொழி.

அதற்குக் கண்ணகி, " ஓ கோப்பெருந்தேவி ! கொடு வினையேன் யாதொன்றும் அறியேன், என்றாலும்,

முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்.

அன்றியும், 'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம்' என்ற மெய்ம்மொழி பொய்க்குமா ? என் உடல் பதறுகின்றது. உள்ளம் துடிக்கின்றது. ஆ ! சீற்றம் பொங்குகின்றது. யான் இம் மதுரையைச் சுடுவேன். என்னை நீ எத்தனையென்று அறிவையோ ?

வண்ணி மாடமும் மலைப்பளியுஞ் சான்றுக
மூன்னிறத்திக் காட்டிய மொய்குழலான் ; பொன்னிக்
கரையின் மணற்பாவை நின்கணவ னுமென்று
உரைசெய்த மாதரொடும் போகார் திரைவந்து
அழியாத சூழ்போக ஆங்குந்தி நின்ற
வரியார் அலைவற்குல் ; மாதர் உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று

கன்னவில் தோளாயோ வென்னைக் கடல்வவ்வ
முன்னிறுத் திக் காட்ட அவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்; மன்னி
மணன்மலி பூங்ஙானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன் வரக் கல்லுருவம் நீத்தாள்; இணையாய
மாற்றுள் குழவிவிழுத் தன்குழவி யுங்கிணற்று
வீழ்த்தேதற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணுள்; வேற்றெருத்
தீணைக்கங்கண்டு நிறைமதி வாண்முகத்தை [வன்
காணேனர் குரக்குமுகம் ஆகென்று போன
கொழுநன் வாவே குரக்குமுகம் நீத்த
பழுமணி யல்குற்பூம் பாவை; விழுமிய
பெண்ணறி வென்பது பேதைமைத்தே யென்றுனைத்த
நுண்ணறிவி னேர்நோக்க நோக்காதே எண்ணினேன்
வண்ட லயர்விடத் தியாணேர் மகட்பெற்றல்
ஒண்டொடி நீயோர் மகற்பெறிற் கொண்ட
கொழுநன் அவளுக்கென் றியாணுரைத்த மாற்றங்
கெழுமி யவளுரைப்பக் கேட்ட விழுமத்தாற்
சிந்தைதோய் கூருந் திருவிலற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டானாய் முந்தியோர்
கோடிக் கலிங்கம் உடுத்துக் குழல்கட்டி
ஈடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப்பூம் பாவை;

மூதலான பத்தினிப் பெண்டிர்கள் பிறந்த காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்தவள்.

"ஏ அரசி! நானும் ஒரு பத்தினியே யாமாகில் இந்த அரசனை ஒழித்தேதாடு நில்லாமல் இம்மதுரையையும் அழிப்பேன். என் ஒழுக்கத்தின் ஆற்றலை நீ இன்னும் பார்" என்று வீரமொழி புகன்று அவள் முன்பு தன் கையிலிருந்த ஒற்றைச் சிலம்பையும் எறிந்து விட்டு வீராவேசத்துடன் அரண்மனையை விட்டு வெளிப்பட்டாள். இவை யெல்லாம்

கண்ணகி சொல்லி முடிக்கு முன்னே கோப்பெருந்தேவி அரசனெடு வீழ்ந்து உயிர் துறந்தனள்.

இனி, அரண்மனையை விட்டு வெளிப்பட்ட கண்ணகி அங்கிற் சென்று "நான் மாடக்கூடலின் மாதர்காள்! மைந்தர்காள்! தெய்வங்காள்! மாதவர்காள்! எல்லோரும் கேளுங்கள்; நான் யாதொரு குற்றமும் அற்றவள்; என் காதலனைக் கள்வனென்று கொன்ற இந்த நகரின்மீது சீற்றங்கொண்டேன்" என்று சொல்லி மும்முறை சுழன்று வலது கையால் இடது கொங்கை முகத்தைத் திருகி வீசினாள். உடனே அங்கியங் கடவுள், நீலநிறமும் செஞ்சடையும் வெண்பல்லும் வாய்ந்த பார்ப்பனக்கோலத்துடன் தோன்றி, "ஓ மாபதிவ்னி! நான் அக்கினி தேவன். பண்டைக்காலத்தில் ஓர் ஏவல் பெற்றுள்ளேன். அது, 'நினக்குப் பிழை யிழைத்த நாளில் இம் மதுரைப்பதியை எரியூட்டுக' என்பது. இந்நகரில் யாரும் பிழைக்கத் தக்கார் உண்டோ?" என்று கேட்டனன். அதற்கு வீரபத்தினியார்,

மதுரை தீப்படல்.

"பார்ப்பார் அறவோர் பசுபத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க"

என்று எனிஞர். அப்பொழுதே அழல்மண்டி எரியத் தொடங்கிற்று.

நகரிகாவற் றெய்வமாகிய வருணப் பூதங்கள் நான்கும் மன்னவன் நெடுநிலைமுக்கு நாளில் மதுரையைத் தீயுண்ணுமென்பதை முன்னரே அறிந்திருந்தனவாகலின் அவைகள் நகரைக் காவல் புரியாது விட்டு நீங்கின. அரசு கட்டிலில் வேந்தனும் தேவியும் உயிர் பிரிந்ததைக் காங்கள் அறிவு

மயங்கியதால் அறியாத அமைச்சர் அந்தணர் ஆகிய அவை யினரும், மாளிகையிலுள்ளோர் பிறரும், வாய் திறவாமல் ஓவியக்கூட்டம் போன்றிருந்தனர். பரிக்காரர், தேர்ப்பாகர், வாள்வீரர் முதலானோர், மாளிகை வாயிலில் தீ மண்டி எரி வது கண்டு ஓடி வந்து குழுமினர். கடை வீதியும் தேர் வீதியும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால் வகை மரபினர் தெருக்களும், காண்டலவனைத் தீப்பட்ட காலத்தே போலக் கலங்கலாயின. அறவோரை அழல் அணுகவில்லை. பசுக்களும் கன்றுகளும் ஓடி ஆயர் இடங் களை அடைந்தன. யானை குதிரை முதலாயின வினைத்தோடி நகரைக் கடந்தன. சேக்கையிலிருந்தார் ஓடவரும் மகளி ரும் திடுங்கி மயங்கி அலங்கோலமாய் வெளிப்பட்டார்கள். குழந்தைகளோடு நித்திரை புரிந்தோர் அவர்களை எழுப்பிக் கொண்டு அலமந்தோடினர். மனையறத்திற் குறைபாடின்றி யும் வருவிருந் தோம்பியும் வாழும் பெருமனைக் கிழத்தியர்,

"இலங்குபூண் மார்பிற் கணவனை யிழந்து
சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ அன்று"

என்று சொல்லிச் சுழன்றிக் கடவுளைத் தொழலாயினர். ஓடரங்கில் நாடகம் புரிந்தோர் கணிகை மாதர்கள், பாடகர், கண்ணுமைகாரர் முதலாயினர் அரங்கத்தை நீங்கி,

"எந்நாட் டாள்கொல்! யார்மகள் கொல்லோ!
இந்நாட்டு இவ்வூர் இறைவனை யிழந்து
தோரா மன்னனைச் சிலம்பின் வென்று இவ்
வூர்தீ மூட்டிய ஒருமகள்!"

என்று வியந்து வியந்து பேசினர். நகர முழுதும் மாலை விழாக்கள் நின்றன; வேத ஒலை ஒய்ந்தது; தேவாட்டயம்

தெய்வம் பாலையும் வினைக்கேற்றலும் இல்லையாயின; முரசுகளின் முழக்கம் அடங்கிற்று. மதுரை அல்லோல கல்லோலப்பட்டு அலங்கோலமாயிற்று.

கண்ணகியார், கொல்லன் உலக்களத்துக் குருந்தி மூக்கைகப்போலத் தீயெழும்ப மூச்சுவிட்டு, நெடுங்கருங்கனிலும் குறுங்கருங்கனிலும் சின்னாளம் கடப்பதும் சின்னாளம் மயங்கி நிற்பதுமாக நிலைகுலைந்து தயரே உருக் கொண்டதெனச் சுற்றிச் சுழன்று திரிகின்றார்.

மதுராபுரித் தெய்வம்வரவு முறை கிளத்தல்.

இங்ஙனம் அல்லலுழக்கும் வீரபத்தினி முன் மதுராபுரித் தெய்வம் வந்து தோன்றி, ஆங்கு அலமருகின்ற அந்த மாபத்தினி முன்னே நில்லாமல் பின் தொடர்ந்து, "நங்காய்! யாது குறை?" என்றது. வீரபத்தினியார் வலது பக்கமாகத் திரும்பி, "என்பின் வருகின்ற நீ யாவள்? எனது துன்பத்தை அறிவையோ?" என்றார். அதற்கு அத் தெய்வம் "ஆம் அறிவேன். யானும் உன் கணவன் பொருட்டு நினைந்திய கவலையுடையேன். இங்கான் மாடக்கூடலின் அதிதேவதை நான்தான். என் பெயர் மதுராபுரி என்பது. ஊழ்வினையால் இப்படியெல்லாம் ஆயிற்று. பெருந்தகைப் பெண்மணீ! அவ் வினைவந்த வரலாற்றை உனக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன். சற்றுச் செவி சாய்ப்பாயாக.

"நான் இதுகாறும் இந் நகரில் மறையோனையையன்றி மாளிகை வாசலின் மணியோசையைக் கேட்டிலேன். தன்னை அடிதொழுது போற்றுத பகை அரசர் தூற்றலை தன்றிக் குடிகள் பழிதூற்றும் கொடுங்கோலன் அல்லன் இப் பாண்டியன். சக்காலத்தும் வழுதியர் ஒழுக்கம் வழு

வார். அவர் தம் நெறிமுறைபற்றிய மெய்ச்சான்றுகள் பல.
வுள. அவற்றுள் ஒன்று கூறுகின்றேன்.

"முன்பு, இந்த நகரத்திலேயிருந்த கீரந்தை என்னும் பெயருடைய அந்தணன் தன் மனைவியைத் தனிமனை வைத்துக் காசியாத்திரை போய்த் திரும்பிவந்த அன்றிரவு, யாத்திரை போய்வந்தது பற்றி மனையாளோடு வுளவளாவிப் பேசியிருந்தான். அதையறியா அரசன், நகர்சோதனை செய்து வருங்கால் இதென்ன அந்தணனில்லா வீட்டில் ஆளரவங் கேட்கின்றதே என்று கதவைத் தட்டினன் வுளனில், அந்தணன் ஐயமுற்று அஞ்சினன். அஃதறிந்த அவன் மனைவி, "ஐயோ! எதற்கு ஐயுறுகின்றீர்? யாத்திரைபோன நாளில் என்னிடம் கூறியதை மறந்தீரோ? நீவிர்,

அரைசு வேலி யல்லதை யாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத்து இருத்திச் சென்றீர்.

அன்று நீர் சொன்ன வுரைகாவல் இன்று இல்லையாய்விடுமோ? அஞ்சாதீர்" என்று இயம்பினள். இதுகேட்ட குலசேகர பாண்டியன், ஐயனின் ஐயந்தவிர்த்தற் பொருட்டு அவன்தை வீட்டுக் கதவுகளையுந் தட்டிக்கொண்டே போனதன்றி, மற்றைநாள் 'கீரந்தையின் ஐயத்திற்குப் அஞ்சத் தக்கது காரணமாயிருந்தது இக் கையே யன்றே!' என்று அதனை வெட்டி வீசினன். அங்ஙனம் குறைத்த கைக்கு ஈடாகப் பொன்னாற் கைசெய்து பூட்டப்பட்டது. அன்று முதல் அவனுக்குப் பொற்கைப் பாண்டியன் எனப் பெயர் வழங்கலாயிற்று. இதனால் வழுதியர் தொல்குலம் இழுக்கற்ற தென்று தெரிகின்றதன்றே?

"இன்னும் சொல்வேன் கேள்! சோழ நன்னாட்டில் பராசரன் என்னும் பெயருடைய வலைவைப்பார்ப்பான் ஒரு

வன் இருந்தான். அவன், மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னனின் கொடைத்திறங் கேட்டு, ஆண்டுச் சென்று, தன்னெதி ருக்கம் புரிந்தார் பலரையும் ஈவன்மையால் தோற்கடித்து, வெற்றிமாலை யேய்ந்து, மிக்க வினைகளனும் பெற்றுத் திரும்பி வருகையில் பாண்டிய னாட்டிலுள்ள **திருத்தங்கால்** என்னும் ஊரில் வந்து, "மாந் தரஞ்சேரல் வாழ்க" என்று சொல்லித் தனது மூட்டையை இறக்கிவைத்து இருக்கலாயினன். அக்கால், வேதியச்சிறார் பலர் அவன் பக்கலில்வந்து சூழுமினர். பராசரன் அவர்களை நோக்கி, "பிள்ளைகாள்! நான் உங்களைக் கேட்கும் வேதத் தைச் சந்தம் தவறுமல் உங்களுள் யார் ஒப்பிப்பாரோ அவர் என்னுடைய மூட்டையைப் பெறுவர்" என்று மொழிந்தனன். அப்பொழுது **வார்த்திகன்** என்னும் வேதி யன் மகன் **தட்சிணமூர்த்தி** என்பவன் பராசரன் வியக்க ஓதினதால், அச் சிறுவனுக்குத் தான் பெற்ற மூத்துப் பூணூல், கடகம் முதலான பூணைகளன்கையும் பிறவற்றையும் பராசரன் அளித்துப் போயினன். இன்னணம் தட்சிண மூர்த்தி பெற்ற பரிசைக்கண்டு மனம்பொறுத சிலர், அவன் தந்தை வார்த்திகனைக் களவுப்பொருள் கவர்ந்தானென்று அரச சேவகர்களைக் கொண்டு குற்றஞ்சாட்டிச் சிறையிடச் செய்தனர். அது பொறுத வார்த்திகன் மனைவி **கார்த்திகை** என்பாள் மண்ணில் வீழ்ந்து புரண்டழுவாயினள். அரச சேவ கர்கள் கன்காராயாமற் சிறைப்படுத்தியதால் அன்று மதுரை யில் கொற்றவை கோயிற்கதவு திறவாதாயிற்று. இதை யறிந்த பாண்டியன் மனமறுகி, "நமது நாட்டில் கொடுங் கோன்மை யாதாயினும் நிகழ்ந்ததோ? கொற்றவைக்கு உற்றகுறை யாதோ? நீர விசாரியுங்கள்" என்று அமைச் சர் ஆதியர்க்குக் கட்டளையிட்டனன். அதன்மேல். சேவகர் கள் வார்த்திகனைப் பாண்டியன் திருமுன்பு கொண்டுவந்து

நடந்ததை நவின்றனர். அரசன் வார்த்திகனை நோக்கி, "ஐயனே! நும்மை எம் மெய்யாளர்கள் இங்ஙனம் நன் காரணமற் செய்தது பெருங்கிழமை. அறிவினிகள் செய்த அதனைப் பொறுப்பீர்" என்று நல்லுரை புகன்றதுடன் நீர்வளம் மிக்க திருத்தங்காலையும் வயலூரையும் முற்றாட் டாகக் கொடுத்து விடுத்தனன். உடனே கொற்றவை கோயில் தானே திறந்தது.

அப்பொழுது இப் பாண்டியன்,

"சிறைப்படு கோட்டம் சிமின் யாவதும்
கறைப்படு மாக்கள் கறைவீடு செய்மின்
இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினும்
உற்றவர்க்கு உறுதி பெற்றவர்க்கு ஆம்"

என்று சொல்லி முரசு முழக்குவித்தான். இங்ஙனம் அற நெறி போற்றிய சிபியன், இப்போது உன் கணவன் பொருட்டு முறை நிறம்பிய தகுதியும் சார்ந்தனன் கேள்.

ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளி யுண்ண
உரைசால் மதுரையோடாசு கேடுறும்

என்ற உறையொன்றும் உண்டு. அன்றியும்,

"மேனாள், கலிங்கதேசத்தின் கணவுள்ள சிங்கபுரத்தில் வசு என்பவனும் கபிலபுரத்தில் குமரன் என்பவனும் அரசாண்டிருந்தனர். இருவரும் காயாதிகள். அவர்கள் பகைகொண்டதனல் அத் தேசத்திற் போர் மூண்டது. ஆறுகாவத தூரமுள்ள இடங்கள் அடிபோர்வாய்ப் பட்டிருந்தன. ஆகலால், அவ்விடங்களுக்குச் சென்று வாணிகஞ்செய்வோர் எவருமில்லையாயினர். ஆனல், பொருளாசையால் உந்தப்பட்ட சங்கமன் என்னும் வணிகன் ஒருவன்

காத்துரைபவர்போல மனைவியொடு பலவகை அணிகலன் கழைக் கொண்டுசென்று, சிங்கபுரத்துக் கடைவீதியிலிருந்து விற்கலாயினன். குற்றமற்ற அவனைப் பரதன் என்னும் பெயருடையான் கோத்தொழில் செய்வோன் ஒருவன், இவன் கபிலபுரத்து ஒற்றன் என்று பிடித்துக்கொண்டு போய் வேந்தனுக்குக் காட்டிக் கொன்றுவிட்டனன். இப் பிறப்பில் உனது கணவன் கோவலனுகப் பிறந்தவன் அந்தப் பாதினை. இனி, சங்கமன் மனைவி நீலி என்பாள்,

"அரசர் முறையோ! பாதர் முறையோ!
ஊரீர் முறையோ! சேரியீர் முறையோ!"

என்று ஓலமிட்டுச்சென்று மன்றினும் மறுகினும் பூசலிட்டு அலைந்து திரிந்து பதினெண்காதம் ஒரு மலையுச்சியை அடைந்து உயிர்விட உறுதிகொண்டவள், "எமக்கு இத் தீயசம் விளைவித்தோர் வருபிறப்பில் இம்மிதாத்த துயரை அடையக்கடவர்" என்று மனங்கொதித்துச் சபித்து உயிர் விட்டனள்.

"அந்தச் சாபம் உங்களைத் தொடராலாயிற்று. ஆகலான், நீவிர் இந்த அருந்துன்பத்துக்கு ஆளாயினீர். எவரும் அவசியர் செய்த நல்வினையையும் தீவினையையும் அப்படியப்படியே அநுபவித்தல் வேண்டும். உங்கள் முன்னைப் பிறவியின் தீவினையே உங்களை இங்ஙனமெல்லாம் ஆக்கியது இனிமலாவதையும் இயம்புகின்றேன். ஏ வீரபத்தினி! நீ இற்றைக்குப் பதினெண்காதம் வானவர் வழியில் உன் மண மகனைக் காண்பாய்" என்று இவ்வாறெல்லாம் மதுராபுரித் தெய்வம் விதிமுறைகூறி அழல் வீடு கொண்டது.

அப்பால் வீரபத்தினியார் மதுராபுரித் தெய்வம் கூறிய தேறுதல் மொழியால் ஆறுதலடையாது,

"கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்" (1)

என்று வீரம் புகன்று கொற்றவை கோயில் வாயிலை அடைந்து, அங்கே தனது சங்க வளையலை உடைத்தெறிந்து விட்டு "இந்த நகரத்தின் கீழை வாயிலிற் கணவனைடு புகுந்த நான் இப்பொழுது மேலை வாயிலால் தனியே போகின்றேன்" என்று உருகி, வையைக்கரை வழியே மேற்றிசை நோக்கி, பள்ளமென்றும் மேடென்றும் இரவென்றும் பகலென்றும் பாராமல், மயக்கங்கொண்டார் போலப் பதறிச் சென்று, மலையாள நாட்டின் கணுள்ள **திருச்செங்குன்று** என்னும் மலையில் ஏறி, ஆங்குப் பொன் போலப் பூத்ததொரு வேங்கைமர நீழலில், "ஆ! யான் தீத்தொழி லாட்டியேன்" என்று ஏங்கி நின்றார்.

வீரபத்தினி மேற்றிசைப் போதல்.

சேரநாட்டில் தெய்வமாதல்.

குருவியோப்பியும் கிளிகடிந்தும்
குன்றத்துச் சென்றுவைகி
அருவியாடியும் சுனைகுடைந்தும்

வந்த குன்றக்குறத்தியர், விரபத்தினியைக் கண்டு, "எங்கள் வள்ளிபோல்வீர்! இந்த மலைவெங்கை நறுநிழலில் மனம் நடுங்கிக் கொங்கை பிழந்து வந்து நிற்கும் நீவிர் யாவிரோ!" என்று வினவினர். அதற்கு மாபத்தினி

காதற்கொழு நனைக் கண்டு வின்ன அடைதல்.

யார்,

"மணமதுரையோ டாசு கேடுற
வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கிழந்து போந்த
கடுவினையேன் யான்"

என்று கூறினர். கூறின அளவில் குறத்தியர் வணங்கித் தொழுது கைகுவித்து நின்றார்கள்.

அப்பொழுது, கோவலன் வானவர்சூழ வரலாயின்ன். விரபத்தினியார், காதலனை உள்ளங்களிக்க உயிர்களிக்கக் கண்டு வானுலகினின்றும் வந்த வானவூர்தியில் அவனேடும் ஏறித் தேவர்கள் மலர்மாரி பொழிய வானகம் புகுந்தனர்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மன்னுக மாதர்க்கு அணியாய கண்ணகி
வின்னகமா தர்க்கு விருந்து.

அப்பால், வீரபத்தினியார் மணவாளனாகிய தேவர் கள் புறஞ்சூழ யானைமீதில் வீண்ணுலகம் செல்லக்கண்ட குறமகள் குறத்தியர், இறும்பூதெய்தினராய்த் தங் குலத்தலைவரைக் கூவி, "சிறு குடியீரே! சிறுகுடியீரே!! யாம் இத்திருமகளினுலுந் சிறந்த தெய்வம் வேறு கண்டிலேம். ஆகலால், இந்தப் பறம்பின் தாழ்வரையில், அத்தேவியார் வந்திருந்த வேங்கை மரத்தின் நன்னீழலில், அவரை நமது குலதெய்வமாகச் செய்துகொள் வோம் வாருங்கள். இப்பொழுதே எல்லாருங்கூடி, நமது மலைவளம் பெருகக் கடவதென்று வேண்டிக் கொண்டு,

குறவர் கூற்று.

தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்
குறிஞ்சி பாடுமின் கறம்புகை யெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பாலும் பாலுமின் வீலுமலர் தூவுமின்"

என்று பேசினர். பின்பு அவ்வாறே செய்து தங்களைக்குப் பிந்தி சொரிந்து காப்புக்கட்டிக் திருவிழாப் புரிந்தனர். அவ்விழாவில் ஒரு குரவைக் கூத்தும் கண்ணகியின் பாராட்டி ஆடினர்.

ஆடும்போது, தாங்கள் பண்டு தொட்டுத் தொழுதுவரும் பூண்ட குன்றக் குமரனின் வென்றிவேலைப் புகழ்ந்து,

சிற்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏகலும் நீங்கா இறையவன்னை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொரு ஞான்
ஞர்மா தடிந்த சுடரிலேய வெள்வேலே.

அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவனைப் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே.

சாவணைப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான் திருக்கைவே லண்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே.

என்ற பாக்களைப் பாடினர். பின்னர், முருகக் கடவுளை எண்ணி,

மலைமகள் மகனேநின் மதிநுதல் மடவரல்
குலமலை யுறைதரு குரவர்தம் மகனார்
நிலையுயர் கடவுள்நின் இணையடி தொழுதேம்
பலரறி மணமவர் படுகுவர் எனவே.

குறமகள் அவள்எம குலமகள் அவளோ
டுறுமுக ஒருவநின் அடியிணை தொழுதேம்
துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமணம் எனவே

எனவும்,

கடம்பு சூடி யுடம்பிடி யேந்தி
மடந்தை பொருட்டால் வருவ திவ்வூர்
அறமுக மில்லை அணிமயி லில்லை
குறமக ளில்லை செறிதோ ளில்லை
கடம்பூண் தெய்வ மாக நோனார்
மடவர் மன்ற இச் சிறுகுடி யோரே

எனவும், இன்னோர் பலவும் பாடிக் கொண்டாடினர். அப் பால் வியாபத்தினியைக் குறித்து,

பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
கோழுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீழுறை செய்தானை யேத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணைவணி வேண்டுதுமே.

பாடற்றுப்

பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குல்நம் பைம்புனத் துள்ளாளே.
பைத்தர வல்குல் கணவனே வாழ்நர்க்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ வொழியாரே.
வானக வாழ்க்கை யமர்ர் தொழுதேத்தக்
கான நறுவேங்கைக் கீழாளோர் பத்தினியே
கான நறுவேங்கைக் கீழாள் கணவனெனும்
வானக வாழ்க்கை மறுதரவோ வில்லாளே
மறுதர வில்லாளே யேத்தி நாம் பாடப்
பெற்றுகதில் அம்ம இவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெற்றி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடையதிவ ஞர்

எனப்பாடி ஆடிக் கூத்தை முடித்தார்.

ஆங்கு அவ்வாறாக, அக்காலத்தில் வஞ்சிமா நகரி லிருந்து சேரநாட்டை ஒருதனிக் குடைக்கீழ் ஆண்ட முடி மன்னன் சேரன்-செங்குட்டுவன் ஆவான்.

சேரன் மலைவளங் காணச் சேறல்

அவனுடைய தம்பியர் தாம் இக்கண்ணகி கோவலன் கதையைச் சிலப்பதிகாரப் பெயரால் என்றென்றும் உலகம் கொண்டாடும் வண்ணம் தேனெழுகித் ததும்பும் முத்தமிழால் பாடி யருளினவர். இவர்தாம் இளங்கோவடிகள் என்னும் திருப்பெயர் பெற்ற வர். இவருடம் இவர் தமையன் செங்குட்டுவனும் ஒருநாள் அரசாள்மன்றத்து அரியணையில் வீற்றிருந்த தங்தை சேர லாதனின் பக்கலில் இருப்பாராயினர். அப்பொழுது, அங்கு வந்த நிமித்திகனொருவன் இவ் வரசருமாரிரு வரையும் நன்கு நோக்கி, "இவருள் இளையோனுக்கு அரசாளுரிமை யுண்டு" என மொழிந்தான். அவ்வளவில், மூத்தோ னிருக்க இளையோன் அரசுரிமை கொள்வது முறைமையன்றென

எண்ணித் துறவு பூண்டவர் இளங்கோவடிகள். அரசிளங் குமரராகிய இவர் இளமைப்பருவத்தில் துறவு பூண்ட காரணத்தால் இளங்கோவடிகள் எனும் இப்பெயர் பெற்றனர்.

இங்ஙனம் துறவுபூண்ட இளங்கோவடிகளோடும், மனைவி வேண்மாள் என்பாளோடும் மஞ்சுசூழ் சோலை மலை வளங் காண விரும்பிய செங்குட்டுவன், ஆயக்கூட்டமும் பிறகூட்டங்களும் புடைசூழ வஞ்சியை நீங்கிச் சென்று, பெருமலையின் தாழ்வரையில்

கோங்கம் வேங்கை தாங்கிணர்க் கொன்றை
நாகம் திலகம் நறுங்காழ் ஆரம்

முதலான செழுமரங்கள் வண்டினம்பாட மலர்ந்திராநின்ற பேரியாற்றின் கரையில், மணற்பரப்பில் தங்கியிருப்பானினன்.

ஆங்கு, குன்றக்குரவை, கொடிச்சியர்பாடல், வேலன் பாணி, நினைருத்துவோர் பாடும் வள்ளைப்பாட்டு, புனத்தின் கண் ஒருவனையொருவர் கூப்பிடும் குரல், தினைகாக்கும் குறவர்களின் பேச்சு, பறை முழக்கம், ஆருவியோட்டம், புலியொடு சண்டையிடும் களிறு பினிறல் முதலியவற்றால் சுற்றமுற்றும் ஆரவாரங்கள் மிக்கிருந்தன. அம்மலைநாடு மன்னவன் சேரனையும் சேர்ந்து எங்கும் ஒரே முழக்கமாயிருந்தது. இத்தகைய மலையிலுள்ள குறவர்கள் சேரர்கோன் வந்தனை புனர்ந்து அவனைக் கண்டு கொண்டாட,

யானை வெண்கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்தாக் கட்டியும்
அஞ்சனத் திரளு மணியின் தாரமும்

ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நூறும் கொழுங்கொடிக் கவலையும்
ஒத்தங்கின் பழனும் தேமாங் கனியும்
வைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்
ஆளியின் அணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
கூராங்கின் குட்டியும் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் ஆசறு கருலமும்
பீலி மஞ்ஞையும் காவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேன் மொழிக் கிள்ளையும்

தலையிற் சுமந்துவந்து அவைகளை யொந்தனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து, "மன்னவனே! வாழ்க நின்கொற்றம். எழுமையும் அடிமைகளாகிய எனியேங்கள் கூறுவனவற்றைச் செவிக்கொண்டருளல் வேண்டும். ஐயனே! இம்மலைநீதுள்ள வேங்கை நீழலில், கொங்கையொன்றிழந்த நங்கையொருத்தி ஒப்பற்ற குயிலையிசைத்து நிற்கின்றாள். அங்கே வானவர்கள் அவள் தன் கொழுநனெனவெண்ணி, அவளை அவட்குக் காட்டி, அவளையுங் கூட்டி, விமானத்தேற்றி விண்ணகஞ் சென்றனர். இந்த அதிசயத்தை அடியேங்கள் காணலாயினேம். ஆனால், அங்காரிகை எங்காட்டாளோ? யார் மகளோ? நாங்க ளறியோம்" என்று பணிவொடு கூறினர்.

அங்கு, அரசனுடன் இருந்த கூலவாணிகன் சாத்தனர் என்னும் தண்டமிழ் ஆசான், சோன்-சொங்குட்டுவனை

சாத்தனார் கண்ணகி வரன் முறை சாற்றல்

நோக்கி, "திண்டிறல் வேந்தே! யானறி குவன் இது நிகழ்ந்தது. அது முற்றும் உமது திரு முன்பு செப்புகின்றேன்" என்றெடுத்து,

ஆங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
போர்ச் சிறப்பிற் புகார்க ரத்துக்
கோவலன் என்பான் ஓர் வாணிகன், அவ்வூர்
நாடகம் ஏத்தும் நாடகக் கணிகையோ
டாடிய கொள்கையின் அரும்பொருள் கேடுறக்
கண்ணகி என்பாள் மனைவி, அவள்கால்
பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருந்தேர்
மாட மதுரை புகுந்தனன், அது கொண்டு
மன்பெரும் பீடிகை மருங்கிற் செல்வோன்,
பொன்செய் கொல்லன் தன்கைக் காட்டக்
கோப்பெருந் தேவிக்கு அல்லதை யிச்சிலம்பு
யாப்புற வில்லையீங்கு இருக்கவன்று எனை,
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறன்னோர் கள்வன் கையென,
வினைவினை காலம் ஆதலின் யாவதும்
நினையலர் வேம்பன் தேரா னெனைக்
கன்றிய காலலர்க் கூஉய், அக் கள்வனைக்
கொன்றது அச் சிலம்பு கொணர்க சுங்கென,
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களம் காணேன் நெடுங்கண்நீர் உகுத்துப்
பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
நிலைகெழு கூடல் நீள்நகர் புக்கபின்
பலர்புகழ் பத்தினியாகும்

என் முறைவர் கூறிய முறைமொழி" என்று விளம்பினர்.

இவ் வரலாற்றைச் செவியேற்ற சேரன்கோன் சாத்தனாரைப் பார்த்து, "நீர் முன்னே விண்ணவிர் காலம் என்று விளம்பினீரே. அவ் விண்ணவிரவு யாது? அதனை எவ் வாறு கண்டீர்?" என்று கேட்டான்.

"சேரனே! கேட்க, யான் மதுரை நீப்பட்ட அன்று, அங்கே கொன்றையஞ் சடைமுடிப் பெருமான் கோயிலில், வெள்ளியம்பலத்தில் நித்திரை கொண்டேன். அக்கால், நிறைந்த இருளில், யான் துயில்கலைந்து இருக்கையில்,

ஆளுர் உற்ற வீரபத்தினி முன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்தோய்!
முதிர்வினை நுங்கட்கு முடிந்தது ஆகலின்
முந்தைப் பிறப்பில் பைந்தொடி கணவனை
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கமன் என்னும் வாணிகன் மனைவி
யிட்ட சாபம் கட்டியது ஆகலின்
வாரொலி கூந்தல் நின் மணமகன் றன்னை
யீரேழ் நாளகத்து எல்லை நீங்கி
வாளோர் தங்கள் வடிவின் அல்லது
பீடிலர் வடிவில் காண்டல் இல்

என்று கூறிற்று. அந்த வஞ்சம் அற்ற மெய்ம்மொழியை நான் கேட்டேன்" என்று சாத்தனார் சாற்றி, 'வழிவழிச் சிறக்குநின் வயம்படு கொற்றம்' என்று வாழ்த்தி யிருந்தனர்.

பாண்டியர்கோமான், சிலம்பு காரணமாகத் தேவியுடன் மடிந்ததைச் சாத்தனாரால் அறிந்து வருந்திய சேரர்

கல்லுரு நாட்டகீ கருதீ ஆராய்தல்

கோமான், "இந் நகநுசுச எமனை யொத்த வேந்தர்களின் செவிக்கெட்டு மூன் விணவசத்தால் வளர்ந்த செங் கோலைப் பாண்டியன் உயிரைக் கொடுத்து நிமிர்த்தினன். மன்னவர் கடமைகள் சொல்லொணுதன. எல்லாவற்றிற்கும் தாமே பொறுப்பேற்கும் கடப்பாடு உடையவர் அரசர் களே. ஆகலின், அவர்கள் இன்ன துன்பங்கட்கெல்லாம் ஆளாகவேண்டி யிருக்கின்றது. அரசர்களின் இன்பம் எத் துணை மேம்பட்டதெனினும் அவர்களுடைய பொறுப்பை எண்ணுந் தொறுந்தொறும் அவ்வின்பத்தினும் மிக்க துன் பமே அவர்களைச் சூழ்ந்திருப்பது புலனும். அவர்களுடைய நாட்டில்

மழைவளங் காப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தில் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்"

என்று கண்ணகி துன்பத்தை எடுத்துரைத்த புலவரிடம் சேரர்கோன் செப்பினன். அப்பால், தன் மாபெருந்தேவி யாகிய வேண்மாளை நோக்கி, "ஆயிழாய்! புலவர் கூறிய வெல்லாம் நன்கு அறிந்தனை யன்றே? காதலன் இறந்தமை பொறுது அவனைடு மடிந்த கோப்பெருந்தேவி மிக்கவரோ? அன்றிச் சிற்றம் சாய்தி நம் தேசம்வந் தடைந்த சேயிழை மிக்கவரோ? இவ்விருவருள் எவரை நீ பாராட்டுகின்றாய்" என்று கேட்டான்.

அதற்குத் தேவி, "ஆசே! காதலன் துன்பம் காணப் பொறுது அவனைடு வானகம் நண்ணிய கோப்பெருந்தேவி தேவருலகத்திற் பெருந்திருவெய்தித் திகழட்டும். நமது

நாட்டை யடைந்த பத்தினிக் கடவுளை நாம் பரவுவோம்" என்றாள்.

அதனை யற்ற செங்குட்டுவன் அமைச்சனை நோக்கினான். அவனது மனம் அறிந்த அமைச்சர், 'வெற்றி வேந்தே! பத்தினிக் கடவுட்குச் சிலைசெய்து நாட்டிச் சிறப்பித்தல் மிகவும் ஏற்றதே. அச் சிலையைப் பொதியின் மலையிலாயினும் இமய மலையிலாயினும் எடுத்துக் கொணர்தல் தகும். இமயத்தில் எடுக்கும் கல்லைக் கங்கையிலும், பொதியத்தில் எடுக்கும் கல்லைக் காவிரியிலும் நீர்ப்படை செய்தல் வேண்டும்" என்று விண்ணப்பித்தனர்.

அரசன், "அமைச்சரீர்! வீரத்தாற் சிறந்த இச் சேரமான் குடியிற் பிறந்தார்க்குப் பொதியத்திற் கல்லெடுத்துக் காவிரியில் நீர்ப்படை செய்தல் சிறப்பன்று. ஆகலின், இமயத்திற் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்தலையே விரும்புகின்றேன். அங்ஙனம் விரும்பும் கல்லை இமயவரம்பன் தாராவெனினில், நாம் வஞ்சிமாலை சூடிப் படையெடுத்துச் சென்று அவன்றன் ஆற்றலைக் காண்போம்; நமது வீரத்தை விளக்குவோம்" என்று கூறினான்.

அவ்வளவில், **வில்லவன் கோதை** என்னும் பெயர் படைத்த அமைச்சன் எழுந்து, "வேந்தே! பல்யாண்டு வாழ்க நின் கொற்றம். பண்டு,

கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வட ஆரியர்

முதலானவர்கள், உனது தமிழ்ப்படை மருவிய செருக்களத்தில் போரிட்டனரன்று, நீ உனது யானையை விட்டுழக்கிய அருஞ்செயல் என்றும் என் கண்ணினின்றும் நீங்கிலது.

"அன்றியும் உன்னை யொத்த தமிழாசர்களுடன் கொங்கணருடைய செருக்களத்தில் நீ பொருதகாளில், புலிக்கொடியையும் கயற்கொடியையும் சோழபாண்டியர்கள் இழந்து ஓடியசெய்தி தினை யாணகளின் செவிகளிலும் முழங்கிய தன்றே?

"மேலும், நின் தாயாரைக் கங்கையாற்றில் நீராடச் செய்த காலையில், எதிர்த்த ஆரிய மன்னர் ஆயிரவரை வெற்றி கொண்ட நினது ஆண்மையைக் கூற்றுவனும் கண் விழித்துப் பார்த்தனனே!

"இன்னபல விறல் விஞ்சிடு வேந்தனுகிய நீ இப்போது இமயஞ் செல்லக்கருதுவது, ஒரு கற்சிலை காணற்பொருட்டே யாகலின், இதனைக் குறித்து வடபுல மன்னர்கட்குத் தமிழ் கன்னாட்டு வில்லும் கயலும் புலியும் பொறித்த முத்திரை யிட்டு, நினது ஓலை போக்குதல் சால்புடைத்தாம்" என்று சாற்றினான்.

அதன்பின், அழும்பில்வேள் என்னும் குறுநிலமன்னன் எழுந்து, "பன்னாட்டு ஏற்றரும் நமது தலை நகரில் இருந்து கின்றுசாகளின் இச்செய்தியை ஆணைமேல் முரசேற்றி அனை தலே சாலும்; அதனைப் பகைவரின் ஒற்றர்கள் தக்கம் அரசர்க்கு அறிவிப்பர்" என்றான்.

இன்னனம் எண்ணித் துணிந்தபின் யாவரும் மலையை விட்டு வந்து போய்ச் சேர்ந்தனர். சேர்ந்ததும், அரசனுடைய படை யெழுச்சி. பெற்ற பறையறை மாக்கள், "எமது காலலன் தனது விற்கொடி தங்கிய இமயம் சென்று கல் ஒன்று கொணர எழுகின்றான். ஆதலாலே

வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடதிறை கொடுவந் தெதிரீ ராயிற்

கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின் கேளீராயின்
தோட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
தாழ்கழன் மன்னன் றன் றிருமேனி
வாழ்க சேனை முகம்"

என்று கூறி ஆனைப்பிடர்த்தலை அணிமுர சுறைந்தனர்.

பின்னர், செங்குட்டுவமன்னன் அரிமான் சுமந்த அரசு கட்டிலிலேறிக் கொலுவீற்றிருக்க, அமைச்சர் அந்தணர் நிமித்திகர் படைத்தலைவர் முதலியோர் ஆண்டுக் குழுமினர். அரசன் சேனைத் தலைவரை நோக்கி, "இமயத்தினின்றும் இங்கு நன்னீராடவந்த முனிவர்கள், **கனகன் விசயன்** உள்ளிட்ட ஆரிய அரசர்கள் தமிழ் வேந்தர்களின் ஆற்றல் அறியாது இகழ்ந்து உரைத்தவாற்றை எமக்கு இசைத்தனர். அவர்தம் இகழ்ச்சியை ஏற்று, வானாவிட்டிடின் அது தமிழ் மூவேந்தர்க்கும் வருவதோர் இழிவாகும். ஆதலால், அங்ஙனம் பழித்த ஆரிய அரசர் தம் முடித்தலையில், யான் எடுக்கும் பத்தினிக் கடவுளின் படிமக்கல்லைச் சுமந்து வாச்செய்வேன். அங்ஙனம் செய்யேன் ஆயின்,

செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு படுக்காது பயங்கெழுவைப்பிற்
குடிதழீஇக் குறாஉங் கோவேன் ஆக"

என்று வஞ்சினம் கூறலாயினன்.

அது கேட்ட **அந்தணன்** அண்ணலை நோக்கி, "வடவரசர்கள் சோழ பாண்டியர்களைப் பழித்திருப்பதோயன்றி நின்னைப் பழித்தாரார். அடுபோர் அண்ணல்! அங்ஙனம் நின்னைப் பழித்து வாழும் பான்மையரும் உளரோ? சினம் தணிக" என்று செப்பினன்.

உடனே நிமித்த நூல் வல்லான் எழுந்து, "செம்மலே! இங்கோரந்தான் படையெடுத்துச் செல்லுதற்கேற்ற நன்னேரம். இப்பொழுது படையெடுக்கின், இருநில மன்னவர் யாவரும் நின் திருமலர்ச் சேவடி பணிகுவர்" என இசைத்தனன்.

உடனே "வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்க" என்று, காவலன் கட்டளை பிறந்தது. போர்வீரர் முழங்கினர்; முரசமதிர்ந்தன; கொடிகளசைந்தன. படைவீரர்களுடன்,

ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
வெம்பரி யானை வேந்தற்கு ஒங்கிய
கரும வினைஞரும் கணக்கியல் வினைஞரும்
தருமவினைஞரும் தந்திர வினைஞரும்
மண்திணி ஞாலம் ஆழ்வோன் வாழ்கென

வாழ்த்தினர். வாளுங் குடையும் பட்டத்து யானைமீது அமைத்து, மாளிகை மதிலின் புறத்தே சென்றபின், மீட்டும் அமைவினர் அரண்மனையை அடைந்தனர். அங்கு மிகப் பெரிய விருந்தொன்று நடந்தது. அரசர்கள், படையெடுத்துச் செல்லுங்கால் அணியும் வஞ்சிமாலையை, வஞ்சி மன்னவன் சூடினன். மற்றைநாட் காலையில், மன்னர் மன்னவன்,

நிலவுக் கதிர்முடித்த நீளிருஞ் சென்னி
யுலகு பொதி யுருவத்து உயர்ந்தோன்

ஆகிய சிவபெருமான் சேவடிகளிற் பூத்தூவிப் போற்றி அவ்வடிகளே முடியிற்சூடி அப்பெருமான் கோயிலை வலங் கொண்டான். அப்பால், மறையோராக்கிய வேள்விப் புகையையும் ஏற்று யானை யேறினன். அப்பொழுது சிலர், "குடக் கோக் குட்டுவன் கோற்றங் கொள்க" என்று வாழ்த்தி ஆடக மாடம் (திருவனந்தபுரம்) என்னும் பதியில் அரவணைத்

துயிலும் திருமாலைப் பூசித்த பொருள்களைக் கொடுத்தனர். அவற்றை அவன்,

தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கினனெகி

மேற்சென்றனன்.

நீலகிரி.

செல்லுழி, நாடக மடந்தையர் கூப்பிய கையுடன் வந்து வந்தனர்; வீரம்புகழ்வோர் புகழ்ந்து வந்தனர்; வெற்றி போற்று வோர் போற்றி வந்தனர். இவர்களோடு அரச உறுப் பினரும் பல் பெருந் தானைகளரும் புடைசூழச் சென்ற செங் குட்டுவன், நீலகிரியை அடைந்து அங்கே தங்கினன். தங்கி யிருக்கையில், சுற்றச்சூழ மொய்த்திருந்த படைகள் ஆர்ப் பரிப்ப விசும்பின் வழியே செல்லும் முனிவரர்சிலர், தின் னெனி தன்னையும் பின்னிடச் செய்திடும் மேனியாளர், சேரன் அருகில் வந்து சேர்ந்தனர். மன்னவன் எழுந்து அவர்களை வணங்கி நின்றனன். முனிவரர் அவனை நோக்கி, "சிவனருளால் தோன்றிய செங்குட்டுவ! யாங்கள் பொதி யம் போகின்றோம்; நீ இமயம் போகின்றாய்; அங்கே, அருமறை அந்தணர் அமர்ந்து வாழ்கின்றனர்; அவர்கட் கோர் இடுக்கணும் எய்தாது காத்தல் நின்தன் கடன்" என்று பணித்து வாழ்த்திச் சென்றனர். பின்னர் மன்ன வன், கொங்கணர் கருநாடர் முதலானவர்கள் இசைத்துக் காட்டிய ஆடல் பாடல்களைக் கண்ணுற்று, அவர்கள் வியக் கத்தக்க பரிசுகளை அவர்கட்கு வழங்கியிருந்தான்.

அவ்வமயத்தில் நூற்றுவர்கன்னர் அனுப்பிய தூதுவர் தலைவனாகிய சஞ்சயன், நாடகமகளிர் இன்பத்திலுலகும்

முயிலுவர் இருநூற்றைன்மருங் நகைவேழம்பர் நாற்றுவருங் உடன்வர, அரசனை அணுகி வணங்கிப் பல சொல்லித் துதிக்கு "கோற்றொழில் வேந்தே! உம்முடைய நண்பர் நாற்றுவர்கன்னர், நூறு தேர்களுஞ் ஐந்நூறு யானைகளுஞ் பதினாயிரம் குதிரைகளும் பல்சரக்கேற்றிய இருபதினாயிரம் பண்டிகளுஞ், நினக்குத் திறைப்பொருளாக எம்முடன் அனுப்பினர். மேலும் அவர், 'சேரர்பெருமான் வடதிசைக்குச் செல்வது ஒரு கல்லின் பொருட்டே யாகலின் அதனைக் கொண்டு கங்கைபில் நீர்ப்படை செய்தலை யாங்களே எற்றுச் செய்வோம்' என்று நினது திருமுன்பு தெரிவிக்கச் சொல்லினர்" என்றான். அதனைச் செவிக்கொண்ட சேரர் கோன் "சஞ்சய! ஆரியமன்னன் பாலகுமரனின் மக்களாகிய கனகனும் விசயனும், தமிழாராற்றலறியாத சில புதிய அரசர்களோடு சேர்ந்து தமிழ்வேந்தரை இகழ்ந்தனராம்; அதனால் காய்சினங் கொண்டு செல்கின்றது எமது சேனை. இதனை நூற்றுவர்கன்னருக்குச் சாற்றுக. இந்தச் சேனை கங்கையாற்றைக் கடத்தற்கு வேண்டிய மரக்கலங்களை யீர்ப்பினனென்றுஞ் சொல்லுக. இதன் பொருட்டு நீ முன்னே செல்ல வேண்டும்" என்று விடைகொடுத் தனுப்பினான்.

அந்நாளன்று, பாண்டியன் அனுப்பிய திறைப்பொருள் களாகிய, முத்தும் சந்தனமும் வந்து எற்றுக்கொள்ளப் பட்டன.

பின்னர், அதினின்றும் புறப்பட்டுச் சென்று நூற்று வர்கன்னர் வகுத்த வங்கத்திரள்களின் உதவியால் கங்கையைக் கடந்து அக் கரை சேர்ந்தது சேரர் படை. அங்கே நூற்றுவர்கன்னர் சேரர் பெருமானை எதிர்கொண்டு வரவேற்றுப் பாராட்டினர். அதன்பின்

ஆரிய மன்னரை அமிழ்ச் செய்தல்.

சோமமான் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு வடக்கே சென்று பகைவர் நாட்டை அடித்துப் படைவீட்டை அடைந்திருந்தான்.

இனி, சேரன் செங்குட்டுவன் தம்மேற் படையெடுத்து வந்திருக்கின்றான் என்பதை அறிந்த கனகனும் விசயனும், அவர்க்கு உதவியாய் வந்த,

உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன்

என்பார் வடதிசை மன்னருடம் ஒருங்குசேர்ந்து, 'தமிழரசன் ஆற்றலை இப்போரில் காண்குவம்' என்று, கடலெனத் திரண்ட சேனைத்திரளுடன் வந்து எதிர்க்கலாயினர். போர் மூண்டது. சிறிது நேரத்தில் ஆரியப்படைகளைச் சிதற அடித்தான் சேரர்கோமான். இத்தனை உயிர்களையும் கூற்றுவன் ஒரோநாளில் உண்ணுந் திறலோன் என்பதை அந்த அமர்க்களத்தில் ஆரியர் கண்டனர்.

இப் போர்முனையில் இறக்காமல் எஞ்சிய ஆரிய வீரர்கள், புறமுதுகிட்டோடிச் சடைமுடி வேடமும், சாமியார் வேடமும், சாம்பற் பூச்சும், சமணக்கோலமும் தாங்கி மறைந்து திரிவாராயினர். அன்றியும், கூத்தாடுநராகவும், பாடுநராகவும், இன்னும் தெரிந்த தெரிந்த தொழில்களைச் செய்குநராகவும் மாறி ஓடி ஒளிப்பாராயினர். இவர்களுள் சிறைபிடிக்கப் பட்டவர், கனகனும் விசயனும் மற்றுத் தேர் வீரர்கள் ஐம்பத்திருவரும் ஆவார்.

இங்ஙனம், 'இராம ராவணப் போர் பதினெட்டு மாதங்களிலும் பாரதப்போர் பதினெட்டு நாட்களிலும் சேரர் ஆரியர் சண்டை பதினெட்டு நாழிகையிலும் முடியலாயின' என்று உலகங் கூறும்வண்ணம் போர்முடிந்தது.

அப்பால், செங்குட்டுவன் நீலகிரியில் முனிவர்கள் மொழிந்ததை நினைத்து, அமைச்சன் வில்லவன்கோதையையும் பல வீரர்களையும் இமயத்து அந்தணரைக் காத்தற்பொருட்டு அனுப்பினன். பின்பு, ஒரு அமைத்தலிற் கைதேர்ந்த கற்றச்சரை ஏவிப் பத்தினிக் கல்லுருப் படைக்கச் செய்தனன். கண்ணகி கல்லுரு கவினுறச் சமைந்தது. அதனை இமயத்தினின்றும் செருவிற் சிறைப்பட்ட கனக விசயர் தலையில் ஏற்றிக் கொணர்ந்து,

கங்கைநீர்ப்படை.

கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற்றிறன் மாக்களின் நீர்ப்படை செய்து,

அதன்பின், மாக்கலங்களால் கங்கைத் தென் கரையைச் சேரர் படை சேர்ந்தது. ஆங்கு, சேரர்கோமானுக்கென்று ஆரியவரசர்களால் அமைக்கப்பட்டிருந்த வண்ணமாளிகை, மணிமண்டபங்கள், பொன்புனை அரங்கம், புனலூம் பந்தர், தூங்கோசாலை, மலர்ப்பொய்கை ஆகிய இவைகளனைத்தும், மன்னவர்க்கேற்ற பிறவும் அழகுற அமைந்த வெள்ளிடைப்பாடியில் செங்குட்டுவன் .அவ்வரசர்கள் விரும்பியவண்ணம் அமர்ந்து உறையான் ஆயினன்.

அங்கே, தாம் ஆற்றிய போரில் மாண்டவர்களுடைய மக்களையும், காயம்பட்டார் மகார்களையும், வெற்றிபெற்ற வீரர்களையும் அருகணைத்துப் பாராட்டி, அவர்கட்குப் பொன்வாகைத் தோடுகளை ஈண்டதேசம் வழங்கிவிட்டுக் கொதுவலீற்றிருந்தான்.

அந் நிலையில், மாடலமறையோன் வந்துதோன்றி, சேரர்குலவினை நோக்கி

" வாழ்க எங்கோ ; மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது "

என்று சொல்லி வாழ்த்தினன். அப்பொழுது சோன், "ஓ நான் மறையாள? நீ இங்குள்ள பகைப்புலத்தரசர் பலரும் அறியாத தொரு நகை விளைக்குந் செய்தியை நவின்றனை. அங்ஙனம் நீ 'மாதவி மடந்தை கானற்பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது' என்றதன் பொருள் யாது? என்று வினவினன்.

சோன்பால் மாடலன் சென்றுரை யாடல்.

அதற்கு மறையோன், "மன்னவ! மன்ன! வழுத்து வன் கேண்மோ. கானிரிப்பூம்பட்டினத்துக் கோவலன் என்பான், தன் காதற்பரத்தையாகிய மாதவியுடன் விளையாட்டுக்குச் சென்றிருக்கையில் அவள் கானல்வரி பாடினள். ஊழ்வினையுங் கூடிற்று. கோவலன் வேறொன்றன் மேல் மனம் வைத்துப் பாடினளென்று பிணங்கி, அவளைப் பிரிந்து, மனைவி கண்ணகியுடன் சிலம்பு விற்றற்காக மதுரை வந்து, வழுதியர்கோன் உயிர் நீங்கி யானைகள் புகுவாறு கொலைக்களப் பட்டான். அவன் மனைவி உனது நாட்டை அடைந்தாள். அவட்குச் சிலையெடுத்தற்காகவே நீ இங்கு வந்தனை. அவ் வீரபத்தினியின் சிலையுருவைச் சமைத்து கனகவிசயர் முடித்தலை நெரிந்தனரன்றே! இயற்றை அடக்கி அவ்வண்ணம் மொழிந்தேன். அதுநிற்க. இனி, நான் இங்கு வந்தகாரணமும் கூறுவேன்.

" முன்பு பொதியின் மலையை வலங்கொண்டு குமரி யாடித் திருப்பிவந்த யான், எனது முன்னினை விளோவோ அன்றி வேறியாதோ மதுரைக்குச் சென்றேன்! அங்குச் சிலம்பு காரணமாகக் கோவலன் வெட்டுண்டதும். கண்ணகி

வழக்குரைத்தமையால் உண்மை யுணர்ந்து, அறநெறி பிழைத்தேகாமே என்று பாண்டியன் ஏங்கி உயிர் நீங்கியதும், அவன் மனைவி கோப்பெருந்தேவி அவலமுடன் வீழ்ந்து பொன்றியதும், இவையெல்லாம் அறிந்த மாதரி அடைக்கலம் இழந்தேகாமே யென்று மனமைந்து நடுச்சாமத்தில் தீக்குளித்ததும், கவுந்தியடிகள், சபிக்கவேண்டுமென்று எழுந்த சீற்றத்தைப் பாண்டியன் மாண்ட காரணத்தால் அடக்கி உயிர் நீங்கியதும், மதுரை மாநகர் எரிந்தழிந்ததும் தெரிந்தயான் என் ஊருக்குப் போயினேன். அங்கு, என்னைக் காணவந்த நண்பர்களுடன் மதுரைச் செய்தியைப் பேசியிருந்தேன். அச்செய்தி எங்கும் விரைவிற் பரவிற்று.

இவ் வழியே.

மைந்தற்கு உற்றதும் மடந்தைக்கு உற்றதும்
செங்கோல் வேந்தற்கு உற்றதும்

கேட்டு, கோவலன் தந்தை கொடுந்துயர் எய்தித் தன் நிரண்ட செல்வங்களை யெல்லாம் பலர்க்கும் வழங்கிவிட்டுப் புத்தமதத் துறவியாயினன்; கண்ணகி தந்தையும் அவ் வாறே செய்து சமணராந் துறவியாயினன்; கோவலன் தாயும் கண்ணகி தாயும் மனம் பொறாமல் மாண்டனர்; மாதவி தன் அருமை மகளாகிய,

மணிமே கலையை வான்றுய ருறக்குங்
கணிகையர் கோலம் காண வொழிக

என்று நற்புரம் சித்திராபதிக்குச் செப்பிவிட்டுத் தான் மலராணி கூந்தலில் சீவாசம் புத்தராமப் பிட்சுணி யாயினள். இதில் இராஜாபிடேகங்கள் என்னால் வெளிப்படுத்தப்பட்ட செய்திகளும் இராஜாக்கள் ஆகுகின், அப் பாவம் கழிதற் பொருட்டுச் செய்யவேண்டிய இங்கு வந்தேன்" என்றான்.

சேரன், மறையோன்பால் "நெடுஞ்செழியன் இறந்தபின் பாண்டிநாடு என் ஆயது? அதையும் செப்புக" என்று வினவலும், "நீடுவாழியரோ நீணிலம்வேந்தே! மதுரை தீப்பட்டதொன்று கொற்கையிலிருந்த இளவரசன் வெற்றிவேற் செழியன், வீரபத்தினியாம் கற்புக்கடவுளுக்குப் பொற் கொல்லர் ஆயிரவரை ஒரோநாளில் உயிர்ப்பலியூட்டி, அரசு கட்டிலில் ஏறிச் செங்கோலோச்சுகின்றான்" என்றலைத்து ஆசிகூறி அமர்ந்தனன்.

அன்னகாலையில் மாலைவந்தது. மதியமும் வந்தது. வானகஞ் சிறந்தது. மாலைக்கடன் முடிக்க வெளிச்சென்றான் சேரர் கோமான். சென்றவன், மாலைப் பிணையை மகிழ்வொடு நோக்கினான். இதுதான் நல்லசமயமென்று கருதிய அரசாங்கக் கணிதன், "மன்னவன் வேந்தே! வாழ்க வாழ்க. யாம் வஞ்சினை நீங்கி முப்பதிரண்டு மாதங்கள் ஆயின" என்றான். அதை மனங்கொண்ட குடகர்கோ, இருக்கையை யடைந்து பின்னரும் மாடலனைக் கூப்பி, "என் மைத்துனன் பெருங்கிள்ளியோடு பகைத்த ஒன்பதின்மர் சோழ இளவேந்தர்களும் போரிற்பட்டபின்னர், அக் கிள்ளியின் செங்கோல் திறம்பட நடக்கின்றதா?" என்ன, "ஆம் அரசே ஒருகுறையும் இன்று" என்ற மாடலமறையோற்கு ஐம்பதினாலாம்பாரம் பொன்னீட்டி பரிசாக அளித்து அகமகிழ்ந்தனன்.

வஞ்சிமாநகர்க்கு வந்துசேரல்.

பின்னர், கன்னார் நூற்றுவரையும் அவர் தெய்வத்தானுக்குக் களிப்புற அனுப்பினன். "தமிழகாற்றல் மதியாது மலைந்த கனகவிசயர் முதலாயினோரை, சோழ பாண்டியற்குக் காட்டுக" என்று நிலன் முதலிய தானைவினைஞர். மற்றொருன், காற்படையும் புடைசூழ சென்று, தெனி

வேண்மாள் சிந்தை களிகூரவும் வலம்புரி முழங்கவும் மாநகர் மக்கள் வழி எதிர்கொள்ளவும் விளங்கிய வென்றி வேந்தர் வேந்தன் வஞ்சிப் பெருநகர் வந்து சேர்ந்தனன். உடன் வந்த படைவீரர் ஆதியர், தங்கள் தங்கள் மனைவி மக்கள் உற்றார் பெற்றார்களை அணைந்து அளவளாவி, அளவற்ற மகிழ்வெய்தி இனிது வாழலாயினர். சேரநாடு கழிபேரின்பக் கடலுள் திளைத்தது.

பத்தினிக் கல்நாட்டு

தேவி வேண்மாளொடு தமனியமாளிகைப் புனைமணி அரங்கில் இருந்து, ஆடல் பாடல் ஆதிய வற்றை நுகர்ந்து களிப்புற்ற செங்குட்டுவ வேந்தன் ஒருநாள் தனது மேலோலக்க மண்டபத்தில் வீற்றிருந்தான். ஆங்கு, நீலன் முதலான நூதுவர்கள் மாடல மறையோனை வணங்கினர். அவர்களுள் நீலன் அரசனை நோக்கி; "ஞாழ்கழல் வேந்தே! நினது கட்டளைப்படிக் கனைகவிசையர் ஆதியரைக் கொண்டு போய்ப் புகார் நகரத்துச் சோழமன்னனிடத்தும் பாண்டிய அரசனிடத்தும் காட்டினேம். சோழமன்னர், "சமரில் தோற்றுத் தவக்கோலம் பூண்டு உயிர்பிழைத்த இவர்களைப் பிடித்துக் கொணர்ந்தது வெற்றியன்று' எனவும், பாண்டிய அரசன், 'இவர்கள் தவக்கோலம் தாங்கிய பின்னும் சிற்றங் கொண்டு... சோமன் வெற்றியோ புதுமை' எனவும் பழித் தனர்" என்று விளம்பினான்.

சேரன், உடனே கண்சிவந்து, "இரு பெருவேந்தரும் இகழ்ந்தனை இலையோ!" என்று சினமுகை முகைத்தனன்.

அப்பொழுது, மாடலமறையோன் வாழ்த்தி எழுந்து "பெருஞ்சினை வேந்தே! தவநிலை நின் சிற்றம். நீ நீதி வாழுங்காலை. யான் சொல்லுவதனை இகழாமற் கேட் பாயாக. எனக்கோர் வயது இம்பது ஆகின்றது. இதுகாறும்

அமர்க்களங்களில் வீரச்செயல் பல புரிந்துளாய். ஆனல் அறக்கள வேள்விகள் ஆற்றினையல்லை. யாக்கையோ நிலை யற்றது. உன் முன்னோர்களில் எத்தனையோ வெற்றி வீரர் களிருந்து நிலம் புரந்தனரே! அவர்களெல்லாம் இப் பொழுது எங்கே? எவரும் ஒருநாளைக்கு இறந்தொழிதல் திண்ணமேயன்றே! அதுவேயுமன்றி,

செல்வம் நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ?

இனி, இளமை நில்லா தென்பதற்குச் சான்றுகாட்ட வேண்டா. எனென்றால் நரைத்து முதிர்ந்த யாக்கையை நீயும் கண்டனை. மேலும் தோல் உடலைப் பற்ற ஓர் உயிர் மனித உடம்பை அடைதலும் ஆகும். மனித உடம்பை எய்திய உயிர் விலங்கின் யாக்கையைக் கொள்ளலுங் கூடும். அதைவிட்டு, வேதனை மிகுந்த நரகர் உடம்புள் தங்குதலும் உண்டு. மேலும்,

ஆடுங் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழிக்
கூடிய கோலத்து ஒருங்குநின்று இயலாது
செய்வினை வழித்தாய் உயிர்செலும் என்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை.

வேந்தே! யான் பொருளை விரும்பி இங்ஙனம் புகன்றேனல்லேன். நின்னைச் சென்றெய்தி செலுத்தவந்த எனது பெரு விருப்பம். ஆகவின், நான்மறைகளால் அரசருக்கென்று விக்கப்பட்ட இராசசூயயாகத்தை வேட்டல் வேண்டும். அதுதான் வீடுபேற்றைத் தரவல்லது. அரசே!

நாளைச் செய்குவம் அறமெனின், இன்றை
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்.
இதுவென வகைந்து வாழுநான் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை.

ஆகவின், யான் மேற்குறித்த யாகத்தை விரைவிற் செய்யக்கடனை. அண்ணலே! நீ

வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடித்
தாழ்கழல் மன்னர் நின்னடி போற்ற
ஊழியோ ழேழி உலகங் காத்து
நீடு வாழ்கியரோ''

என்று பே ன்.

இவ்வாறு மாடலமறையோன் பேசிய மாற்றத்தை மனத்தேற்ற சேரர்கோன் சிற்றந் தணிந்து, கேள்வியில் வல்ல மறையோர்களை வேள்விக்காவன செய்ய ஏவினான். அப்பால் அமைச்சன் வில்லவன் கோதையை அழைத்து, "சிறைப்படுத்தி வைத்திருக்கும் ஆரிய அரசரை விடுதலை செய்க; யாம் செய்ய விரும்பும் வேள்வி முடியுமளவையில் ஈண்டிருந்து அப்பால் தத்தம் நகரத்தை அடையலா மென அவர்களுக்குச் சொல்லுக; இங்ஙகர்ப் புறத்தேயுள்ள வேளாவிக்கோ மந்திரத்தில் அவர்களை இருக்கச் செய்து அவர்களுக்கு வேண்டுவன செய்க" என்று கட்டளையிட்டான். அதன்பின் அழும்பில்வேளையும், ஆயக்கணக்கரையும் அழைத்து "நம் நாட்டில் சிறைப்பட்டிருப்பவர்கள் எல்லாரையும் விடுவியுங்கள்" என்று பணித்தான்.

அதன்மேல், அறவேள்வியாற்றும் அந்தணர், ஆசான், பெருங்கணி, சிறப்புச் கம்மியர் ஆயிருவருடன் சென்று,

அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை

குறு ஆத்திமாலை யணிந்த சோழனை இலக்காக்கியும், அற நெறியாளர்கள் "செங்கோல் வளைய உயிர் வாழாவாம்" என்ப தற்குப் பாண்டியனை இலக்காக்கியும்,

வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை

வடதிசை ஆரிய மன்னர்கள் அறியச் செய்து அதற்குத் தன்னையே இலக்காக்கியும்,

மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்து

தனது நன்னட்டை யடைந்து, திருச்செங்குன்றில் வெங்கை மாநீழலிற் பொருந்திய வீரபத்தினியின் சிலையைக் கைதேர்ந்த சிற்பிகளால் கட்டப்பெற்ற கோயிலில் நிறுவி, திருவாபரணங்களை நிறையப் பூட்டி,

பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்து

கடவுள் மங்கலம் செய்வித்தான் சேரர்கோமான். யாவும் சிறப்புற நடந்தன. அரசன் முதலானோர் அங்கேயே இருக்கலாயினர்.

வீரபத்தினியார் விண்ணிடைத் தோன்றல்.

இஃதிவ்வாறாக. கோவலன் கொலையுண்ட செய்தியை மாடலனால் அறிந்து, கோவலன் தங்கையும் கண்ணகி தங்கையும் துறவறம் புகுந்தகம் கண்ணகி தாயார் கோவலன் தாயார் உயிர் நீங்கியும்போயின பின்னர்க்கண்ணகியின் காவற்பெண்டும், அடித் தோழியும், தேவந்தியும் இருந்து துக்கங்கொண்டு கண்ணகியைத் தேடிக் காண்போமென்று காவிரிப்பூம் பட்டினத்தை விட்டு மதுரையை அடைந்தனர்; ஆங்கு, கண்ணகியால் மதுரை யெரிந்த வகைகளைக் கேட்டனர்; அதன் மேல், அடைக்கலம் இழந்து உயிர் நீங்கிய மாதரியின் மனைக்குச் சென்றார்கள்; அவள் மகள் வேயை யைக் கண்டார்கள்; அவளோடும் புறப்பட்டு வையைக் கரை வழியே நடந்து திருச்செங்குன்றி லேறிக் கண்ணகி கோயி

லக் சேர்ந்தனர். இவ்வாறு சேர்ந்தவர்கள் வீரபத்தினிக் குச் சிறப்புச் செய்த சேரன் செங்குட்டுவனை அடுத்து அவன் முன்பு தாங்கள் இன்னார் இனையர் என்று தங்கள் தங்கள் வரன்முறைகளை இயம்பி அமர்ந்தனர்.

இந்நிலையில், பொற்சிலம்பும் மேகலாபரணமும் வளையல்களும் வயிரத்தோடும் பொன் அணிகளும் அணிந்த வீரபத்தினியின் தெய்வக் காட்சியை விண்ணிற் கண்டான் செங்குட்டுவன். கண்டவன், பெரு வியப்புடையோனாகி,

"என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை
கல்லயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமால்

என்று கூறினன். கூறின அளவில், வீரபத்தினியார் விண்ணினின்றும்,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில்
கல்லிருந்து ஆயிஞன் நானவன் றன்மகள்
வெல்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடுக் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"

என்று மொழியலாயினர். ஆங்குக் குழுமினின்றோர் எல்லாரும் இத் திருவாக்கைச் செவியுற்று வீரபத்தினியைத் தொழுது புகழ்ந்தார்கள். அப்பால் மூவேந்தரையும் குறித்து,

தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணினீர்
கொல்லை உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனல்நீர் வையை
சூழும் மதுரையார் கோமான்றன் தொல்குலமே.

மலையனையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீள்முடிமேல் எற்றிஞன் வாழியரோ

வாழியரோ வாழி வருபுனல்நீ ரான்பொருகை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் தொல்குலமே.

வீங்குநீர் வேலி யுலகாண்டு வின்னவர்கோன்
ஓங்காரணம் காத்த உரவோன்யார் அம்மானே
ஓங்காரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானே
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானே.

புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார் அம்மானே
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானே
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானே.

என்னும் பாடல்களாலும் இளைய போல்வன பிற பாடல் களாலும் புகழ்ந்து கொண்டாடி-னர்கள். அப்பொழுது, கடவுட் கோலம் காட்டிய கண்ணகியார், வின்னவினின்றும் 'நீடுழி செங்குட்டுவன் வாழ்க' என்று வாழ்த்தி மறைந் தபின்பு சேரர்பெருமான் தேவந்தியை நோக்கி,

" காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதுவும்
எதிலார் தாங்கூறும் ஏச்சுரையும் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ

என்று சொல்லி அரற்றினீரே. மணிமேகலை என்பாள் யார்? அவளைப்பற்றி நீர் அரற்றவேண்டிய காரணம் என்னை?" என்றான். அதற்கவள் அரசே! கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. அவள் பேரழகு

தேவந்தி மங்கை தெய்வழம் மைத்தல்.

படைத்தவளா யிருந்தும் தக்க பருவம் வந்தும் தன் தந்தை இறந்த துக்கமேலீட்டால் குலத்தொழிலிற் கருத் தற்றவளா யிருந்தாள். அதனல் மாதவியின் தாயாகிய சித்திராபதி, துறவு பூண்ட மாதவியை அடுத்து, "மகளே! உன் மகள் நிலை இதுவாகும். இதற்கு என் செய்வது?" என் ருள். அதுகேட்ட மாதவி, 'என் மடமகள் என்னுடன் வருவாளாக' என்று அழைத்துச் சென்று அவளுடைய கூந்தலையும் மாலையையும் களைந்துவிட்டுப் போதியின் கீழ் மாதவர்க்குப் புண்ணிய தானமாக அவளைக் கொடுத்து அற வழிப்படுத்தினள். இங்ஙனம் இளவயதில் மணிமேகலை துறவெய்த நேர்ந்தமை நினைத்து அவளைக் குறித்து ஆற்றினேன்" என்று சொன்னாள். அப்படிச் சொல்லிய தேவந்தி உடனே தெய்வம் ஏறப்பெற்ருளாயினள். அவள் கூந்தல் குலைந்து தாழ்ந்தது; புருவம் துடித்தது; வாய் மடிப்புற்றது; எயிறு இலங்கிற்று; சொல் தடுமாறிற்று; திருமுகம் வியர்த்தது; செங்கண் சிவந்தது. இங்ஙன மெல்லாம் ஆயின தேவந்தி, கைதூக்கிக் காலெடுத்து ஆடினளாய் மாடலனை நோக்கிப் பேசுகின்ருள்.

"மறையோய்! நான் பாசண்டச் சாத்தன். இந்தத் தேவந்தி பீடு பொருந்தினேன். இங்குள்ள மங்கை யருள் அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்களும் ஆடக மாடத்துச் சேடக் குடும்பியின் மகளும் இருக்கின்ருர்கள். அம் மூவரின்மீது உன் கரகத்திலுள்ள நீரைத்தெளி. அந்த நீரை நீ மங்கலா தேவியின் கோயிலில் இருந்தபோது உன் கையில் அந்தணனுக வந்து தந்தவன் நான்தான். அது இந்த மலையிலுள்ள ஒரு சுனையிலிருந் தெடுத்தது. அந்நீர் மானைக் கலைத்தாற் போன்றிருக்கும். அதிற் குளித் தோர் முற்பிறப்பைக் கொள்வார்" என்று மொழிதலும், அரசன் விம்மிதனுகி மறையோனை நோக்கினன்.

மாடலன், மன்னவனுக்குத் தேவந்தியின் * வரலாறெல்லாம் விளங்கவுரைத்து அப் பெண்கள் மூவர்மீதும் காக நீரைத் தெளித்தனன். உடனே அம்மூவரும் முற்பிறப்பின் மணநிலையெய்தி கண்ணகியையுங் கோவலனையுங் குறித்துப் புலம்பலாயினர். அவர்களுள் கண்ணகியின் தாய்,

மூவர் பெண்களின் முன்னைப் பிறப்பு.

'புகழ்ந்த காதலன் போற்ற ஒழுக்கின்
இகழ்ந்ததற் கிரங்கும் என்னையும் நோக்காய்
எதில் நன்னுட்டு யாருமில் ஒருதனிக்
காதலன் தன்னெனு கடுந்துயர் உழந்தாய்
யான்பெறு மகளே! என்றுனைத் தேறி!
வான்றுயர் நீக்கும் மாதே வாராய்'

என்று புலம்பினள். கோவலனின் தாய்,

'என்னே டிருந்த இலங்கிழை நங்கை
தன்னெனு இடையிருள் தனித்துயர் உழந்து
போனதற்கு இரங்கிப் புலம்புறும் நெஞ்சம்
யான்அது பொறேனென் என்மகன்! வாராய்'

என்று புலம்பினள். மாதரி,

'வருபுனல் வையை வான்துறைப் பெயர்ந்தென்
உருகெழு மூதூர் வரைக்குறு மாக்களின்
வந்தேன் கேட்டேன் மனையிற் காணேன்
எந்தாய்! இனையாய்! எங்கொளித் தனையோ'

என்று புலம்பினள். இப் புலம்பலிற் கூறிய மொழிகளால் கண்ணகியின் தாயும் கோவலன் தாயும் அரட்டையனுக்கு இரட்டைப் பெண்களாகப் பிறந்தனர் என்பதும், மாதரி சேடக்குடும்பியின் மகளாய்ப் பிறந்தாள் என்பதும் வெளிப்படலாயின.

---

* 26-ம் பக்கம் தேவந்திவரலாறு என்ற பிரிவைப் பார்க்க.

இந் நிலையில், அரசன் மறையோன் முகத்தைப் பார்த்தான். மறையோன், "மன்னர் கோவே! இம் மூவரும் இன்னின்னார் என்பதை அவர்களின் சொற்களால் உணர்ந்தேன்றே! கோவலன் கண்ணகி தாய்மாரும் மாதரியும் இவ்வண்ணம் பிறந்தமைக்குக் காரணமுங் கூறுவேன். இவர்கள் கண்ணகிமீது அளவற்ற அன்புடையவர்கள். அவ் அன்பின் மிகுதியால் அவர்கள் அவளெய்திய பதவி எய்தி அவளை என்றும் நீங்காது உடனுறைய வேண்டியவர்களே. என்றாலும், அவளுடன் வானுலகடைதற்குத் தக்க நல்லறம் புரிந்தவர் அல்லர். ஆயினும், கண்ணகிமீது கொண்ட அன்பினல் அவள் தெய்வமாயிருக்கின்ற இந்த வஞ்சிநாட்டில் வந்து பிறந்தனர். மாதரி, கண்ணகி மேற்கொண்ட அன்பேயுமன்றிக் கண்ணனைக் கருதி ஆடிய குரவைக் கூத்தின் பயனாலும் இந்நாட்டில் திருமாலுக் கடிமைசெய் சேடக் குடும்பிக்கு மகளாய்ப் பிறந்தாள். இவற்றால்,

நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவதன்றே தொன்றியில் வாழ்க்கை

என்னுமிவை வெள்ளிடை மலைபோல் விளங்கும் அன்றே! நெடுங்தகாய்! நீ,

ஆன்றவை யடர்ந்தான் அருளிற் றோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவன் ஆதலிற்
செய்தவப் பயன்களும் சிறந்தோர் படிவமும்
கையகத் தனபோற் கண்டனை"

என்று சொல்லிக் கூறி வாழ்த்தியிருந்தான்.

இவற்றை யெல்லாம் அறிந்து மகிழ்ந்த சேரர் செம்மல் பத்தினிக் கோயிலின் தூணையை நித்த லுஞ் செய்யும் வண்ணம் தேவந்தியை நியமித்து அக்கோயிலை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றனன். அன்ன வேளையில் அவனெடு நின்றாராகிய,

வரம் தரல்.

அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்

கண்ணகியின் திருச்சிலையை வணங்கி, "தேவீ! இச் சேரர் கோமான் செய்தவாறே நாங்களனைரும் எங்கள் நாட்டில் நின்னை நாட்டி விழாவழுதலியன செய்து வழிபடக் கருதுகின்றோம். அவ்விடங்களிலும் நீ எழுந்தருளி அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினர். அப்பொழுது 'தந்தேன் வரம்' என்று ஒரு குரல் எழுந்தது. அதைக் கேட்டார் யாவரும் விடு பேறு பெற்றார் போன்று மட்டற்ற களிப்பிற்கேராயப் பின் னும் பின்னும் வணங்கினர்.

அப்பால் சேரமான், மாடல மறையோன் முதலாயினருடன் சென்று வேள்விச்சாலையிற் சேர்ந்தான்.

பத்தினித் தெய்வம் இளங்கோவடிகட்கு அருளல்.

அதன் மேல் இளங்கோவடிகள் பத்தினிகோயிலை அடைந்தனர். அவர் முன்பு தேவந்தி மேற் பொருந்திய பத்தினித் தெய்வம், "நீயோய்! நின் வரலாறு செப்புவேன் கேட்க.

வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நங்கை தான்நிழல் இருந்தாய்! நின்னை

அரைசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்லல் தீர்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல தீக்கிச்
சிந்தை செல்லாச் சேண்நெடுந் தானத்து
அந்தமில் இன்பத்தாசாள் வேந்து"

என்று மூன் நிகழ்ந்ததையும் பின் நிகழ்வதையும் திருவாய் மலர்ந்து அருளிற்று.

பத்தினி கோயிற் கண்டவர்.

நிற்க. கோவலன் வெட்டுண்டுவிழுந்த நாள்தொட்டுப் பாண்டிநாட்டில் மழை பொழியாது ஒழிந்தது; பிணியும் வறுமையும் பெருகின. அது தெரிந்து, கொற்கையிலிருந்து அரசாண்ட பாண்டியன் **வெற்றிவேற் செழியன்** பத்தினிக் கடவுளுக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைப் பலியூட்டிக் களவேள்வி செய்து திருவிழாக் கொண்டாடினன். அதன்பின் அந் நாடுமலிய மழைபெய்து வளம் பெருகிற்று. **கொங்கு நாட்டு அரசர்களும் இலங்கைக் கயவாகு** மன்னனும், **உறையூரிலிருந்து அரசாண்ட சோழன் பெருங்கிள்ளியும்** தங்கள் தங்கள் நாடுகளில் பத்தினிக்குக் கோயில் அமைத்து நாள் விழாவும் ஆண்டு விழாவும் நடாத்தினர். அவர்கள் நாடுகளும் மழைவளம் மிகுந்து மங்கலம் பெற்றன.

முற்றிற்று.

இளங்கோவடிகள் திருவாக்கு :

இக் கதையை நன்கு கேட்ட நல்லவர்காள் ! நீயிர்,
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் ;
தெய்வம் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின் ;
பொய்யுரை அஞ்சுமின் ; புறஞ்சொற் போற்றுமின் ;
ஊன்ஊண் துறமின் ; உயிர்க்கொலை நீங்குமின் ;
தானஞ் செய்ம்மின் ; தவம்பல தாங்குமின் ;
செய்ந்நன்றி கொல்லன்மின் ; நீநட்பு இகழ்மின் ;
பொய்க்கரி போகன்மின் ; பொருள்மொழி நீங்கன்மின் ;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின் ;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின் ;
பிறர்மனை அஞ்சுமின் ; பிழையுயிர் ஓம்புமின் ;
அறமனை காமின் ; அல்லவை கடிமின் ;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளோக் கோட்டியும் விராவினில் ஒழிமின் ;
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா ;
உளகான் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லுந் தேனத்துக்கு உறுதுணை தேடுமின் ;
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் !

அரும்பொருள் விளக்கம்.

பக்கம்.

1 பூமடந்தை-பூதேவி.
நாமடந்தை-சரசுவதி.
புனைகலம்-ஆபரணம்.
தாசு-ஆடை.
துகிர்-பவளம்.
ஆரம்-சந்தனம்.
அருங்கலம்-ஆபரணம்.
வெறுக்கை-செல்வம்.

2 கருங்கை-வலிமையுடைய கை.
ஓவியம்-சித்திரம்.
காலக்கணிதர்-சோதிடர்.
நாளங்காடி-காலைக் கடைத் தெரு.

3 பொருப்பு-மலை.

4 நண்ணர்-பகைவர்.
இமையவர்-தேவர்.
செம்பியன்-சோழன்.

5 பொதி-பண்டங்களைப் பொதிந்த மூட்டை, முடிச்சுகள்.

6 பொய்க்கரி-பொய்ச் சாட்சி.

7 அறங்கூறவையத்தார்-நீதிபதிகள்.

8 இன்னல்-துன்பம்.
கோட்டம்-கோயில்.

பக்கம்.

9 பாசம்-கயிறு
ஞாயிறு-சூரியன்.

10 பதுமபீடம்-புத்தருடைய பாதபீடம்.

11 கிளைஞர்-சுற்றத்தார்.
வைகறை-விடியற்காலம்.
வதுவை-விவாகம்.

12 ஒக்கல்-உறவு.
எழில்-அழகு.
சான்று-சாட்சி.
பிச்சி-பைத்தியங்கொண்டவள்.

13 கொழுநன்-கணவன்.

16 சிற்றில்-சிறுவீடு.
அவலம்-வருத்தம்.

17 ஆயம்-மகளிர்கூட்டம்.
செவ்வேள்-முருகக்கடவுள்
போதிலார்திரு-இலக்குமி.
வடமீன்-அருந்ததி.

18 காசறுவிரை-குற்றமற்ற மணம்.
அகன்றில்-ஆணன்றில்.

19 வாய்மை-உண்மை பேசல்.
தளவம்-தளசி.
இந்திர சிறுவன்-இந்திரன் மகன்.

பககம.

19 மூனிந்து-கோபித்து.
கால்வழி-சந்ததி.
21 மாக்கலம்-கப்பல்.
அயில்பொரு-வேல் போன்ற.
22 சீற்றம்-கோபம்.
தானகெயிலெறிந்தகொடித் தோட்செம்பியன்-தேவர்கட்குப்பகைவராகிய அசுரர்களுடைய, ஆகாயத்திலே அசைகின்ற மதில்களை யழித்த, வீரகளை யுடைய சோழன்.
22 வச்சிரக்கோட்டம்-(இந்திரனுடைய) வச்சிராயுதம் இருக்குங் கோயில்.
23 தாது-மகரந்தப்பொடி.
கொற்றம்-வெற்றி.
பிறவாயாக்கைப்பெரியோன்-மகாதேவன், சிவபெருமான்.
வால்வளைமேனிவாலியோன்-வெள்ளை மூர்த்தி: பல தேவர்.
நீலமேனிவொடியோன்-திருமால்.
24 தாமம்-மாலை.
வணப்பு-அழகு.
கவின்-அழகு.
25 தணந்த-பிரிந்த.
26 பெருங்குடிச் செல்வன்-கோவலன்.

பககம.

பொருளுரை-மெய்யுரை.
பாசண்டச்சாத்தன்-தொண்ணூற்றறு வகைச் சமய சாத்திரங்களிலும் வல்ல ஐயனார்.
27 சாத்தன்-ஐயனார்.
29 இடுதேள்-பாய்ச்சுத்தேள்: ஒருவர் மற்றவர் மீது பயப்படுத்தற் பொருட்டுத் தேளல்லாத தொன்றைத் தேளொன்று கூறி

காமவேள் கோட்டம்-மன்மதன் கோயில்.
30 கழுவாய்-பிராயச்சித்தம்.
பயன் வேட்டு-பயன் விரும்பி.
சேக்கை-சயனம்.
31 கவை-குற்றம்.
ஓவியம்-சித்திரம்.
38 வைகறைப் போழ்து-விடியற்காலம்.
மாபோதி - மஹாபோதி: கௌதம புத்தருக்கு ஞானோதயமான இடத்துள்ள அரசமரம்.
அந்தராசாரிகள் - ஆகாயத்திற் சஞ்சரிப்போர்.
விகாரம்-அசங்கு. (கையால் கருவியால் பண்ணுதல் மனத்தால் திருமித் தல்.)
அழுக்காறு-பொறாமை.

பக்கம்.

33 அவா-பேராசை
வெகுளி-கோபம்.
இன்னுச்சொல் - கடுஞ் சொல்.
சிலாதலம் - சந்திரகாந்தக் கல்லாலாக்கிய இடம். (சிலை-கல்).

34 எயிறு-பல்.
பெருமகன்-அருகதேவன்.

35 மறவுரை-அதர்மமொழி.

37 கம்புட்கோழி - சம்மங் கோழி.
கானக்கோழி - காலங் கோழி.
உள்ளு-உள்ளான்.
உளரல்-குளுகுவை.
புள்ளு-கணந்துட்புள்.
புதா-பொதா வென்பதன் விகாரம் : பெருநாரை, மரக்கால் நாரையுமாம்.
மூத்தி-ஆகவனீயம், தட்சணாக்கினியம், காருகபத்தியம்.

38 இட்டவித்தின்-விளைநிலத்திட்ட விதைப்போல.
செறிவன் - எல்லாவுயிர்க்கட்கும் இதவுயுள்ளவன், சலியாதவனென்றுமாம்.
ஐவனைர் - ஐவகைப்பட்ட இந்திரியங்களையும் வென்றவன்.

பக்கம்.

வன், கன்மங்களைக் கழுவினவன்.
பொருளன் - உண்மைப் பொருளாயுள்ளவன்.
புராணன்-பழையவன்.
குணவதன் - குணத்தையுடையவன், குணவிரதனெனவுமாம். (வதம்-விரதம்)
பாத்தில்ஒளியோன் - மேலாய உலகிற்கு விளக்காயுள்ளவன்.

39 சாதுவன்-ஒடுங்கினவன்.
அங்கம் பயந்தோன்-அங்காகமத்தை யுண்டாக்கினவன்.
பண்ணவன்-கடவுள்.
பாத்தில்பழம்பொருள்-பகுத்தற்கரிய புராணப் பொருளாயுள்ளவன்.
ஓட்டமற்ற பொன்னையொப்பான் என்றுமாம்.
ஒருமூன்று-காமம், வெகுளி, மயக்கம்.
ஐவனைர வென்றோன்-ஐவகைப்பட்ட இந்திரியங்களையும் வென்றவன்.
கைவனைக் காணினும-கையகத்தே காணினும்.
பொருளில் யாக்கை - பயனற்ற உடம்பு.
அருகாதவன்- அருகருக்கு அறத்தைக்கூறுவோன்.

பக்கம்.

39 மறுதர ஓதி – பிறிதொரு மொழியையோதி. (மறு தர–மீளவும்.)

40 பவந்தருபாசம்-பிறப்பைத் தரும் பாசம்.

பொதும்பர்-சோலை

41 சாபவிடை-சாபவிடுதலை

குணதிசை-கீழ்த்திசை.

42 தென்னவன்-பாண்டியன்.

அரவப்பாயல் – சேஷசயனம்.

பொன்னடை-பட்டாடை.

ஆழி-சக்கரம்.

வளை-சங்கு.

44 பிலத்துவழி-குகைவழி.

45 எட்டெழுத்து - அஷ்டாட்சரம்.

ஐந்தெழுத்து - பஞ்சாட்சரம்.

46 அரவணைச்செல்வன் - திருமால்.

கப்பத்திந்திரன் - ஆயுக்கற் பத்தினை மிகவுடைய இந்திரன்; தேவர்களிடைச் சென்று கற்பிக்கும் இந்திரன் என்றுமாம்.

47 சிலதி - தோழி.

பால்வகை தெரிந்த பகுதியோர்-நன்மைத்தன்மை யறிவோர்.

பிறக்கிட்டொழியும்-விட்டு நீங்கும்.

பககம.

48 சூர்-தெய்வம்.

சுரம்-கடும்வழி.

49 விரவி–கலந்து.

ஐயைகோயில்-தர்க்கை கோயில்.

தொல்குடி–பழங்குடி.

கலியூர்தி-தர்க்கை.

50 பாவை-மதனப்பாவை.

கிள்ளை–கிளி.

ஆறறி பறை - வழிபறிக் குங்காற் கொட்டும் பறை.

சூறைச்சின்னம் - சூறை கொள்ளுங்கால் ஊதுஞ் சின்னம்.

கருந்தலை-பசுந்தலை.

நடுக்கின்றி-சலிப்பின்றி.

51 எயின்கடன்-எயினர் இடும் பலிக்கடன்.

கண்ணில் எயினர்-கருணையில்லாத மறவர்.

குடமலை யாட்டி-குடநாட்டையாளுஞ் செல்வி. (குடநாடு–சேரநாடு.)

ஒருமாமணி - முழுமாணிக்கம்.

52 கொற்றவை–தர்க்கை.

எதம்-குற்றம்.

இடிக்கும்-அதிரும்.

துயில்-நித்திரை.

54 சாம்பினர்-வருந்தினர்.

இன்னலை-துன்பத்தை.

56 பொருகளி-போர்யானை.

வாரிக்கொண்ட - காட்டிற் பிடித்துக்கொண்டவெந்த.

பக்கம்.

56 வயக்கரி-வலியயானை.
பிணை-பந்தி.
புரவி-குதிரை.
வகுளம்-மகிழமரம்.
அரவம்-வெண்கடம்பு.
நாகம்-சுரபுன்னைமரம்.
திலகம்-மஞ்சாடிமரம்.

57 சேடல்-உச்சிச்செலுத்தி.
செருந்தி-ஓர்மரம்.
பாடலம்-பாதிரி.
குருகு-குருக்கத்தி.
தளவம்-செம்முல்லை.
அதிரல்-மோசிமல்லிகை.
கூதாளம்-கூதாளிச்செடி.
குடசம்-வெட்பாலை.
வெதிரம்-மூங்கில்.
பகன்றை-ஓர்கொடி.
பிடவம்-ஓர்கொடி
மயிலை-இருவாட்சி.

58 தெண்மலை - பொதியின் மலை.
கூலக்கடை - தானியக்கடை. (கூலம்-வெள்ளு, புல்லு, யாரு, திணை, சாமை, இறுங்கு, சோளை, தோலை, இராகி).

60 மறத்தகை-தீச்செயல்.
அறத்தகைமாக்கள்-அறங்களை யுளத்தும் பெரியோர்.
கடிப்பு-கோல்.
கந்து-பற்றுக்கோடு.
நெய்யாவினை-பொன்னை யொன்றுதல் வினை.

பக்கம்.

உண்ணுறுங்காலை - நுகருங் கால்.
கையாறு-செயலறவு.

61 வேதனை-பிரமாணை.
அம்மை-முற்பிறப்பு.
மங்குல்-மேகம்
அறுவைவீதி - புடவைக் கடைத்தெரு.
நால்வேறு வீதி - அரசர், அந்தணர், வைசியர், வேளாளர் எனச்சொல்லப்பட்டாரிருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்கள்.

63 மறுகு - வீதி.

64 செல்லாச் செல்வன்-தொலையாச் செல்வன்.
படிற்றொழுக்கம் - கள்ளவொழுக்கம்.
அம்மையில்-முற்பிறப்பில்.

66 சின்மலர்-நிலமலர்.
தாமடி யுறாஅ - தாமாடிப் புடைபெயரா.

67 பொற்புடை-பொலிவுடைய.
தொற்றம்-அரியல்லவினைம

69 வீட்டுலகம்-மோட்சவுலகம்
பொறிகள்-இயற்றிரன்கள்
சாலகம்-பத்தர்

70 கோளிப்பாகல்-பலா.
வான்வரிக் கொன்னாய்-கொன்னரிக்காய்.
மாலம்பங்காய் - தொம்மட்டி மாதுளங்காய்.

பகுதம.

70 சாலி-செந்நெல்.
பூவைப் புதுமலர் - புதிய காயாம்பூ.
நம்பி-ஆடவரிற் சிறந்தோன் : புருஷோத்தமன்.
தொழுனையாறு - காளிந்தி நதி : யமுனை.
நாமணிவண்ணன்-கண்ணபிரான்.
விழுமம்-துயர்.

72 மாட்டாகடை-தளர்நடை.
காதெருமன்றம் - இடையூர்களிலுள்ள அம்பலம்.

73 மூடிமுதற் கலண்கள்-கிரீடம் முதலான ஆபரணங்கள்.
அக்கசாலை-கம்மாளரின் தொழிற்சாலை.
கூடல்மகளிர்-கூடலின் நாடகமகளிர். (கூடல்-மதுரை)

74 கரந்து-மறைந்து.

77 துயில்-நித்திரை.

78 ஓறுக்க-தண்டிக்க.

79 களிமகன்-அறிவு மயங்கினோன்.
நன்னுமின்கள் - செய்யுங்கள்.
கேள்வன்-கணவன்.

80 காதெருமன்றம்-72.
கொல்லேப்புனம் - மூல்லை நிலம்.
குரும்தொழித்தான் - வஞ்சனையாக வந்து

பகுதம.

குருந்த மரத்தை மூறித் தவன். (கண்ணபிரான்)
கன்றுகுணிலாக் கனியுதிர்த்த மாயவன்-பசுவின் கன்றைக் குறுந்தடியாகக் கொண்டு விளவின் கனியை உதிர்த்த கண்ணபிரான். (குணில்-குறுந்தடி).
நம்மானுள்-நம்பசுநிரையுள்.

81 மலையாரம்-சந்தனம்.
கடலாரம்-முத்து.
மருட்கைத்து - மருட்கையை யுடைத்தாயிரா நின்றது. (மருட்கை-மயக்கம்.)
அறுபொருள் - ஐயமற்ற பொருள், தீர்ந்த பொருள், அறுவகைச் சமயத்தாருந் தெளிந்த பொருள்.
மடங்கல்-சாரசிங்கம்.
மாறு-பகை.

82 சோவாணம்-சோவென்னும் பெயரையுடைய சுகாம், வாணுசாதியுடையது.
மடந்தாழும்-மடமை தங்கிய.
ஆய்ச்சி-இடைச்சி.

83 மன்பதை-மக்கட் பாப்பினர்சோர்.
சுறை-மணம்.

86 வானிற்றப்பிய - வானாற் கொன்ற.

பக்கம்.

87 சிலதி-தோழி.

88 அறைபோகிய – கிழறுத்த.
(பழுதுபட்ட.)
பொறியறு-புண்ணியமற்ற.
இறைமுறை-அரசநீதி.
மயிடன்-மகிஷாசுரன்.
மாற்றம்-பகை.

89 கண்ணே-கண்ணேயுடை
யாய்.

90 தென்புலம்-பாண்டிநாடு.
என்முதல் – என்னைத்
தொடங்கி.

91 பொடி-புழுதி
வையைக்கோன் - பாண்டி
யன்.
வளவன்மகள் – அதிமந்தி
யாள.
வஞ்சிக்கோன் – சேரன்

93 அறவோர் - துறவிகள்,
முனிவர்கள்.
குழவி-குழந்தைகள்.
அரசுகட்டில்-சிம்மாசனம்.

94 ஓவியக்கூட்டம் - சித்திரத்
திரன்.
பரிக்காரர்-யானைப்பாகர்.
சேக்கை-படுக்கை.
ஆடரங்கு-நாட்டியசாலை.
தண்ணுமை-மிருதங்கம்.

96 வேலி-காவல்.
மன்றத்து - அரண்மில்லாத
வீட்டில்.

பக்கம்.

97 சிறார்-சிறுவர்.
மனமறுகி-மனமயங்கி

98 சிறைப்படு கோட்டம் -
சிறைச்சாலை.
நீமின்-வறிதாக்குங்கள்.
கறை-கடமை.
வீடு-விடுதலை.
இடுபொருள் – பிறர் வர
விட்ட பொருள்.
படுபொருள்-புனைதயல்
உற்றவர்க்கு-எடுத்தவர்க்கு.
பெற்றவர்க்கு-கொண்டவர்
களுக்கு.
உறுதி-உரித்து.
பேரிருட்பக்கம்-கிருட்டின
பட்சம், அமரபட்சம்.
அழல்சேர்குட்டம் – கார்த்
திகை பரணி.

99 கோத்தொழில்-அரசசேவ
கம்.
மன்றிலும்-வெளியிலும்.
மறுகிலும்-தெருக்களிலும்.

101 ஓப்பியும்-ஓட்டியும்.
கடிந்தும்-வெருட்டியும்.
உருத்தகாலை – மூண்ட
போது.

102 இறம்பூது-அதிசயம்.
தொண்டகம்-குறிஞ்சிநிலப்
பறை.
தொடுமின்-வாசியுங்கள்.
கோடு-கொம்பு; ஓர் வாத்
தியம்.

பக்கம்.

கொடுமணி-ஓசைகழிதான மணி.

செந்தில்-திருச்செந்தூர்.

செங்கோடு — திருச்செங் கோடு.

வெண்குன்று-சுவாமிமலை.

ஏரகம்-திருவேரகம்.

பௌவம்-கடல்.

சூர்மா-சூரனெனியமாமரம்.

பிணிமுகம்-மயில்.

விசும்பிற்கோன்-இந்திரன்

103 அறுவர் - கார்த்திகையார் அறுவர்.

திகிரி-மலை.

கோலவுணன் - சூழவருஞ் அவுணன்.

குருகுபெயர்க் குன்றம்-கிரவுஞ்சகிரி.

உடம்பிடி-வேல்.

கடம்பூண் - கடம்பூணல், முறைமையை மேற் கொள்ளல்.

104 மறுதாவு-மீட்சி.

அரியணை-சிம்மாசனம்.

கிமிதிகன்-சோதிடன்.

105 மஞ்சு-மேகம்.

நாகம்-சாடுன்னை.

நிலகம்-மஞ்சாடிமரம்.

ஆரம்-சந்தனமரம்.

கொடிச்சியர்-குறத்தியர்.

பக்கம்

மது-தேன்.

சிந்துரக்கட்டி - சிவப்புக் கட்டி.

அஞ்சனத்திரள் - கருமை யுருண்டை.

அரிதாரம்-மஞ்சட்கட்டி.

106 கறிவல்லி.முளகுக்கொடி.

கூவைதாறு - கூவைக்கிழங் கின் தோறு.

கவலை-ஓர்கொடி.

பைங்கொடிப்படலை - பச் சிலைமாலை.

காயம்-வெள்ளைன்னி.

அணங்கு-குட்டி.

அரியின் குருளை - சிங்கக் குட்டி.

வாள்வரி-புலி.

பறழ்-குட்டி.

கரிக்களபம்-யானைக்குட்டி.

குடாவடிஉளியம்-பின்னங் காடி. (குடாவடி-வளை ந்த அடிகளையுடையது)

வரையாடு வருடை - மலை யிற் பாய்ந்து விளையா டும் வருடைமான்.

மறி-குட்டி.

காசறைக்கரு - கஸ்தூரிக் குட்டி.

கலுழம்-மரி.

மஞ்ஞை-மயில்.

நாவி-கஸ்தூரி மிருகம்.

107 பீடிகை மறுகு - வணிகர் தெரு.

பக்கம்.

107 யாப்புறவில்லை -பொருத்தமில்லை.

சினையலர் வேம்பன்-பாண்டியன்.

108 ஈனோர்-இங்குள்ளோர்.

109 பிழையுயிர் எய்தின்-மக்கள் யாதானும் ஒன்றால் வருந்தின்.

111 நிறை-காணிக்கை.

112 கடற்கடம்பெறிந்த கடும்போர் வார்த்தை-கடல் நடுவிலுள்ள தீவிற்குக் கப்பற் படையுடன் சென்று, ஆங்கு வாழ்ந்த பகைவரை வென்று, அவர்தம் காவல் மரமாகிய கடம்பை வெட்டிய செய்தி.

விடர்ச்சிலை பொறித்த-இமயமலையில் வில்முத்திரையைப் பொறித்த. (வில்முத்திரை சேரர்க்குரியது).

தோட்டுணை-மனைவியர்.

அரிமான்-சிங்கம்.

113 ஐம்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர், எண்பேராயம்-அமைச்சர், கருமகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், குதிரைவீரர், யானைவீரர்.

பக்கம்.

கருமவினைஞர் - தேசத்தின் ஆட்சியை நடாத்துவோர்.

கணக்கியல் வினைஞர்-தேசத்தின் வரி வருவாய்களைக் கவனிக்கும் அதிகாரிகள்.

தருமவினைஞர் - நாட்டின் அறங்களைப் பாதுகாப்போர்.

தந்திரவினைஞர் - போர்த் தலைமை வகிப்போர்.

114 செஞ்சடைக் கடவுள்-சிவபெருமான்.

115 குயிலுவர்-வாத்தியக்காரர்.

நகைவேழம்பர் . நகை விளைத்து மகிழ்ச்செய்வோர் (நகை-சிரிப்பு)

மரக்கலம்-படகு.

117 மகார்-மைந்தர்.

வாகைத்தோடு - வெற்றிக் கடையாளமாகக்கொடுக்கும் பொற்பூ.

119 வான்றுயர்-பெருந்துயர்.

120 வஞ்சி-சேரர் தலைநகர்.

122 கூடியகோலம் - கொண்ட கோலம்.

கேள்வி நல்லுயிர்-கேள்வியளவேயான நல்லுயிர்.

வலைந்து-அளவிட்டு.

123 வேல்விக்கிழத்தி - தேவி வேண்மாள்.

பக்கம்.

123 பெருங்கணி-சோதிடன்.

124 வஞ்சினம் சூள் : சபதம்.
வினியார்-நீங்கார்.

125 கோவேந்தன் -பாண்டியன்
நெடுஞ்செழியன்.
மலையரையன் - சேரன்
செங்குட்டுவன்.
மடப்பாவை-கண்ணகியுரு.

126 ஓங்காரணம்-உயர்ந்த மதில்.
தூங்கெயில் - வானிற் சஞ்
சரிக்கும் மதில்
வீவு-மரணம்.

127 ஆடகமாடம் - திருவஞ்ச
புரம்.

128 போற்றுறொழுக்கு - கூடா
வொழுக்கம்.
ஊர்க்குறுமாக்கள்-ஊரார்.
(குறுமாக்கள் - அறி
விலாச் சிறியோர்)

129 பொற்படி-பொன்னுலகம்.
பற்றுவழி-பற்றுள்ளவிடம்.
ஆன்ஏறு ஊர்ந்தோன்-சிவ
பெருமான். (ஆன்ஏறு
ரிஷபம்)
நிறந்தோய்படிவம் - சிறந்
தோர் தரிசனம்.

131 திருப்பொறி-இலக்கணம்.
செல்லல்-துன்பம்.

பக்கம்.

பகல்செல்வாயில் - திருக்
குணவாயில். இது,
வஞ்சிநகரின் கீழ்த்திசை
யிலுள்ளதோர் ஊர்.
படியோர்-முனிவர்.
அந்தமில் இன்பத்து-வீட்
டுலக இன்பத்தில்.

132 பரிவு-துன்பம்.
புறஞ்சொற் போற்றுமின்-
புறங்கூறுதலைப்படிகாத்துக்
கொள்ளுங்கள்.
பொய்க்கரி-பொய்ச்சாட்சி.
பொருள்மொழி - மெய்
வாதனை.
அறவோர்-நல்லோர்.
பிழையுயிர் ஓம்புமின்-வருந்
தும் உயிரைப் பேணுங்
கள்.
அறமனை-மனையறம்
வெள்ளைக்கோட்டி - வீண்
பேச்சுக் கூட்டம்.
வரையாது-விலைகாது.
ஒல்லுவது ஒழியாது-இயலு
மதனைக் கைவிடாது.
தேஎத்துக்கு-தேயத்துக்கு
ஞாலம்- உலகம்.

அரும்பொருள் விளக்கம்
முற்றிற்று.

P. K. Rama Iyar and Co., Printers, Madras

APPROVED BY THE
MADRAS AND CEYLON TEXT-BOOK
COMMITTEE.